# ஆண்டறிக்கை
# 2019



වැවිලි අමාත්‍යාංශය
பெருந்தோட்ட அமைச்சு
Ministry of Plantation

සී/ස හලාවත වැවිලි සමාගම
சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்
CHILAW PLANTATIONS LTD

# உள்ளடக்கம்


| | பக்க இல. |
|---|---|
| துாரநோக்கு மற்றும் பணிக்கூற்று | 02 |
| நிதிசார் முக்கிய தகவல்கள் | 03 - 04 |
| தலைவரின் மீளாய்வு | 05 |
| பணிப்பாளர் சபை | 06 - 09 |
| சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் | 09 |
| முகாமைத்துவ மீளாய்வு | 10 - 21 |
| நிதி மீளாய்வு | 22 - 26 |
| நிறுவனத்தின் ஆளுமை | 27 |
| அபாய முகாமைத்துவம் | 28 - 29 |
| கணக்காய்வு குழு அறிக்கை | 30 |


## நிதி அறிக்கைகள்


| | |
|---|---|
| பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை | 31 - 33 |
| பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று. | 34 |
| கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கை | 35 - 43 |
| முற்றடக்கிய வருமானக் கூற்று | 44 |
| நிதிநிலமைக் கூற்று | 45 |
| உரிமையாண்மை மாற்றல் கூற்று | 46 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 47 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 48 - 82 |
| பத்து ஆண்டுச் சுருக்கம் | 83 |
| வருடாந்த பொதுக்கூட்டத்துக்கான அறிவித்தல் | 84 |
| பெறுகை (Proxy) படிவம் | 85 |
| நிறுவனத்தின் தகவல்கள் | அட்டையின் உட்பக்கத்தில் |



## தூரநோக்கு

தென்னை உற்பத்தியின் மூலம் நிலைபெறுதகு அபிவிருத்தியின் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கான ஆகக்கூடிய பங்களிப்பினை வழங்கள்

## பணிக்கூற்று

வரையறுக்கப்பட்ட வளங்களின் பயன்பாட்டினை பயனுள்ள மற்றும் திறமையான முறையில் பயன்படுத்துவதன் மூலம் தென்னை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை நிலையான அபிவிருத்தி அடையச்செய்வதும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மூலம் பொதுமக்கள் மற்றும் ஊழியர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல்.

## பெறுமதிகள்

| | |
|---|---|
| நேர்மை | கூட்டு முயற்சி |
| தொடர்தண்மை | அதிகாரமளித்தல் |
| வெளிப்படைதன்மை | புதுமையான |
| தலைமைத்துவம் | தொழில்முறை |

பொறுப்பு மற்றும் பொறுப்புகூறல்

# நிதிச் சிறப்பம்சங்கள்

| | 2019 | 2018 | வேறுபாடு % |
|---|---|---|---|
| தென்னை உற்பத்தி (தேங்காய்கள்) "000 | 14,994 | 8,132 | 84 |
| **சுருக்கப் பெறுபேறு** | ரூபா.000 | ரூபா.000 | % |
| வருமானம் | 445,502 | 350,022 | 27 |
| மொத்த இலாபம் | 89,086 | (208) | 42,930 |
| வரி வட்டிக்கு முன் இலாபம் | 89,951 | (14,529) | 719 |
| வரிக்கு முன் இலாபம் | 60,908 | (35,179) | 273 |
| வரிக்கு பின் இலாபம் | 49,440 | (36,642) | 235 |
| மொத்த ஒதுக்குகள் | 747,823 | 708,382 | 6 |
| தேக்கு (Timber) மர ஒதுக்குகள் | 130,655 | 95,398 | 37 |
| திரைசேரிக்கான மொத்த பங்கிலாப செலுத்தல்கள் (1992-2018) | 466,650 | 456,650 | 2 |
| **நிதி நிலமைகள்** | | | |
| நடை முறை அல்லாத சொத்துக்கள் | 1,178,237 | 1,120,859 | 5 |
| முதிர்ந்த / முதிர்வுறாத பெருந்தோட்டங்கள் | 917,169 | 870,102 | 5 |
| நடைமுறை சொத்துக்கள் | 234,091 | 184,466 | 27 |
| இறுப்புக்கள் | 67,383 | 56,610 | 19 |
| குறுங்கால முதலீடுகள் (நிலையான வைப்புக்கள்) | 105,000 | 80,625 | 30 |
| மொத்த சொத்துக்கள் | 1,412,328 | 1,305,325 | 8 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 157,011 | 107,101 | 47 |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 307,494 | 289,841 | 6 |
| கூறப்பட்ட மூலதனம் | 200,000 | 200,000 | - |
| பங்குதாரர்களின் நிதிகள் | 947,823 | 908,382 | 4 |
| **நிதிக் குறிகாட்டிகள்** | தடவைகள்/% | தடவைகள்/% | வேறுபாடு% |
| நடைமுறை வீதம் (தடவைகள்) | 1.49 | 1.72 | (13) |
| விரைவு வீதம் (தடவைகள்) | 1.06 | 1.19 | (11) |
| மொத்த இலாப வீதம் (%) | 20 | (0.06) | 33,751 |
| பங்கொன்றுக்கான உழைப்பு (ரூபா.) | 2.37 | (1.62) | 246 |
| சராசரி உரிமையாண்மை மீதான (ROE) திரும்பல்கள் - % | 5.33 | (3.95) | 235 |
| மூலதன முதலீட்டின் மீதான (ROCE) திரும்பல்கள் - % | 7.17 | 1.21 | 691 |
| கடன் வீதம் | 0.33 | 0.30 | 8 |
| பங்காளர் நிதி வீதம் % | 67.11 | 69.59 | (4) |
| வட்டி உள்ளடக்கம் (தடவைகள்) | 2.26 | (0.41) | 651 |


வருமானம்
ரூபா. `000`
500,000
400,000
300,000
200,000
100,000
445,502
350,022
2019
2018


மொத்த இலாபம்
ரூபா. `000`
100,000
80,000
60,000
40,000
20,000
89,086
(208)
2019
2018


வரிக்கு முன் இலாபம்
ரூபா. `000`
80,000
60,000
40,000
20,000
-
(20,000)
(40,000)
60,908
(35,179)
2019
2018


மொத்த இலாப வீதம்
%
20%
15%
10%
5%
0%
-5%
20%
-0.06%
2019
2018


சொத்து அடிப்படை
ரூபா. `000`
1,450,000
1,400,000
1,350,000
1,300,000
1,250,000
1,412,328
1,305,325
2019
2018


பங்காளர் நிதி
ரூபா. `000`
950,000
940,000
930,000
920,000
910,000
900,000
890,000
880,000
947,823
908,382
2019
2018


குறுங்கால முதலீடு
ரூபா. `000`
120,000
100,000
80,000
60,000
40,000
20,000
105,000
80.625
2019
2018


பங்கொன்றுக்கான உழைப்பு
ரூபா. `000`
3.00
2.00
1.00
-
(1.00)
(2.00)
2.37
(1.62)
2019
2018


ROCE
%
8
6
4
2
0
-2
7.17
-1.21
2019
2018

## தலைவர் / பி.நி.அ. இன் செய்தி

புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் / பிரதான நிறைவேற்று அலுவலர் என்ற வகையில் 2019 ஆம் ஆண்டுக்கான நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பில் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் சகல உரிமையாளர்களுக்கு எனது அவதானிப்பை மிக மகிழ்ச்சியுடன் கீழே குறிப்பிடுகின்றேன். ஒப்பீட்டு ரீதியில் குறைவான செயலாற்றுகை வருடமான 2018 ஆம் ஆண்டினைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு சவால் மிகு ஆண்டாக இருந்தது. நிறுவனமானது மீளவும் தனது பணிகளை உரிய முறையில் செயற்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு 2019 ஆம் ஆண்டை இலாபகரமான ஆண்டாக மாற்றியமைப்பதற்கு வரையறுத்த சிபாலம் பெருந்தோட்ட நிறுவனம் தீர்மானித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் காணப்பட்ட சாதகமான காலநிலை குறிப்பாக தெங்கு உற்பத்தி தொடர்பாக விசேடமாக 2019 ஆம் ஆண்டில் உதவி புரிந்தது.

**தெங்கு செயலாற்றுகை**

சகல எட்டு பெருந்தோட்டங்களில் அதிகரிப்பொன்றை பதிவு செய்து 2019 ஆம் ஆண்டில் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் 14,993,952 தேங்காய் உற்பத்தியை பதிவு செய்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இது குறிப்பிடத்தகு அடைவொன்றாக இருந்ததுடன் 84 சதவீத தேங்காய் உற்பத்தியை பதிவு செய்துள்ளது. எவ்வாறாயினும், ஆண்டின் பிற்பகுதியின் போது தேங்காயின் விலை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தமையானது செயலாற்றுகைக்கு தடையாக அமைந்ததுடன் உயர் தேங்காய் உற்பத்தி பதிவாகியமை நிலையில் இலாபம் குறைவடைவதற்கு வழிவகுத்தது. தேங்காய் ஒன்றின் நிகர சராசரி விற்பனை விலையானது ரூ. 25.00 வரை வீழ்ச்சியடைந்ததுடன் இந்த விலையானது கடந்த 8 வருடங்களில் மிகக் குறைவான விலையாகவும் காணப்படுகின்றது.

**மரமுந்திரிகை**

2019 ஆம் ஆண்டில் தம்பன்னி மற்றும் மங்களஎலிய பிரதேச தோட்டங்களின் ஒருங்கிணைப்பு கலைக்கப்பட்டமையின் பெறுபேறாக, 152 மெற்றிக் தொன் மரமுந்திரிகை உற்பத்தியை பதிவு செய்து வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் மரமுந்திரிகை உற்பத்தியில் உயர் விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமை கிடைத்தது. பொருத்தமான மேற்பார்வை மற்றும் சிறந்த விவசாய செயன்முறைகளை இணைத்து மரமுந்திரிகையை பாதுகாப்பதற்கான நெருக்கமான பாதுகாப்பு முன்னெடுப்புக்கள் இந்த அடைவுக்கு பிரதான காரணங்களாக அமைந்தன. கள மற்றும் பயிர்ச் செய்கைச் செயன்முறைகளில் மேலும் முன்னேற்றங்களுடன் 2020 ஆம் ஆண்டை சிறந்த ஆண்டாக ஆக்குவதற்கு நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம். உள்நாட்டுச் சந்தையில் பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை உற்பத்திகள் அதிகமான கேள்வியை உருவாக்கியிருப்பதுடன் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி இந்த தேவைப்பாடுகளை நிறைவு செய்து கொள்வதற்கு முழுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

**மழைநீர் பயிர்ச் செய்கை**

பெருந்தோட்ட நிறுவனம் என்ற வகையில், அனேகமான தோட்டங்கள் நாட்டின் உலர் வலயப் பிரதேசங்களில் அமைந்துள்ளதுடன் எமது தோட்டங்களில் நீர் கால அட்டவணைகளை பராமரிப்பதன் முக்கியத்துவத்தையும் முகாமை புரிந்து வைத்துள்ளது. கிடைக்கக் கூடிய உச்ச மழைநீரைக் கொண்டு பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கும் எமது தோட்டங்களில் நிலக் கீழ் நீர் அட்டவணைகள் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கும் எமது தோட்டங்களில் தற்பொழுதுள்ள நீர் நிலைகளைப் பயன்படுத்தி புதுமைகளை மேற்கொள்வதற்கும் நாங்கள் பணிகளை ஆரம்பித்துள்ளோம், இந்த முயற்சியானது எதிர்வரும் வருடங்களில் பயன்களை வழங்கும்.

**நீர்ப்பாசன முறைமைகள்**

எதிர்காலத்தில் பெருந்தோட்டங்களாக இருக்கப் போகின்ற தற்பொழுது கம்பனியில் காணப்படுகின்ற இளம் தென்னங் கண்டு பெருந்தோட்டங்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்கான சாத்தியங்களை பரிசோதிப்பதற்கு சீனுகல பெருந்தோட்டத்தில் குழாய் நீர்பாசன பரீட்சார்த்த முறைமையொன்று தாபிக்கப்பட்டிருந்தது. இந்த முறைமையானது நம்பிக்கைதரும் பெறுபேறுகளைக் காட்டியுள்ளதுடன் எதிர் வரும் காலங்களில் மேலதிக விஸ்தரிப்புக்களைச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல்**

தேங்காய் எண்ணை, மரமுந்திரிகை, தயிர் மற்றும் சுவையூட்டப்பட்ட தயிர் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் எமது விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் வாகனங்களின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இந்த வசதிகளை விஸ்தரிப்புச் செய்யும் முகமாக, 2019 ஆம் ஆண்டில் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் தலைமை அலுவலக வளாகத்தில் விற்பனை நிலையமொன்றை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் புதிய உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கு இந்தப் பிரதேசத்தில் பிரபல்யம் அடைந்த விற்பனை நிலையமாக உருவெடுத்துள்ளது.

**நலன்புரி**

வரை. சிலாபம் பெருந்தோட்டக் நிறுவனம் ஊழியர்களுக்கு பல்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளதுடன் இனங் காணப்பட்ட பயிற்சித் தேவைகளை நிறைவு செய்வதற்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. ஆண்டின் போது ஊழியர்களை ஊக்கப்படுத்துவதற்கு வருடாந்த ஒன்று கூடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களுடைய செயலாற்றுகைகள் மதிப்பீடு செய்யப்பட்டு விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

**முன்னோக்கிய பயணம்**

நிலைபெறுதகு நிலையில் தொழிற்படுவதற்கு பன்முகப்படுத்தலின் முக்கியத்துவத்தை வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி புரிந்துள்ளதுடன் இத் துறையில் போட்டியாளராக இருப்பதற்கும் பல்வேறுபட்ட வருமானங்களை உருவாக்குவதற்கும் பல முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளன. கூட்டுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள பரந்த அளவிலான பன்முகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்கு இது உதவி புரியும். கருதத்தகு வழியில் தேசியப் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யும் அதே வேளை இலங்கையில் பெருந்தோட்டக் கைத்தொழில் துறையில் முன்னிலையான மற்றும் முக்கியமான பாத்திரத்தை வகிப்பதற்கு இது வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியை உருவாக்கும்.

**பாராட்டுத் தெரிவித்தல்**

வரையறுத்த பெருந்தோட்ட நிறுவனத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சகல தொழிற்பாடுகளிலும் வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பையும் வழங்கிய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, பணிப்பாளர் சபை, செயலாளர் மற்றும் அமைச்சின் பதவியணிக்கு நன்றி தெரிவிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கின்றேன். மீளாய்வு வருடத்தின் போது வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் இந்தப் பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு அயராத முயற்சிகளை வழங்கும் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனததின் பொது முகாமையாளருக்கும் அதன் அர்ப்பணிப்பான பதவியணிக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், எமது வெற்றிக்கு பல்வேறு வழிகளில் உதவி புரிந்த கொள்வனவாளர்கள், தரகர்கள், விநியோகத்தர்கள், வங்கியாளர் ஒன்றியங்கள் மற்றும் சமூகத்திற்கும் நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தலைவர் / பி.நி.அ.
வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

# பனிப்பாளர் சபை



**திரு. ஜூட் ரூகாந்த பெரேரா**
(B.A, M.A., H.S.D.)
தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி



**திரு. எச்.ஜீ. சுமனசிங்க**
பனிப்பாளர்

திரு. ஜூட் ரூகாந்த பெரேரா அவர்கள் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரியாக 01.01.2020 அன்று நியமிக்கப்பட்டார்.

திரு. ஜூட் அவர்கள் கௌரவமிக்க வழக்கறிஞர் குடும்பத்தில் இருந்து வந்தவராவார். இவர் கொழும்பு பல்கலைக்கழகம், அக்வைனாஸ் பல்கலைக்கழக கல்லூரி மற்றும் களனிய பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றுள்ளார். இவர் கலைப்பிரிவில் இளமானி பட்டமும், Master பட்டமும் பெற்றுள்ளார். இவர் கள சேவைகளுக்காக அமெரிக்காவில் புலமைபரிசில் வெற்றுள்ளார்.

திரு. ஜூட் ரூகாந்த பெரேரா அவர்கள் கேகாலை மாவட்டத்தில் முன்னால் மேயராக காணப்பட்டுள்ளதோடு கேகாலை மாவட்ட நகர சபையை இலங்கையில் சிறந்த நகர சபையாக உயர்த்த முடிந்துள்ளது. கடந்த ஆண்டுகளில் பல அமைச்சுக்களில் ஒருங்கிணைப்பு செயலாளராகவும், ஊடக செயலாளராகவும் பணியாற்றிய அவர் மாநிலத் துறை செயற்பாடுகளிலும் பங்குவகித்துள்ளார்.

2009-2015 காலப்பகுதிகளில் இவர் குருணாகலை பெருந்தோட்ட நிறுவனத்தின் செயற்பாட்டு பனிப்பாளராக கடமையாற்றியுள்ளதோடு, அங்கு அவர் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி குருணாகல பெருந்தோட்ட நிறுவனம் உயர் இலாபங்களை அடைந்துகொள்ள வழிவகுத்துள்ளார்.

மேலும் இவர் புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ குழு அங்கத்துவராகவும் கடமைபுரிந்துள்ளார். திரு. ஜூட் ரூகாந்த பெரேரா அவர்கள் ஈர்க்கக்கூடிய முகாமைத்துவ திறன் மற்றும் சிறந்த தலைமைத்துவ திறன்களில் சிறந்த வெளிக்காட்டல்ககை அரச மற்றும் தனியார் துறைகளில் வெளிக்காட்டியுள்ளார்.

இக்குறுகிய காலகட்டத்தில் (9 மாதங்கள்) இவரது தலைமைத்துவத்தின் கீழ் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனமானது 2020 ஜூலை இறுதியில் வரலாற்றின் மிக உயர்ந்த இலாபத்தை ஈட்டியுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிறுவனமானது 400மூ இலாப அதிகரிப்பை காட்டுகின்றது. அத்தோடு திரு. ஜூட் ரூகாந்த பெரேரா அவர்கள் எதிர் வரும் ஆண்டுகளுக்காக புதிய கருத்திட்டங்களை திட்டமிட்டுள்ளதோடு சர்வதேச சந்தையில் பெறுமதி சேர்ககப்பட்ட பல்வகைப்படுத்தப்பட்ட உற்பத்திகளை விரிவுடுத்தும் நோக்குடன் செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இவர். சிறந்த படிப்பறிவுள்ள, தோட்டத்துறை குறித்த சிறந்த அறிவுள்ள மற்றும் சிறந்த மேலாண்மை மற்றும் தலைமைத்துவ திறன்களை கொண்ட அனுபவம் வாய்ந்த நபர் ஆவார்.

திரு. எச்.ஜீ. சுமனசிங்க அவர்கள் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபைக்கு 05.02.2020 அன்று திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் பனிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையில் பல அரச நிறுவனங்களில் பனிப்பாளர் சபை உறுப்பினராக கடமையாற்றியுள்ளார்

தற்போது இவர் நிதி அமைச்சின் மேலதிக செயலாளராக பணிபுரிகின்றார். மேலும் இவர் இலங்கை நிர்வாக சேவையில் விஷேட தர அலுவலராக உள்ளார். அரச சேவையில் 25 வருட கால அநுபவம் உள்ளவர் ஆவார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளமானி பட்டமும், தெற்கு அவுஸ்திரேலியாவின் / பைன்டர்ஸ் பல்கலைக்கழகத்டதில் பொது கொள்கைகள் தொடர்பான பட்டமும் பெற்றுள்ளார்



**திருமதி. அருணி எஸ். ரணசிங்க**
பனிப்பாளர்

திருமதி. அருணி எஸ். ரணசிங்க அவர்கள் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபைக்கு 14.02.2020 அன்று பெருந்தோட்ட கைத்தொழல் அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் பனிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையில் பல அரச நிறுவனங்களில் பனிப்பாளர் சபை உறுப்பினராக கடமையாற்றியுள்ளார்.

தற்போது இவர் பெருந்தோட்ட கைத்தொழல் அமைச்சின் மேலதிக செயலாளராக (நிர்வாகம்) பணிபுரிகின்றார். மேலும் இவர் இலங்கை நிர்வாக சேவையில் விஷேட தர அலுவலராக உள்ளார். அரச சேவையில் 22 வருட கால அநுபவம் உள்ளவர் ஆவார்.

இவர் கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளமானி (சிறப்பு) பட்டமும், இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் பொது நிர்வாகம் தொடர்பான பட்டமும் பெற்றுள்ளார்



**திரு. கீர்த்தி பத்திரனகே**
பனிப்பாளர்

திரு. கீர்த்தி பத்திரனகே அவர்கள் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபைக்கு 05.02.2020 அன்று பனிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். தற்போது இவர் செவனகல வில் உள்ள இலங்கை சீனி தொழிற்சாலையில் பிரதான செயற்பாட்டு அதிகாரியாக கடமையாற்றுகின்றார்.

2013 முதல் 2015 வரையான காலத்தில் இவர் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் செயற்பாட்டு பனிப்பாளராக கடமையாற்றியதோடு, ஹோட்டல் நிர்வாக துறையில் அனுபவம் கொண்டவராகவும் காணப்பட்டார்.



**திரு. நலிந்த கசுன் ராஜசிங்க**
பனிப்பாளர்

திரு. நலிந்த கசுன் ராஜசிங்க அவர்கள் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபைக்கு 05.02.2020 அன்று பனிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையில் பல அரச நிறுவனங்களில் பனிப்பாளர் சபை உறுப்பினராக கடமையாற்றியுள்ளார்.

தற்போது இவர் JCT Limited SLPA, யில் செயற்பாடுகள் மற்றும் வணிக மேம்பாட்டுத் தலைவராக கடமையாற்றுகின்றார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக இளமானி (சிறப்பு) பட்டமும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தில் வியாபார நிர்வாக (Master) பட்டமும் மற்றும் கொழும்பு பல்கலைகழகத்தில் PHD பட்டமும் பெற்றுள்ளார்



**Lt. Col. அஜந்த முனமலே**
பனிப்பாளர்

05.02.2020 அன்று வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபை உறுப்பினராக பொறுப்பேற்றார்

கேகாலை பெருந்தோட்ட நிறுவனத்தில் குழு முகாமையாளராக பனியாற்றியுள்ளார். இவர் பெருந்தோட்ட துறையில் 39 வருடகால அனுபவம் கொண்டவராவார்.

இவர் இந்தியாவில் பட்டய நிதி பகுப்பாய்வு நிறுவனத்தில் வணிக நிர்வாகத்துறையில் (Master) பட்டம் பெற்றுள்ளார். அத்தோடு மனித வளம் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவகத்தில் பல தேசிய மற்றும் சர்வதேச டிப்ளோமா பட்டங்களும் பெற்றுள்ளார்.

இவர் இலங்கை ராணுவத்தில் ஆணையிடப்பட்ட அதிகாரியான தன்னார்வப் படையில் லுதினல் (Lieutenant Colonel) கர்ணல் பதவியில் உள்ளார். மற்றும் இலங்கை தனிநபர் மேலாண்மை நிறுவனத்தின் உறுப்பினராகவும் உள்ளார்



**திரு. டப்.டப.ஏ.என்.டீ.ஏ பிரனாந்து**
பனிப்பாளர்

திரு. டப்.டப.ஏ.நிரோஷ் பிரனாந்து அவர்கள் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபைக்கு 05.02.2020 அன்று பனிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். ஒரு பாரம்பரிய வணிக குடும்பத்தை சேர்ந்த பல்துறை தொழில் அதிபராக காணப்படுகின்றார்

இவர் இலங்கையில் பல அரச நிறுவனங்களில் பனிப்பாளர் சபை உறுப்பினராக கடமையாற்றியுள்ளார்.



**திரு. ஐ.எஸ்.ஜே.பீ குணவர்தன**
பனிப்பாளர்

திரு. ஐ.எஸ்.ஜே.பீ குணவர்தன அவர்கள் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபைக்கு 05.02.2020 அன்று பனிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இவர் மக்கள் வங்கியில் தகுதிமிக்க வங்கி அலுவலராகவும் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளராகவும் காணப்படுகின்றார். அவர் தனது தொழில்வாழ்க்கையின் வெற்றிக்காக வங்கி தேர்வுகளை முழுமையாக முடித்துள்ளார்.

## முன்னைய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| திரு. வீ.கே.சீ ஹேரத் (14.07.2016 முதல் 31.12.2019) | - | தலைவர் |
| திரு. எம்.கே.பீ. செனவிரத்ன (08.05.2015 முதல் 05.02.2020 வரை) | - | நிறைவேற்று அதிகாரி |
| திரு. பீ.சீ விஜயவர்தன (28.02.2019 முதல் 05.02.2020 வரை) | - | செயற்பாட்டு அதிகாரி |
| திரு. பீ.பீ.எஸ்.சீ நொனிஸ் (05.09.2016 முதல் 03.02.2020 வரை) | - | பணிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி |
| திரு. ஏ. லக்கதாஸ் (19.05.2016 முதல் 28.02.2019 வரை) | - | பணிப்பாளர் |
| திருமதி. அருனி எஸ் ரனசிங்ஹ (28.02.2019 முதல் 05.02.2020 வரை) | - | பணிப்பாளர் / அமைச்சு பிரதிநிதி |
| திரு. ஜே.பீ களுஆரச்சி (31.01.2019 முதல் 05.02.2020 வரை) | - | பணிப்பாளர் |
| திரு. ஆனந்த புஷ்பகுமார (19.03.2019 முதல் 05.02.2020 வரை) | - | பணிப்பாளர் |
| திரு. எச.எம்.என்.சீ ஹேரத் (20.03.2015 முதல் 31.01.2019 வரை) | - | பணிப்பாளர் |
| டாக்டர். எஸ். விஜேகுணவர்தன (24.07.2018 முதல் 28.02.2019 வரை) | - | பணிப்பாளர் |

## சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

### பிரதான அலுவலகம்

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. ஆர்.டப்.எம்.ஜே.எஸ்.ஆர். பெரேரா | - | தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி |
| 02. | திரு. ஏ.ஜீ.ஆர்.எம்.எம். ரணவீர | - | பொது முகாமையாளர் |
| 03. | திரு. பீ. ஹெட்டிஆரச்சி | - | உதவி பொது முகாமையாளர் |
| 04. | திரு. ஆர்.எம்.ஆர்.பீ ரத்நாயக்க | - | சிரேஷ்ட கணக்காளர் |
| 05. | திரு. எச்.பீ.எம்.டபிள்யு ஹேமசந்திர | - | பிரதம உள்ளக கணக்காய்வாளர் |
| 06. | திரு. ஏ.ஏ அஷோக ஆனந்த | - | தோட்ட முகாமையாளர் |
| 07. | திரு. டபிள்யு.கே பிரதீப் | - | தொ. நுட்ப முகாமை ரூ அபிவிருத்தி |
| 08. | திரு. ஏ.எம்.டீ.எச்.பீ அத்தபத்து | - | மனிதவள முகாமையாளர் / நிர்வாகம் |
| 09. | திரு ஏ.என்.ஏ.எஸ் கருணாதுங்க | - | விற்பனை முகாமையாளர் |
| 10. | திருவாட்டி. பீ.என்.என் குணஸீல | - | திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு முகாமையாளர் |

### தோட்ட அத்தியட்சகர்கள்

| | | | |
|---|---|---|---|
| 11. | திரு. ஜே.எச். பெர்ணான்டோ | - | அத்தியட்சகர், பளுகஸ்வெவ பிரதேச தோட்டங்கள் |
| 12. | திரு. எம்.ஜீ.சீ. டயஸ் | - | அத்தியட்சகர், திவுலபிட்டிய பிரதேச தோட்டங்கள் |
| 13. | திரு. டீ.எம்.ஜீ.ஏ. திசாநாயக்க | - | அத்தியட்சகர், மாதம்பை பிரதேச தோட்டங்கள் |
| 14. | திரு. பி.எம்.யு.பி பஸ்நாயக்க | - | அத்தியட்சகர், சிலாபம் பிரதேச தோட்டங்கள் |
| 15. | திரு. ஏ.எம்.டீ. குணதிலக | - | அத்தியட்சகர், பிங்கிரிய பிரதேச தோட்டங்கள் |
| 16. | திரு. எச்.டீ.எஸ். பெரேரா | - | அத்தியட்சகர், தம்பபன்னி பிரதேச தோட்டங்கள் |
| 17. | திரு. பீ.ஏ.பீ.டீ தர்மசேன | - | அத்தியட்சகர், மங்கள எளிய பிரதேச தோட்டங்கள் |
| 18. | திரு. கே.ஏ.என்.ஜ கருணாரத்ன | - | அத்தியட்சகர், நிகவரடிய பிரதேச தோட்டங்கள் |

## தோட்டங்களின் அமைவு



AGRO ECOLOGY
LEGEND
Agro Ecological Region Boundary
Agricultural Research Centre/Institute
Agricultural Research Station
Zone Boundary
SCALE 1:1,650,000
தம்பபன்னி பிரதேச தோட்டங்கள் (1008.79 ஹெக்)
மங்கள எளிய தோட்ட பிரதேசங்கள் (816.64 ஹெக்)
பளுகஸ்வெவ தோட்டம் (672.22 ஹெக்)
சிலாபம் பிரதேச தோட்டங்கள் (645.57 ஹெக்)
CPL HO
திவுலபிட்டிய பிரதேச தோட்டங்கள் (424.49 ஹெக்)
நிக்கவெரடிய பிரதேச தோட்டங்கள் (399.92 ஹெக்)
பிரதேச பிங்கிரிய தொட்டங்கள் (1109.74 ஹெக்)
மாதம்பை பிரதேச தோட்டங்கள் (655.86 ஹெக்)

## தோட்டங்கள் பற்றிய தகவல்கள்

| பிரதேச தோட்டங்கள் | பிரிவுகளின் எண்ணிக்கை | ஹெக்டயார்களின் எண்ணிக்கை | பிரதான பயிர் | இடைப் பயிர்கள | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|---|---|---|---|
| பிங்கிரிய பிரதேச தோட்டங்கள் | 11 | 1,109.74 | தென்னை | ரெகன் புருட், கருவா, மரமுந்திரிகை | பிங்கிரிய |
| சிலாப பிரதேச தோட்டங்கள் | 12 | 645.57 | தென்னை | ரெகன் புருட், கருவா, மரமுந்திரிகை, மாங்காய் | பல்லம, ஆராச்சிக்கட்டுவ, ரஸ்நயகபுர |
| திவுலப்பிட்டிய பிரதேச தோட்டங்கள் | 14 | 424.49 | தென்னை | மிளகு, ரம்புண்டான், கருவா | திவுலபிடிய, கடான, வென்னப்புவ |
| மாதப்பே பிரதேச தோட்டங்கள் | 12 | 655.86 | தென்னை | ரெகன் புருட், அன்னாசி, மரமுந்திரிகை | நாத்தாண்டிய, பிங்கிரிய, சிலாபம் உடுபத்தாவ, குளியாப்பிடிய |
| மங்களஎலிய பிரதேச தோட்டங்கள் | 11 | 816.64 | தென்னை | மரமுந்திரிகை | புத்தளம், முந்தல், மஹகுபுக்கடவள |
| நிகவரெட்டிய பிரதேச தோட்டங்கள் | 13 | 399.92 | தென்னை | மரமுந்திரிகை | கொபேய்கனே, பண்டுவஸ்நுவர |
| பளுகஸ்வெவ பிரதேச தோட்டங்கள் | 01 | 672.22 | தென்னை | ரெகன் புருட், மரமுந்திரிகை தென்னை | ஆராச்சிக்கட்டுவ |
| தம்பபன்னி பிரதேச தோட்டங்கள் | 10 | 1,008.79 | தென்னை, மரமுந்திரிகை | மரமுந்திரிகை தென்னை | புத்தளம், வனாத்தவில்லுவ, கல்பிடிய |
| மொத்தம் | **84** | **5,733.23** | | | |

### தொழில்முயற்சிக் கட்டமைப்பு
### விவசாய தொழில்முயற்சி முகாமை

புத்தளம், குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ள 5,733.23 ஹெக்டயார் நிலத்தினை வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி முகாமை செய்வதுடன் இந்தக் காணிகளில் 3,804.94 ஹெக்டயார்களில் தென்னை பயிர் செய்கை செய்யப்பட்டுள்ளத. பிரதான பயிர் என்ற வகையில் தென்னையுடன் இடைப்பயிர்களான மரமுந்திரிகை, மா, ரம்புட்டான், ரகன் புருட் மற்றும் வாசனைத் திரவியங்களான கறுவா மற்றும் மிளகுப் பயிர்ச் செய்கைகளும் கால் நடை வளர்ப்புக்கு மேலதிகமாக பயிரிடப்படுகின்றன. குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ள அனேகமான நிலங்கள் இடை வெப்ப மற்றும் ஈர வலயத்திற்குரியதாக காணப்படுவதுடன் புத்தள மாவட்ட தோட்டங்கள் வரள் வலயத்திற்குரிய பண்புகளைக் கொண்டுள்ளன. இந்த மாவட்டங்களில் அமைந்துள்ள பல்வேறுபட்ட பரப்புக்களைக் கொண்ட 84 தோட்டங்கள் இருப்பதுடன் இந்த தோட்டங்கள் எட்டு பிரதேச தோட்டங்களினால் முகாமை செய்யப்படுகின்றன. மாறுபட்ட விவசாய சூழல் வலயங்களின் காரணமாக அவ்வாறான தோட்டங்களின் உற்பத்தித் திறனில் ஒப்பீட்டு ரீதியில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. மேற்படி சூழ்நிலைகளின் காரணமாக, புத்தள மாவட்டத்தில் அமைந்துள்ள தோட்டங்களின் விளைச்சல் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

## ஆண்டு ரீதியாக தென்னை உற்பத்தி பற்றிய விபரம்

| ஆண்டு | தென்னை அறுவடை (காய்கள்) | வேறுபாடு % | விளைச்சல் தரும் மரங்கள் (எண்ணிக்கை) | வேறுபாடு % | உற்பத்தி திறன் (மரமொன்றுக்கு காய்களின் எண்ணிக்கை | இலங்கை உற்பத்தி (மில்லியன்கள்) | வேறுபாடு % |
|---|---|---|---|---|---|---|---|
| 1992 | 20,782,648 | 0 | 421,875 | - | 49 | 2,296 | - |
| 1993 | 19,145,214 | -8 | 407,512 | -05% | 47 | 2,164 | -06% |
| 1994 | 21,382,314 | +12 | 426,722 | +03% | 50 | 2,622 | +21% |
| 1995 | 22,603,156 | +6 | 441,379 | +04% | 51 | 2,275 | +05% |
| 1996 | 19,336,658 | -14 | 421,716 | -04% | 46 | 2,546 | -08% |
| 1997 | 19,235,974 | -1 | 412,006 | -02% | 47 | 2,630 | +03% |
| 1998 | 18,921,808 | -2 | 415,718 | +01% | 46 | 2,522 | -04% |
| 1999 | 21,348,626 | +13 | 393,360 | -05% | 54 | 2,828 | +12% |
| 2000 | 23,216,882 | +9 | 399,454 | +02% | 58 | 2,396 | +09% |
| 2001 | 21,829,630 | -06 | 395,435 | -01% | 55 | 2,769 | -11% |
| 2002 | 15,031,795 | -31 | 413,465 | +05% | 36 | 2,392 | -14% |
| 2003 | 17,585,652 | +17 | 402,937 | -03% | 44 | 2,562 | +11% |
| 2004 | 18,354,614 | +04 | 401,162 | 00% | 46 | 2,591 | +01% |
| 2005 | 14,391,265 | -22 | 408,006 | +02% | 35 | 2,515 | -03% |
| 2006 | 17,070,324 | +19 | 411,968 | +01% | 41 | 2,785 | +11% |
| 2007 | 17,815,317 | +04 | 395,762 | -04% | 45 | 2,869 | +03% |
| 2008 | 16,280,051 | -09 | 378,333 | -04% | 43 | 2,908 | +01% |
| 2009 | 18,632,247 | +14 | 380,000 | 00% | 49 | 2,762 | -05% |
| 2010 | 18,256,007 | -2 | 340,586 | -10% | 54 | 2,317 | -16% |
| 2011 | 14,527,770 | -20 | 353,113 | +04% | 41 | 2,808 | +09% |
| 2012 | 15,807,753 | +09 | 312,456 | -12% | 51 | 2,940 | +05% |
| 2013 | 09,595,275 | -39 | 313,048 | +01% | 31 | 2,513 | -14% |
| 2014 | 12,969,381 | 35 | 283,449 | -9% | 46 | 2,870 | +14 |
| 2015 | 12,517,083 | -3 | 288,951 | 2% | 43 | 3,026 | +5 |
| 2016 | 16,522,290 | 32% | 304,043 | 5% | 54 | 2,845 | -7% |
| 2017 | 11,651,155 | -29% | 282,005 | -7% | 41 | 2,450 | -14% |
| 2018 | 8,132,121 | -30% | 262.517 | -7% | 31 | 2,737 | +10% |
| 2019 | 14,993,952 | 84% | 259,808 | -1% | 58 | 3.106 | -13% |

2019 ஆம் ஆண்டில், மழைவீழ்சியின் சாதகமான மாற்றம் மற்றும் அதன் விநியோகத்தின் காரணமாக வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் ஒப்பீட்டு ரீதியாக முன்னைய வருடத்திலும் பார்க்க உயர் விளைச்சலை அடைந்துள்ளது.

தேங்காய் விளைச்சல் - (காய்கள் ) 1992 ஆம் ஆண்டிலிருந்து




## தென்னைப் பயிர்செய்கையின் கீழான பயிர்கள்

2009 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் விவசாய பயிர்ச் செய்கை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு தென்னையின் கீழான பயிர் செய்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2009 ஆண்டு முடிவில் ஏற்கனவே தாபிக்கப்பட்ட தென்னந் தோட்டங்களுக்குக் கீழான பயிர்ச் செய்கைளை தொடர்ந்து பேணும் வகையில் தென்னங் தோட்டங்களுக்கிடையேயான பயிர் செய்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்கு தென்னையின் கீழான பயிர் செய்கை நிலத்தின் அளவு 814.19 ஹெக்டயார்களாக காணப்படுவதுடன் அதில் 27.22 சதவீத பிரதேசத்தின் தென்னை பயிர் செய்யப்பட்டுள்ளதுடன் தென்னங் கன்று வளர்ச்சிக்கு ரெட் வீவில் அச்சுறுத்தலுக்கு மேலதிகமாக தென்னங் கன்றுகளின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு உலர் மற்றும் இடை மற்றும் ஈர வலய தோட்டங்கள் தொடர்ச்சியான உலர் காலநிலை செல்வாக்குச் செலுத்தியது.

| பிரதேச தோட்டம் | தெங்கு முதிர்ந்த நிலப் பரப்பு (ஹெக்டயார்) | தெங்கு முதிர்வுறாத நிலப் பரப்பு (ஹெக்டயார்) | முதிர்வுறாத சதவீதம் |
|---|---|---|---|
| பிங்கிரிய பிரதேச தோட்டங்கள் | 492.04 | 195.00 | 39.63 |
| சிலாப பிரதேச தோட்டங்கள் | 393.14 | 92.22 | 23.46 |
| திவுலபிட்டிய பிரதேச தோட்டங்கள் | 319.74 | 84.00 | 26.27 |
| மாதம்பை பிரதேச தோட்டங்கள் | 496.95 | 106.7 | 21.47 |
| மங்கள எளிய பிரதேச தோட்டங்கள் | 242.6 | 51.19 | 21.10 |
| நிக்கவரடிய பிரதேச தோட்டங்கள் | 255.91 | 76.96 | 30.07 |
| பளுகஸ்வெ தோட்டம் | 456.16 | 161.00 | 35.29 |
| தம்பபன்னி பிரதேச தோட்டங்கள் | 334.21 | 47.12 | 14.01 |
| **மொத்தம்** | **2,990.75** | **814.19** | **27.22** |

## பயிர் பன்முகப்படுத்தல் மற்றும் கால்நடை வளர்ப்பு

### பயிர் பன்முகப்படுத்தல்

உலர் வலயத்தில் அமைந்துள்ள காணிகளில் மரமுந்திரிகைப் பயிர்ச் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொருத்தமான விவசாய மற்றும் சூழல் காரணிகளின் காரணமாக அனேகமான மரமுந்திரிகைத் தோட்டங்கள் புத்தள மாவட்டத்தில் அமைந்துள்ளன. அவ்வாறான காணிகளின் விஸ்தீரணம் 805..88 ஹெக்டயார்களாக இருப்பதுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது 2019 ஆம் ஆண்டில் உயர் மரமுந்திரிகை விளைச்சல் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவ் விளைச்சல் 151,542 கிலோ கிராம்கள் ஆகும்.

எவ்வாறாயினும், மரமுந்திரிகைக்கு மேலதிகமாக ரம்புட்டான், கறுவா, மிளகு, ரகன்புருட் போன்ற பயிர்கள் உயர் காணிப் பயன்பாட்டை அடைந்து கொள்ளும் நோக்கில் மண் வளம் மற்றும் மழை வீழ்ச்சி போக்கை பயன்படுத்தி தென்னையின் கீழ் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

| தோட்டங்கள் | மர முந்திரிகை (ஹெக்) | முளகு (ஹெக்) | ரம்புட்டான் (ஹெக்) | ட்ராகன் பழம் (ஹெக்) | கருவா (ஹெக்) | அன்னாசி (ஹெக்) | மாங்காய் (ஹெக்) |
|---|---|---|---|---|---|---|---|
| தம்பபன்னி | 399.25 | - | | - | - | - | - |
| மங்கள எளிய | 317.24 | | | - | - | - | - |
| பிங்கிரிய | 20.00 | - | | 4.40 | 0.81 | - | - |
| நிக்கவரடிய | 18.20 | | | - | - | - | - |
| சிலாபம் | 45.12 | - | | - | 1.6 | - | 1.6 |
| மாதம்பை | 6.07 | - | | 3.64 | - | 0.4 | - |
| திவுலபிட்டிய | - | 16.06 | 20.00 | 4.00 | 11.40 | - | - |
| பளுகஸ்வெவ | - | - | | 0.50 | - | - | - |
| மொத்தம் | **805.88** | **16.06** | **20.00** | **12.54** | **13.81** | **0.4** | **1.6** |

**2019 ஆம் ஆண்டுக்கான இடைப் பயிர்களின் இலாபம்**

| தோட்டங்கள் | மர முந்திரிகை (ரூபா) | முளகு (ரூபா) | ரம்புட்டான் (ரூபா) | ட்ராகன் பழம் (ரூபா) | கருவா (ரூபா) | அன்னாசி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| தம்பபன்னி | 32,762,851.50 | - | - | 17,250.00 | - | - |
| மங்கள எளிய | 10,982,267.75 | - | - | - | - | - |
| பிங்கிரிய | 459,840.00 | - | - | 717,720.00 | 157,813.00 | - |
| நிக்கவரடிய | 445,060.00 | - | - | 1,840.00 | - | - |
| சிலாபம் | 801,920.00 | - | - | 13,875.00 | - | - |
| மாதம்பை | - | - | - | 356,182.50 | - | 38,239.50 |
| திவுலபிட்டிய | - | 239,715.00 | 500,000.00 | - | 501,000.00 | - |
| பளுகஸ்வெவ | 665,088.00 | - | - | 82,686.50 | - | - |
| மொத்தம் | **46,117,027.25** | **239,715.00** | **500,000.00** | **1,189,554.00** | **658,813.00** | **38,239.50** |

### கால்நடை வளர்ப்பு

#### எருமை மாட்டு செயற்திட்டம்

பளுகஸ்வெவ தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள எருமை மாட்டு செயற்திட்டத்திலிருந்து பசும் பால் பெறப்படுவதுடன் இப் பால் எருமைத் தயிர் மற்றும் யோகட் போன்ற உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படுவதுடன் இந்த உற்பத்திகள் பழுகஸ்வெவ தோட்ட தலைமையக வளாகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களின் ஊடாக விற்பனை செய்யப்படுகின்றன.

#### செம்மறியாட்டு செயற்திட்டம்

பிங்கிரிய மற்றும் மாதம்பே பிரதேசங்களில் இரண்டு செம்மறியாட்டு செயற்திட்டங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இந்த செயற்திட்டத்தின் ஊடாக பிரதான வருமானமாக ஆட்டு இனப் பெருக்கத்திற்கான ஆடு விற்பனையின் ஊடாக கிடைக்கின்றது. மேலும், தென்னைகளுக்கு இடையேயான இடைப் பயிர்களின் வளர்ச்சிக்கு நிலத்தை வளப்படுத்துவதற்கு செம்மறியாட்டு எரு பயன்படுத்தப்படுகின்றது.







| தோட்டங்கள் | எருமை மாடுகளின் எண்ணிக்கை | செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பளுகஸ்வெவ | 187 | - |
| சிலாபம் | 12 | - |
| திவுலப்பிட்டிய | 43 | |
| மாதப்பே | 2 | 114 |
| பிங்கிரிய | - | 587 |
| மொத்தம் | **244** | **711** |

**நீர்த் தேக்கங்களை திருத்தம் செய்தல்.**

வரட்சிக் காலங்களின் போது நீர் தட்டுப்பாட்டை இழிவுபடுத்துவதற்கு நிலக் கீழ் நீர் மட்டங்களை அதிகரிப்பதற்கு அதிக அளவான மழை நீரை தேக்கி வைத்துக் கொள்வதற்கு இப் பிரதேச தோட்ட நீர்த் தேக்கங்களை திருத்தம் செய்வதற்கு உயர் கவனம் செலுத்தப்படுகின்றது.

எனவே, எட்டு தோட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 9 நீர்த் தேக்கங்களை தோண்டுதல் மற்றும் திருத்தம் செய்யும் செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடானது நீர்த்தேக்கங்களில் அதிக அளவான நீரை சேகரித்து வைத்துக் கொள்வதற்கும் இத் தோட்டங்களில் நுண் வானநிலை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு வழிவகை செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**சூழல் தாக்கம்**

**மழைவீழ்சி.**

தென்னைப் பயிர்ச் செய்கைக்கு வருடாந்த மழைவீழ்ச்சி முக்கியமானதொரு காரணியாக இருப்பதுடன் இந் நிலைமை ஆண்டின் போது தொடர்சியாக அதிகரித்து வந்துள்ளது. இது வேர் கட்டமைப்புக்கு மண் ஈரப்பதன் மற்றும் சாதகமான மண் சூழலை தாபிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது. நீண்ட காலத்திற்கு மண் ஈரப் பதனை பேணிக் கொள்வதற்கு மழை வீழ் வீழ்ச்சியின் சிறந்த விநியோகம் ஒத்துழைப்பு வழங்கும்.

**வெப்பநிலை**

தென்னைப் பூக்களின் மகரந்த செயற்பாட்டுக்கும் காய் உற்பத்திக்கும் சூழல் வெப்ப நிலை மிக முக்கியமாகும். அதிகரித்த மழைவீழ்ச்சி சூழல் மகரந்தச் சேர்க்கை மற்றும் காய் உற்பத்திக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன. உலர் வலயங்களில் அமைந்துள்ள தோட்டங்கள் இந்த காலநிலையினால் பாதிப்பு உள்ளாவதுடன் விளைச்சலும் பாதிப்படைவதற்கு தாக்கம் செலுத்துகின்றது.



### நவீன நீர்ப்பாசன முறைமை

கோடை காலத்தின் போது தென்னங் கன்றுகளுக்குத் தேவையான நீர் மழைவீழ்ச்சி மற்றும் பவுசர்களைப் பயன்படுத்தி விநியோகிக்கப்படும் நீரினால் பூர்த்தி செய்யப்படுகின்றன. தென்னந் தோட்டங்களில் குழாய் நீர் விநியோக முறைகளை தாபிப்பதற்கு சிஆர்ஜ இன் சிபாரிசின் அடிப்படையில் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியால் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. சிலாபம் பிரதேச தோட்டங்களின் சீனுகல தோட்டத்தில் அமைந்துள்ள 75 ஏக்கர் தென்னை பயிர் செய்கை இந்த முறையை பயன்படுத்துவதுடன் ஆரம்ப கட்டத்தில் நிலக் கீழ் நிரை இதற்காக பயன்படுத்துகின்றது. 2019 ஆம் ஆண்டில் விஸ்தரிப்பு செய்யும் நோக்கில் 2018 இல் 5 ஏக்கர் விஸ்தீரனமான நிலத்தை உள்ளடக்கும் நீர் விநியோகத் திட்டமொன்று தாபிக்கப்பட்டுள்ளது. 15 ஏக்கர் விஸ்தீரனத்தில் நீர்க் குழாய்களை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

_மேலதிக, கினியம கப்ருவன் விதை தோட்டத்தில், 143 ஏக்கர் நிலக் கீழ் பயிர் செய்கைகளை உள்ளடக்கி நீர் விநியோகத்திட்டமொன்றைத் தாபிப்பதற்கு சீஆர்ஜ இனால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### கர மகரந்த சேர்க்கை செய்வதன் ஊடாக கலப்பின தேங்காய் விதை உற்பத்தி

சிஆர்ஜ இன் 2012 உற்பத்தியில் பளுகஸ்வெவவின் சிஆர்ஜ யிலிந்தான தொழில்நுட்ப அறிவுடன், கையினால் மகரந்த சேர்க்கை செய்து தென்னை பயிர் செய்கை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது. உயர் உற்பத்தி திறன் மற்றும் சிறந்த பண்புகளைக் கொண்டதும் சிஆர்ஜ இடமிருந்து பெற்ற சன்ராமன் போலன் உடன் தென்னங் கன்றுகளை தெரிவு செய்ததன் பின்னர், சன்ராமன் தென்னை இன உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. செயற்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட விதை கன்றுகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

| வருடம் | தென்னங் கன்றுகளின் உற்பத்தி |
|---|---|
| 2012 முதல் 2018 வரை | 77,233 |
| 2019 | 5,846 |
| மொத்தம் | **83,079** |



### கினியம கப்ருவன விதைத் தோட்டம்

2012 ஆம் ஆண்டில் சீஆர்ஜ மற்றும் சிபிஎல் ஆகியவற்றக்கடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், கப்ருவன விதைத் தோட்டம் தாபிக்கப்பட்டதுடன் இந்த விதை தென்னந் தோட்ட எண்ணக்கரு 2019 ஆம் ஆண்டின் கப்ருவன தென்னங் கன்று உற்பத்தியின் ஒரு பகுதியாகும். குந்திரா தென்னை இன விதைத் தேங்கா மரங்கள் 200 காணப்படுவதுடன் இத் தோட்டத்தில் மகரந்த சேர்க்கை செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள்

#### மரமுந்திரிகை பதப்படுத்தல்.

பதனிடப்பட்ட மரமுந்திரிகை விற்பனை தற்பொழுது வெற்றிகரமாக முன்னெடுக்கப்டுகின்றது. 2019 ஆம் ஆண்டில், பல்வேறுபட்ட அரச நிறுவனங்களில் நலன்புரி சங்கங்களின் ஊடாக சந்தைப்படுத்தல் வலையமைப்பு விஸ்தரிப்புச் செய்யப்பட்டதுடன் விற்பனையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆரம்பமாக, இந்த மரமுந்திரிகை பதப்படுத்தும் அலகு தம்பபன்னி தோட்டத்தில் தாபிக்கப்பட்டதுடன் பின்னர் இலகுவான முகாமைக்காக பளுகஸ்வெவ தோட்டத்திற்கு மாற்றப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் மரமுந்திரிகை பதப்படுத்தல் அளவு 4,282 கிலோ கிராம் ஆகும்.



### தேங்காய் எண்ணை உற்பத்தி

2012 ஆம் ஆண்டில் தூய்மையான தேங்காய் எண்ணை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. உயர் தரத்திலான இந்த உற்பத்திகள் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டன. உயர் உற்பத்தித் திறனான கருவிகளுடன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டு வரை 50,000 லீட்டர் தேங்காய் எண்ணை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன.





## எமது சிறப்பு நிகழ்வுகள்





வருடாந்த பிரித் நிகழ்வு மற்றும் அன்னதானம் வழங்கல்



கொழும்பு அலுவலக ஸ்தாபிப்பு




தேசிய தெங்கு தினம் மற்றும் தென்னங் கன்று நடுகை






பொசன் போயா தன்சல்
(அன்னதானம்)





உலக சுற்றாடல் தினம்
- தெதுரு ஓயாவைத் துப்பரவு

# எமது சமூகப் பொறுப்புக்கள்

## நிலைபெறுதன்மை

### நிலைபெறுதன்மை மீளாய்வு

பெருந்தோட்ட நிறுவனம் என்ற வகையில், பெருந்தோட்டத் துறையில் முகாமைத்துவ வினைத்திறன் வளம் என்ற வகையில் நிலைபெறுதன்மையை வரையறுக்க முடியும். சுற்றாடல் பாதுகாப்பு, சமூகப் பொறுப்புக்கள் மற்றும் பொருளாதார கொள்கைகள் என்பன சாதாரண குறிக்கோள்களாகும். கம்பனிக்கான பௌதீக பொருளாதார மற்றும் சமூக நிலைபெறுதன்மையை உள்ளடக்குவதற்கு அவ்வாறான குறிக்கோள்களை தொழிற்படுத்துவதன் ஊடாக கம்பனி கட்டியெழுப்பப்பட்டுள்ளது. விவசாய சுற்றாடலை அடிப்படையாகக் கொண்ட சிபிஎல் சூழல் சமநிலை மற்றும் சுழல் முறைமையைப் பாதுகாப்பது தொடர்பில் சமநிலைத் தன்மைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. தங்களுடைய அன்னியோன்ய சமூக அர்ப்பணிப்பின் அடிப்படையில் சிபிஎல் அங்கத்தவர்களில் அனேகமானவர்கள் இந்த நன்மைகளை பெற்றுக் கொடுப்பதற்கு எங்களுக்கு இயலுமை கிடைத்துள்ளது.

### நிலைபெறுதகு விவசாயம்

சிபிஎல் இன் முகாமையின் கீழ் 5,733.23 ஹெக்டயார் காணிகள் காணப்படுவதுடன் இங்கு தென்னைப் பயிர்ச் செய்கையை பிரதான பயிராக பேணிக் கொள்வதோடு உயிரியல் வளங்களை பன்முப் படுத்துவதன் ஊடாக காணிகளின் பயன்பாட்டை உச்சப்படுத்துவதற்கு எங்களால் முடிந்துள்ளது. தென்னைப் பயிர்ச் செய்கைகள், இடைப் பயிர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு தொடர்பாக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. தென்னப் பயிர் செய்கையின் கீழான பயிர் செய்கைகளின் அளவு 2008 ஆம் ஆண்டில் 6 சதவீதமாக இருப்பதுடன் 2019 ஆம் ஆண்டு முடிவடையும் போது 27.22 சதவீதமாக இருந்தது.

கால்நடை வளர்ப்பை விஸ்தரிப்புச் செய்தல், வெற்றிடங்களை நிறப்புதல், நிலத்தற்கு நைதரசனை வழங்கும் தாவரங்களை வளர்பதன் ஊடாக உற்பத்திக் கிரயத்தைக் குறைப்பதற்கு நாங்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

### மண் உயிரியல் செயற்பாடுகளை மேம்படுத்தல்.

நிலைபெறுதகு சுற்றாடலைக் கட்டியெழுப்புவதில் இரசாயன வளமாக்கிகளின் பயன்பாட்டுக்கு உயிரியல் வளமாக்கிகளின் பிரயோகம் பிரதியீடு செய்யப்படுகின்றது. நீர் காப்பு, நீர் வளங்களை தாபிப்பதன் ஊடாக நீர் நிலைகளை காப்பதற்கான உபாயங்கள், மண் மூடு பயிர்களை வளர்பதன் ஊடாக உயிரியல் வளத்தை அதிகரிப்பதற்கும் கிளிசிரியா போன்ற பயிர்களை நடுவதன் ஊடாக சூழல் நைதரசனை அதிகரிப்பதற்கும் மேற்படி முறைமைகளை பயன்படுத்தி காணி உற்பத்தித்திறன் மற்றும் அதன் நிலைபெறுதன்மை உறுதிப்படுத்தப்படுகின்றது.

### அரச கொள்கைகளை மதித்தலும் பின்பற்றலும்

பின்வரும் வகையில் உயிரியல் அற்ற தரக் குறைவான கடுமையான உலோக தாவர அழைப்பு நாசினிகளை பயன்படுத்துவதிலிருந்து பல வருடங்களாக தவிர்ந்திருப்பதற்கு நாங்கள் பணியாற்றி வருகின்றோம்:

1. களைநாசினி பிரயோத்திற்குப் பதிலாக முறையான இயந்திர முறையில் களைக் கட்டுப்பாடு, புரேரியா போன்ற மூடு பயிர் மற்றும் கால்நடை வளரப்பு
2. தென்னை நாற்றுக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற ரெட்வீவில் ஐ தடுப்பதறகு பெரமோன் பொறிகளை தாபித்தல்.
3. தென்னைப் பயிரில் மைட்டா பாதிப்பு ஏற்பட்ட பிரதேசங்களை இனங் கண்டு அப்பிரதேசங்களுக்கு சிஆர்ஐ இனால் சிபாரிசு செய்யப்பட்ட பிரகாரம் மைட்டாக்களை அழிக்கு ஒருங்கிணைப்பு முறைகளின் ஊடாக களத்தை துப்பரவு செய்தல்.

### இயற்கை உரங்களை வளமாக்கியாகப் பயன்படுத்தல்.

கனியுப்பு குறைபாடுகள் தொடர்பாக ஒரே பிரதியீடாக நேரடியாக இரசாயன வளமாக்கிகளை பயன்படுத்துவதற்குப் பதிலாக, இரசாயன வளமாக்கிகளுடன் உயிரியல் வளமாக்கிகளை வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி தற்பொழுது பயன்படுத்துகின்றது. மண்ணில் சில உயிரியல் காரணிகளை பராமரிப்பதற்கு சாத்தியப்பாட்டை இது ஏற்படுத்தியுள்ளது. வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் பளுகஸ்வெவ தோட்டத்தில் உள்ள நால்நடை எரு அதே தோட்டத்தில் உயிரியல் வளமாக்கியாக பயன்படுத்தப்படுவதுடன் கினியம, ஆண்டிகெதர மற்றும் ஹீன்மலியாகார தோட்டங்களில் செம்மறியாட்டு எரு அப்பிரதேச தோட்டங்களில் தென்னங் கன்றுகளுக்கு இரசாயன வளமாக்கிகளுக்கு மேலதிகமாக பிரயோகிக்கப்படுகின்றது.

இரசாயன வளமாக்கிகளுடன் உயிரியல் காரணிகள் சேர்ப்பு மண் வளத்தை மேம்படுத்துவதுடன் மண் ஈரப்பதன் பாதுகாப்பு, மண்ணில் கனியுப்புக்கள் விரயமாதல் மற்றும் நில வளத்தை பேணல் போன்றவற்றையம் மேம்படுத்துகின்றது.

இது முதலீட்டை மேலும் வினைத்திறனாக்குகின்றது. இச் செயற்பாட்டின் ஊடாக அதிக அளவான கனியுப்புக்கள் உறிஞ்சப்படுகின்றன, விசேடமாக தென்னங் கன்றுகள் தொடர்ச்சியான உற்பத்தியுடன் வளமாக வளர்வதனை வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு உறிஞ்சப்பட்ட கனியுப்புக்கள் மீளவும் அதே பயிர்களுக்கு உலர்ந்த கிளைகளாகவும் மற்றும் தென்னம் மட்டை, தும்பு மற்றும் தென்னஞ் சோறு போன்றவகையில் மீள பிரயோகிக்கப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டு தொடர்பாக பின்வருமாறு தென்ன ஓலைகள் பயன்படுத்தப்படுவதுடன் தென்னை சோறுகள் புதைக்கப்படுகின்றன.

| பிரதேச தோட்டம் | இலைப் பாதுகாப்பு | தும்பு பாதுகாப்பு | புதைக்கும் தும்புச்சோறு |
|---|---|---|---|
| சிலாபம் | 78,495 | 717 | 750 |
| பிங்கிரிய | 47,118 | 2,447 | 1,793 |
| நிகவரெட்டிய | 37,875 | - | - |
| திவுலப்பிடிய | 90,855 | 2,903 | - |
| மாதம்பே | 82,422 | 5,599 | - |
| பளுகஸ்வெவ | 44,552 | 560 | 1,703 |
| தம்பன்னி | 36,232 | 720 | 500 |
| மங்களஎலிய | 18,254 | 20 | - |
| **மொத்தம்** | **435,803** | **12,966** | **4,746** |

**சூழல் முறைமையைப் பாதுகாத்தல்**

மாவத்தகமை காட்டு ஒதுக்கில் 50 ஏக்கர்களுக்கும் கல்கந்த காட்டு ஒதுக்கில் 10 ஏக்கர்களுக்கும் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி உரிமை கொண்டுள்ளது. ஈரநில சுற்றாடல் முறைமையை இந்த காட்டு ஒதுக்குகள் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், இது நீண்ட கால சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைபெறுதகு உயிரியல் பல்வகைமை முகாமை தொடர்பில் பொறுப்பாக உள்ளது. மேலும், அனேகமான தோட்டப் பிரிவுகளில் பல்வேறுபட்ட அளவுகளில் கட்டில்கள் காணப்படுகின்றன, அவற்றில் அனேகமானவை உயிரியல் நார்வைகமை அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. எனவே, அந்த முறைமையை பராமரிப்பதற்கு தொடர்ச்சியான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**மர உற்பத்தி முாகமை**

பல்வேறுபட்ட இனங்கள் மற்றும் பல்வேறுபட்ட வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்ட 22,000 இற்கும் அதிகமான அரி மரங்களைக் மொத்தமாகக் கொண்ட 85 தோட்ட அலகுகளை வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி உள்ளடக்குகின்றது. அதே வேளை அனேகமான பெருந்தோட்டங்கள் பெருந்தோட்ட எல்லைகளுக்குள் அமைந்துள்ளதுடன், கடந்து வந்த காலங்களில், நாட்டில் சிறப்பாக மரங்கள் வளரக் கூடிய பிரதேசங்கள் இனங் காணப்பட்டன. அவ்வாறான பகுதிகள் இனங் காணப்பட்டு அவை மரத் தோட்டங்களாக முகாமை செய்யப்பட்டதுடன், உரிய முறையில் வளர்த்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கடந்து வந்த காலத்தில், துப்பரவுகள் மற்றும் திட்டமிடல் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன. மேலும், கசமடு மற்றும் தம்பபன்னி போன்ற தோட்டங்களில் தேக்கு மர எண்ணிக்கையை அதிகரிப்பதன் ஊடாக 12 ஏக்கர்களில் தேக்கு நடுகையை ஆரம்பிப்பதற்கு எங்களுக்கு இயலுமை கிடைத்தது.

சுற்றாடல் முகாமையில், பல கட்டங்களில், உயிரியல் வளமாக, வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி காட்டு வளத்தை முறையாக விஸ்தரிப்புச் செய்கின்றது. காடாக்கத்தை முகாமை செய்வதற்கும் அதன் வளங்களைப் பயன்படுத்துவதற்கும் 2019 ஆம் ஆண்டில் ''ஐந்து வருட காட்டு முகாமைத் திட்டம்'' வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியால் தயார் செய்யப்பட்டது. திட்டமானது பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு மற்றும வனத் திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

**நிலைபெறுதகு செயற்திட்டங்கள்**

**காபன் படிவுகள்**

வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் நேரடி மற்றும் மறைமுக செயற்பாடுகளின் பெறுபேறொன்றாக காபனிரொட்சைட் அல்லது அதனை ஒத்த அலகுகளின் உற்பத்திகளை குறைப்பதற்கு நாங்கள் பணியாற்றி வருகின்றோம் என நான் தெரிவிக்க விரும்புகின்றேன். உயர் வினைத்திறனுடன் கூடிய இயந்திரங்களைக் கொண்டு குறை வினைத்திறன் இயந்திரங்களை மாற்றுதல், புதிய இயந்திரங்களை வழங்குதல், தேவையற்ற வகையில் மண் வளம் பாதிப்படையும் வகையனா மண் வளம் சுழற்சி செயற்பாட்டு விடயங்களை தடைசெய்தல். அலகு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் ஊடாக காபன் படிவுகளை குறைப்பதற்கு சிலாபம் பெருந்தோட்டங்கள் கூட்டாக பங்களிப்புச் செய்வதுடன் ஊழியர் மனப்பான்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் வளப் பயன்பாட்டை குறைப்பதற்கும் அலகு உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி பங்களிப்புச் செய்திருக்கின்றது.

**ஊழியர் மற்றும் சமூக உறவுகள்**

**ஊழியர் நலன்கள்**

ஊழியர்களின் மனோபாவத்தை மேம்படுத்துகின்ற நிறுவனமொன்றாகவும் நன்மைகளை ஈட்டித்தரக் கூடிய நிறுவனமொன்றாகவும் வரையறுத்த சிலாப் பெருந்தோட்டக் கம்பனியை விபரிக்க முடியும். 2019 ஆம் ஆண்டின் செயலாற்றுகையின் அடிப்படையில், மனித வளமாக நிறுவனமொன்றின் மிகவும் பெறுமதி மிக்க வளமொன்றாக அங்கிகரித்து, அதன் ஊழியர்களுக்கு வழங்குகின்ற கலாசார ரீதியான ஊழியர் ஊக்கங்களை வழங்குவதற்கு வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்கு இயலுமை கிடைத்தது.

மனித வள முகாமை உபாய ஊழியர் ஊக்கத்திற்கும், கம்பனிக்கு உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்கும் அர்ப்பணிப்புக்களை வளர்ச்சியடையச் செய்வதற்கும் வெகுவாக பங்களிப்புச் செய்துள்ளது.

**தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

சகல சந்தர்ப்பங்களிலும் சிறந்த ஆரோக்கியத்துடன் பணியாற்றுவதற்கு ஊழியர்களுக்காக பூரணமான சுற்றாடலை உருவாக்குதற்கு அர்ப்பணிப்புச் செய்ததுடன் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு (விசேடமாக பெருந்தோட்ட ஊழியர்களுக்கான) முன்னுரிமை வழங்கியுள்ளது.

**சமூகப் பொறுப்புக்கள்**

வெளிநபர்களுடன் உறவுமுறைகளை உருவாக்குவதன் ஊடாக அதன் தொழில்முயற்சிகளை வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி வழமையாக நடாத்துகின்றது. சமூகத்தின் நன்மைக்காக வாழ்வாதார நிலமைகளை கட்டியெழுப்புவதற்கு அதன் வளங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பொன்றை கம்பனி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. கம்பனிக்குச் சொந்தமான அனேகமான காணிகள், தோட்டத்தை சூழவுள்ள குறைந்த வருமானம் பெறும் ஊழியர்களுக்குரிய பண்ணைக் கால்நடைகள் ஆகியவற்றுக்குத் தேவையான புற்களை மேய்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதன் பயனாக, அவர்களின் வாழ்வாதார நிலைமையை மேம்படுததும் வகையில் கம்பனியின் முழு மொத்த பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நாங்கள் பங்களிப்புச் செய்து வருகின்றோம். கால்நடைகளின் கழிவு போன்றவற்றுக்கு மேலதிகமாக உயிரியல் உள்ளடக்கங்களை அதிகரித்தல் போன்றவற்றுக்கு கால்நடைகளினால் பயன்படுத்தப்பட்ட களைகளிலிருந்து கம்பனி மறைமுகமாக நன்மைகளைப் பெறுகின்றது.

மேலும், வருடாந்தம் கோயில்கள் மற்றும் ஆலயங்களினால் வேண்டப்படுகின்ற பல வசதிகளை நாங்கள் வழங்குகிறோம், மேலும் இங்கு, தேவையான செயற்பாடுகளுக்கு மரங்களை வழங்குவதுடன், நிதி உதவிகளையும் வழங்குவதுடன், அனேகமான கோயில்கள் மற்றும் தேவாலயங்களுக்கு தேங்காய் கொப்பராக்களை வழங்குவதுடன் அது மட்டுமல்லாது நாட்டில் ஏற்படும் அனர்த்தங்களின் போதும் அனுசரனையை கம்பனி வழங்குகின்றது. சுறுசுறுப்புடன் நிவாரணங்களை கம்பனி வழங்குகின்றது.

பெருந்தோட்டக் கம்பனியொன்று என்ற வகையில், நாட்டின் அபிவிருத்தியின் ஒரு பங்காளராக வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்கான விவசாய தொழில்முயற்சிக் கம்பனியொன்றாக பங்களிப்புச் செய்வதற்கும் மற்றும் சகல ஊழியர்களின் அபிலாசைகளை நிறைவு செய்வதற்கும் பொருளாதார ரீதியான உற்பத்தித்திறனான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், பொருளாதாரச் சமநிலை மற்றும் சமூக, சுற்றுச் சூழல் காரணிகளின் ஊடாக நிலையான அபிவிருத்தியை அடைவதற்கு நாங்கள் அபிலாசை கொண்டுள்ளோம்.



## நிதி மீளாய்வு

வருடாந்த அறிக்கையின் ஒரு பகுதியாக இருக்கின்ற கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் கம்பனியின் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதி நிலமையை வெளிப்படுத்துகின்றன. கம்பனியின் நிதிச் செயலாற்றுகையின் கண்ணோட்டமொன்றை நிதி மீளாய்வு கலந்துரையாடுகின்றது.

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்கான நிதி வருடத்தினை அறிக்கையிடல் வெளியக சுற்றாடல் காரணிகளிலிருந்து பல்வேறுபட்ட பாதகமான தாக்கங்களினால் சவால்மிகு வருடமாக காணப்படுகின்றது. நிதியாண்டின் போது குறைந்த நிகர விற்பனைச் சராசரி அறிக்கையிடப்பட்டதுடன் கம்பனியின் விவசாயச் செயற்பாடுகளில் சாதகமற்ற நிலைமைகள் தாக்கம் செலுத்தியது. கம்பனியின் இது போன்ற பாதகமான தாக்கங்களுக்கும் மத்தியில் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2019 ஆம் நிதியாண்டின் போது கம்பனி உறுதியான நிதிப் பெறுபேற்றை அடைய முடிந்துள்ளது.

### ஒரே பார்வையில் கம்பனியின் நிதிச் செயலாற்றுகை

| விடயம் | 2019 ரூபா. மில். | 2018 ரூபா. மில் | வேறுபாடுகள் (2018 - 2019) ரூபா. மில். | % | பிரதான காரணிகள் |
|---|---|---|---|---|---|
| தேங்காய் மில்லியன்கள் | 14.9 | 8.1 | 6.8 | 84% | |
| தேறிய விற்பனைச் சராசரி ரூ. | 25/= | 36/= | (11) | (30%) | |
| | ரூ. மில் | ரூ. மில் | ரூ. மில் | | |
| வருமானம் | 445 | 350 | 95 | 27% | பயிர்களின் அதிகரிப்பு |
| விற்பனைக் கிரயம் | 356 | 350 | 6 | 2% | |
| பிற வருமானம் | 94 | 72 | 22 | 31% | இதர வருமான அதிகரிப்பு |
| நிருவாகச் செலவீனம் | 93 | 86 | 7 | 8% | 2018 ஆம் ஆண்டில் செயலாற்றுகை ஊக்கக் கொடுப்பனவு செலுத்தாமை |
| நிதி வருமானம் | 11 | 15 | (4) | (26%) | குறுங்கால முதலீடு மற்றும் வட்டி வீதங்களின் குறைவின் காரணமாக |
| நிதிச் செலவீனம் | 40 | 36 | 4 | 11% | வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்திக் காரணிகளின் அதிகரிப்பின் காரணமாக ஐ.தோ.அ.ச. சொத்துக்கள் தொடர்பான குத்தகை வரி அதிகரித்துள்ளது. |

#### வருமானம்

மீளாய்வு வருடத்தின் போது, ரூ. 445 மில்லியன் வருமானத்தை பதிவு செய்துள்ளது. முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது 27 சதவீத அதிகரிப்பொன்றாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த அதிகரிப்புக்கான காரணம் தேங்காய் மற்றும் மரமுந்திரிகை பயிர்களின் அதிகரிப்பே இதற்கான பிரதான காரணிகளாகும். எனினும், 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது தேங்காய் விலை 30 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன.

வருமான உள்ளடக்கம் பின்வருமாறு

| | 2019 ரூ.மி. | 2018 ரூ.மி. |
|---|---|---|
| தேங்காய் | 348 | 291 |
| மரமுந்திரிகை | 46 | 24 |
| கால்நடைகள் | 23 | 17 |
| பிற தானியங்கள் மற்றும் செயற்றிட்டம் | 28 | 18 |
| | **445** | **350** |

#### மொத்த இலாபம்

மீளாய்வு ஆண்டுக்கான மொத்த இலாபம் ரூ. 89 மில்லியன்களாக இருப்பதுடன் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரூ. 207,522 ரூ.மி. நட்டம் பதிவாகியுள்ளது.

#### துறை ரீதியான மொத்த இலாபம்

தெங்கு உற்பத்திகளானது மொத்த இலாபத்திக்கு பிரதான பங்களிப்பு செய்யும் உற்பத்தியாக இருப்பதுடன் இது ரூ. 65 மில்லின் 73 சதவீதத்தை மொத்த இலாபத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் மரமுந்திரிகையானது ரூ. 15 மில்லின்களுடன் 17 சதவீதத்தை பங்களிப்புச் செய்கின்றது. ஏனைய மூலங்களின் பங்களிப்பு ரூ. 9 மில்லியன்களாக இருப்பதுடன் இது 10 சதவீதத்திற்குச் சமமாகும்.

| | 2019 ரூ.மி. | 2018 ரூ.மி. |
|---|---|---|
| தேங்காய் | 65 | (3) |
| மரமுந்திரிகை | 15 | (2) |
| கால்நடைகள் | 2 | 2 |
| பிற தானியங்கள் மற்றும் செயற்றிட்டம் | 7 | 3 |
| | **89** | **(.2)** |

2019 ஆம் ஆண்டில் தேங்காய் உற்பத்தி தொடர்பில் மொத்த இலாப எல்லை 18.6 சதவீதமாக இருப்பதுடன் மரமுந்திரிகை தொடர்பில் இலாப எல்லை 33 சதவீதமாகக் காணப்படுகின்றன.

#### வரிக்கு முந்திய இலாபம் (P.B.T)

மீளாய்வு ஆண்டில் வரிக்கு முந்திய இலாபமாக கம்பனி ரூ. 61 மில்லியன்களை உரு வாக்கியதுடன் 2018 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட இலாபத்திற்கு எதிராக ரூ. 35 மில்லியன்கள் நட்டமொன்று பதிவாகியுள்ளது.

### தெங்குத் துறை

தேங்காய் உற்பத்தி தொடர்பில் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி 3804.94 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டிருப்பதுடன் இந்தப் பெருந்தோட்டங்கள் எட்டு தோட்டங்களின் கீழ் முகாமை செய்யப்படுகின்றன. இந்தத் தோட்டங்கள் தெங்கு உற்பத்தி பெருவாரியாக காணப்படும் புத்தளம், குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் காணப்படுகின்றன.

தற்பொழுது முதிர்ச்சியடையாத தென்னந் தோட்டங்களின் விஸ்தீரணம் 830.19 ஹெக்டயர்களாக இருப்பதுடன் இது மொத்த தென்னந் தோட்டங்களின் பரப்பளவில் 22 சதவீதமாகும்.

நடைமுறை ஆண்டின் போது சி.பெ.க. 2018 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்த 8.1 மில்லியன் தேங்காய்களுக்கு எதிராக 14.9 மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்ததுடன் இது 84 சதவீத அதிகரிப்பொன்றாகும். எனினும், நிகர விற்பனை சராசரி 2018 ஆம் ஆண்டின் ரூ. 36.00 ஒப்பீடு செய்யும் போது ரூ. 25.00 வீழ்ச்சியடைந்துள்ளது இது 30 சதவீத வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.







விற்பனைக் கிரயம் மற்றும் தெங்கு உற்பத்திக் கிரயம்

| | 2019<br>ரூ.மி. | 2018<br>ரூ.மி. |
|---|---|---|
| உற்பத்திக் கிரயம் | **306** | **290** |
| ஆரம்ப இருப்பு சீராக்கம் | 29 | 33 |
| இறுதி இருப்பு சீராக்கம் | (51) | (29) |
| விற்பனைக் கிரயம் | **284** | **294** |

2018 ஆம் ஆண்டின் 290 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது 2019 ஆண்டுக்கான மொத்த உற்பத்திக் கிரயம் ரூ. 306 மில்லியன்களாக இருப்பதுடன் ரூ. 16 மில்லியன் அதிகரிப்பொன்றை வெளிக்காட்டுகின்றது. எனினும், உற்பத்திக் கிரயம் தொடர்பில் ஆரம்ப இருப்பு மற்றும் இறுதி இருப்புக்களை சீர் செய்ததன் பின்னர் 2019 ஆம் ஆண்டுக்கான உற்பத்திக் கிரயம் 284 மில்லியன்கள் ஆகும்.

தெங்கு உற்பத்தி தொடர்பான உற்பத்திக் கிரயம் அதிகரிப்பதற்கான பிரதான காரணிகளாக பின்வரும் விடயங்களை குறிப்பிட்டுக் காட்ட முடியும்

- 2018.10.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கூலி வீதங்கள் சம்பளங்கள் சபையால் கூலி வீதங்கள் திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாக மொத்த கூலிகள் 23 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டுக்கான மொத்த ஊழியர் சம்பளங்கள் ரூ. 114 மில்லியன்களாக இருப்பதுடன் இது 2019 ஆம் ஆண்டில் 140.6 மில்லியன்களாக உள்ளது.
- முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை மற்றும் கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம் தோட்ட நிறைவேற்றுத் தர பதவியணி மற்றும் நிறைவேற்றுத் தரம் அல்லாத பதவியணியின் சம்பளங்கள் 3.1 மில்லியன்களால் அதிகரித்துள்ளது.
- இ.க.நி. 19 இற்கு ஏற்ப பணிக்கொடை ஆயுள் மதிப்பீட்டு நட்டமொன்றாக உற்பத்திக் கிரயத்திற்கு ரூ. 5 மில்லியன்கள் மேலதிக கட்டணம் அறவிடப்பட்டுள்ளது.
- முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்கள் தொடர்பான நேரடிக் கிரயத்தில் வீழ்ச்சியொன்றின் காரணமாக ரூ. 8.00 மில்லியன்களால் முதிர்ச்சியடைந்த பிரதேசங்களின் பொது கட்டணம் விகிதாசார ரீதியாக அதிகரித்துள்ளது. (முதிர்ச்சியடைந்த மற்றும் முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்கள் மீதான நேரடி கிரய சதவீதத்தின் படி முதிர்ச்சியடைந்த பெருந்தோட்டங்கள் மற்றும் முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்களுக்கிடையில் பொது கட்டண விகிதாசாரம் பகிர்ந்து காணப்படுகின்றது)
- சாதகமற்ற காலநிலைகள் காணப்பட்டமையின் காரணமாக 2019 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட பிரதேசங்களில் மாத்திரம் வளமாக்கியிடல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமையினால் முதிர்ச்சியடைந்த பெருந்தோட்டங்களுக்கான வளமாக்கியிடல் கிரயமானது 2018 ஆம் ஆண்டின் ரூ. 32 மில்லியன்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் ரூ. 5.5 மில்லியன்களாக குறைவடைந்துள்ளது.

தெங்கு தொடர்பான தே.வி.ச எதிர் உற்பத்திக் கிரயம்



**மரமுந்திரிகை பயிர்ச் செய்கை**

சிலாப் பெருந்தோட்டக் கம்பனி, முதிர்ச்சியடைந்த மரமுந்திரிகை பயிர்ச்செய்கையாக 757.91 ஏக்கர் காணிகளை பேணுவதுடன் அதன் வருடாந்த மரமுந்திரிகை உற்பத்தியாது 2018 ஆம் ஆண்டின் 91,196 கி.கி. உடன் ஒப்பீடு செய்யும் போது 2019 ஆம் ஆண்டில் 151,542 கி.கி. ஆக இருந்ததுடன் சி.பெ.க. இன் வரலாற்றில் அதி கூடிய மரமுந்திரிகை உற்பத்தியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் 2018 ஆம் ஆண்டின் ரூ. 24 மில்லியன் வருமானத்துடன் ஒப்பீடு செய்யும் போது 2019 ஆம் ஆண்டில் 46 மில்லியன்கள் மரமுந்திரிகை வருமானம்தை பதிவு செய்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் மரமுந்திரிகையிலிருந்து ரூ. 15 மில்லியன்களை கம்பனி இலாபமாக பதிவு செய்துள்ளது.

**ஏனைய பயிர் மற்றும் செயற்றிட்டம்**

கம்பனியானது பிரதான துணைப் பயிர்களாக ரகன் பழம் பயிர்ச் செய்கை, கருவா, ரம்புட்டான், மிளகு போன்றவற்றை பயிர் செய்துள்ளது. பழுகஸ்வெவ தோட்டத்தின் அதி உயர் தரத்திலான கொப்பராவை பயன்படுதி தேங்காய் எண்ணை உற்பத்தக்கு பழுகஸ்வெவ தோட்டத்தில் தேங்காய் எண்ணை ஆலையொன்றை சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி தாபித்துள்ளது. பழுகஸ்வெவ தோட்டத்தில் மரமுந்திரிகை செயன்முறைப்படுத்தல் நிலையமொன்றை தாபித்திருந்தது.

**பிற செயற்பாட்டு வருமானம்**

தேங்காய் சோறு, பலகை, நெல் மற்றும் இறந்த / இத்துப் போன மரங்களின் விற்பனையை பிற தொழிற்பாட்டு வருமானம் 2018 ஆம் ஆண்டின் ரூ. 71.7 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது 2019 ஆம் ஆண்டின் ரூ. 93.5 மில்லியன் வருமானம் அதிகரித்துள்ளது இது 30 சதவீத அதிகரிப்பொன்றாகும். நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 21 இல் பிற வருமான மூலங்களின் விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

**நிருவாக மற்றும் பொது செலவீனங்கள்**

நிருவாக மற்றும் பொது செலவீனங்கள் 2018 ஆம் ஆண்டின் ரூ. 86 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது 2019 ஆம் ஆண்டில் ரூ. 93 மில்லியன்களாக அதிகதித்துள்ளதுடன் இது 8 சதவீத அதிகரிப்பொன்றாகும். 2018 ஆம் ஆண்டின் போது, நிலவிய நிதி நிலைமையின் கீழ், ஊழியர்களுக்கு செயலாற்றுகை ஊக்கக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டில் சி.பெ.க. ஊழியர்களுக்கு செயலாற்றுகை ஊக்கக் கொடுப்பனவாக ரூ. 7.2 மில்லியன்களை செலுத்தும் நிலையில் இருந்தது, ஆண்டின் போது நிருவாகச் செலவீனம் அதிகரிப்புக்கான பிரதான காரணமாக இருந்தது.

**நிதி வருமானம்**

குறுங்கால வைப்புக்கள் மற்றும் பதவியணி கடன்கள் மீதான வட்டி வருமானங்களிலிருந்தான வட்டி வருமானத்தை பிரதானமாக நிதி வருமானம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது. இலங்கை வங்கியின் குறுங்கால வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் வட்டி வீதங்கள் மற்றும் குறுங்கால வைப்புக்கள் குறைவடைந்தமையின் காரணமாக ரூ. 13.9 மில்லியன்களிலிருந்து ரூ. 9.7 மில்லியன்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த வைப்பு குறைவுக்கான பிரதான காரணமாக இருப்பது 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட சாதகமற்ற நிதி நிலைமையேயாகும்.

**நிதிக் கிரயம்**

ஜ.தோ.அ.ச. குத்தகை ஆதனங்கள் மீதான வட்டி மற்றும் எதிர்பாராத குத்தகை வாடகைகளை நிதிக் கிரயம் பிரதானமாக வெளிப்படுத்துகின்றது. 2019 ஆம் ஆண்டுக்கான உரிய கிரயங்கள் ரூ 37 மில்லியன்களாக இருந்ததுடன் கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது 6 சதவீத அதிகரிப்பொன்றை பதிவு செய்வதோடு இது மொத்த உள்நாட்டு அபிவிருத்தி குறிகாட்டியன் அடிப்படையில் வருடாந்தம் அதிகரிக்கின்றது.

இதற்கு மேலதிகமாக அத்தியவசிய தொழிற்படு மூலதன தேவைப்பாடு தொடர்பாக இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட தற்காலிக நிதி வசதி தொடர்பில் 2019 ஆம் ஆண்டில் ரூ 2 மில்லியன்களை கம்பனி செலுத்தியுள்ளது.




**நிகர இலாபம்**

மீளாய்வு ஆண்டின் போது கம்பனியானது ரூ. 49.4 மில்லின் தேறிய இலாபத்தை பதிவு செய்துள்ளது. இது முன்னைய வருடத்தின் இலாப நட்டத்திற்கு (ரூ. 36.6 மிலலியன்கள்) எதிரானதாகும். முன்னைய வருடத்தில் தேங்காய் ஒன்றுக்கான தேறிய விற்பனை சராசரி மிகவும் அதிகமாக இருந்த அதாவது ஒரு தேங்காய்க்கு ரூ. 36.00 ஆக இருந் வேளையில் நடைமுறையாண்டில் தேங்காய் ஒன்றுக்கான தேறிய விற்பனை விலை ரூ. 25.00 ஆக இருந்தும் இந்த அடைவு நிகழ்ந்துள்ளமையினை குறிப்பிடுதல் முக்கியமாகும்.

**பங்கிலாபம்**

2008 ஆம் ஆண்டில் அரசாங்கம் முகாமையை பொறுப்பெடுத்ததன் பின்னர் திறைசேரிக்கு / கோல்டன் பங்காளர்களுக்கு ரூ. 305 மில்லியன் மொத்த பங்கிலாபத்தை சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி செலுத்தியுள்ளது. 2008 - 2018 காலப் பகுதியின் போது கம்பனியினால் உழைக்கப்பட்ட இலாபத்துடன் ஒப்பீடு செய்யும் போது இது குறிப்பிடத்தக்க உயர் பெறுமதியாகும். அதே வேளை 1992 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் வரை சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி திறைசேரிக்கு செலுத்திய மொத்த பங்கிலாபம் ரூ. 467 மில்லியன்கள் ஆகும்.

**பங்கொன்றுக்கான உழைப்பு**

2018 ஆம் ஆண்டின் ரூ. (1.62) என்ற மறை பெறுமதியிலிருந்து 2019 ஆம் ஆண்டில் ரூ. 2.37 வரை கம்பனியின் பங்கொன்றுக்கான உழைப்பு அதிகரித்துள்ளது.




**நடைமுறை விகிதம்**

நடைமுறை விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது வீழ்ச்சியொன்றைக் காட்டுகின்றது, அதாவது அது முன்னைய ஆண்டின் 1.7 தடவையோடு ஒப்பீடு செய்யும் போது 2019 ஆம் ஆண்டில் 1.5 சதவீதத்தைக் காட்டுகின்றது. நடைமுறையாண்டில் வர்த்தக மற்றும் பிற கொடுப்பனவுகளில் ஏற்பட்ட ஒரு அதிகரிப்பே இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகும்.

**சொத்து அடிப்படை**

மீளாய்வு ஆண்டின் போது, 2018 ஆம் ஆண்டின் ரூ. 1.305 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது 2019 ஆம் ஆண்டில் ரூ. 1,412 மில்லியன்கள் வரை 8 சதவீதத்தினால் கம்பனியின் மொத்த சொத்துக்கள் அதிகரித்துள்ளது. மொத்த சொத்து அடிப்படை மீது நடைமுறைச் சொத்து மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அதிகரிப்பு இந்த முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

நடைமுறையல்லாச் சொத்துக்களைப் பொறுத்த வரையில், 2018 ஆம் ஆண்டின் ரூ. 1,121 மில்லியன்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் ரூ.1.178 மில்லியன்கள் வரை சொத்து அடிப்படை அதிகரித்துள்ளதுடன் இது முன்னைய வருடத்திலும் பார்க்க 5 சதவீத அதிகரிப்பாகும். கள அபிவிருத்தி செலவீனங்களிலிருந்தான பெறுபேறான உயிரியல் சொத்துக்களின் அதிகரிப்பு மற்றும் புதிய மதிப்பீடு மீதான நுகர்வு செய்யக் கூடிய உயிரியல் சொத்துக்களின் அதிகரிப்பும் இந்த சொத்து அதிகரிப்புக்கு பிரதான காரணியாக உள்ளன.

அதே வேளை, கம்பனியின் நடைமுறைச் சொத்துக்கள் அடிப்படை 2018 ஆம் ஆண்டின் 184 மில்லயன்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் 234 மில்லியன்கள் வரை அதிகரித்துள்ளது இது முன்னைய வருடத்திலும் பார்க்க 27 சதவீத அதிகரிப்பொன்றை வெளிப்படுத்துகின்றது. வர்த்தக மற்றும் பிற பெறுகைகள் மற்றும் இருப்புக்களின் அதிகரிப்பு, மற்றும் வருட நிறைவில் குறுங்கால வைப்புக்களின் அதிகரிப்பு என்பன நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்புக்கு பிரதான காரணமாகும்.

| சொத்து அடிப்படை | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். |
|---|---|---|
| ஜே.இ.டி.பி. தோட்டங்களின் வெற்றுக் காணிகளின் குத்தகை உரிமை | 68 | 71 |
| ஜே.இ.டி.பி. தோட்டங்களின் குத்தகை ஆதனம், பொறி, மற்றும் கருவிகள் | 1 | 1 |
| ஜே.இ.டி.பி. தோட்டங்களின் குத்தகை உரித்து உயிரியல் சொத்துக்கள் | 18 | 21 |
| உரித்து உயிரியல் சொத்துக்கள் (குத்தகை உரித்து ஆதன முன்னேற்றம்) | 899 | 849 |
| நுகரக் கூடிய உயிரியல் சொத்துக்கள் | 90 | 58 |
| உயிரியல் சொத்துக்கள் - கால்நடைகள் | 15 | 19 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 81 | 95 |
| பிற நிதிச் சொத்துக்கள் | 6 | 7 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 234 | 184 |
| **மொத்த சொத்துக்கள்** | **1,412** | **1,305** |

**உரிமையாண்மை**

உரிமையாண்மை பிரகடணப்படுத்திய ரூ. 200 மில்லியன் பெறுமதியான மூலதனம் மற்றும் ரூ. 748 மில்லியன்கள் ஒதுக்கத்தையும் உள்ளடக்குகின்றது. ஒதுக்கங்களின் உள்ளடக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | 2019 ரூ. மில். | 2018 ரூ. மில். |
|---|---|---|
| நிறுத்தி வைத்த | 617.1 | 612.9 |
| உழைப்புக்கள் மர இருப்புக்கள | 130.6 | 95.3 |
| மொத்த ஒதுக்கங்கள் | **747.7** | **708.2** |

**பங்குதாரர்களின் நிதி விகிதம்**

ஆண்டின் போது பங்குதாரர்களின் நதிச் சதவீதம் 67 சதவீதமாக பேணப்பட்டது.



### நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள்




### தொழிற்படு முதல்

அறிக்கையிடும் ஆண்டு முடிவில், கம்பனியின் தொழிற்படு மூலதனம் முன்னைய ஆண்டின் ரூ. 77 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது 77 மில்லியன்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

### காசுப் பாய்சல் கூற்று

### நிகர தொழிற்படு காசுப் பாய்ச்சல்

2018 ஆம் ஆண்டின் ரூ. 2.8 மில்லியன் எதிர் மறையான தொழிற்படு மூலதனத்துடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வு ஆண்டின் போது கம்பனியானது ரூ. 60மில்லியன் சாதகமான தொழிற்படு காசுப் பாய்சலை அனுபவித்துள்ளது. ஆண்டின் போது கம்பனியின் சிறந்த செயலாற்றுகை முன்னைய ஆண்டின் பாதகமான தொழிற்படு முதல் பாசுப் பாய்சலை நடைமுறை ஆண்டின் சாதகமான காசுப் பாய்ச்சலாக மாற்றுவதற்கு கம்பனிக்கு முடிந்துள்ளது.

### மூலதன செலவீனம்

பெருந்தோட்டத்தின் கள அபிவிருத்தி தொடர்பில் மீளாய்வு ஆண்டின் போதுரூ. 60 மில்லியன் தொகையை கம்பனி செலவு செய்துள்ளது.

அதன் பிரகாரம், புதிய பயிரிடல் / துணைப் பயிரிடல் தொடர்பில் ரூ. 59 மில்லியன்கள் மற்றும் துணைப் பயிர் தொடர்பில் ரூ. 1 மில்லியன் தொகையை 830/19 ஹெக்டயார் பரப்பளவில் முதிர்வடையாத தென்னை மரங்களை முகாமை செய்வதற்கும் செலவு செய்யப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கொள்வனவு தொடர்பில் ரூ. 2.00 மில்லியன் தொகையை செலவு செய்துள்ளது.

### உருவாக்கப் பட்ட நிகர காசுப் பாய்ச்சல்

2018 ஆம் ஆண்டின் எதிர்மறையான ரூ. 84 மில்லியன் காசுப் பாய்ச்சலுக்கு எதிராக மீளாய்வு ஆண்டின் போது கம்பனி ரூ. 22 மில்லியன் சாதகமான நிகர சாசுப் பாய்ச்சலை பதிவு செய்துள்ளது.

### குறுங்கால வைப்புக்கள் மற்றும் வங்கி நிலுவை

மீளாய்வு ஆண்டின் முடிவில் இலங்கை வங்கியின் குறுங்கால வைப்புக்கள் மற்றும் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் ரூ. 111 மில்லியன்களாக இருந்த போதும், இந்த தொகை 2018 ஆம் ஆண்டில் ரூ. 89 மில்லியன்களாக இருந்ததுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 23 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

### கடந்த ஐந்து வருட தெங்கு உற்பத்திகள், நிகர விற்பனை சராசரி மற்றும் வருமானம்

| ஆண்டு | தேங்காய்கள் | 1000 தேங்காய்களின் தே.ச.வி. | வருமானம் ரூபா. |
|---|---|---|---|
| 2014 | 12,969,381 | 29 | 374,850,643 |
| 2015 | 12,517,083 | 30 | 399,365,998 |
| 2016 | 16,522,290 | 25 | 383,089,914 |
| 2017 | 11,651,155 | 42 | 516,178,934 |
| 2018 | 8,132,121 | 36 | 291,313,372 |
| 2019 | 14,933,952 | 25 | 348,349,082 |

### 2019 ஆம் ஆண்டில் தோட்ட பயிர் பங்களிப்பு

| தோட்டம் | தாணிய விளை |
|---|---|
| சிலாபம் | 1,637,232 |
| பளுகஸ்வெவ | 4,309,571 |
| தம்பபன்னி | 1,204,903 |
| மஹ்கலேலிய | 852,394 |
| பிங்கிரிய | 2,001,491 |
| நிக்கவரெடிய | 1,098,234 |
| திவுலபிடிய | 1,879,790 |
| மாதம்பே | 2,010,337 |
| **மொத்தம்** | **14,993,952** |



## நிறுவனத்தின் ஆளுகை

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது, நேர்மை, நிறுவன ரீதியான நடுநிலைப் போக்கு, வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகின்றது. இது நிறுவனத்தின் ஆர்வம் கொண்டுள்ளவர்களுடன் சிறப்பான தொடர்புகளை கட்டியெழுப்புவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்தது.

நிறுவனத்தின் நடவடிக்கைகள் நெறிமுறை தரங்களுடனும், பங்குதாரர்களின் சிறந்த நலனுடனும் நடாத்தப்படுகின்றன. நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் ஸ்தீரத்தன்மை என்பனவும் வர்த்தகப் பெறுமதி அதிகரிக்கும் முறையில் உருவாக்கப்பட்ட கொள்கைகள், செயலொழுங்குகள், நடைமுறைகள், சரியான கட்டமைப்புக்கள் மற்றும் தகவல்கள் என்பன மேற்படி தொடர்புகளை உறுதிப்படுத்துவதில் சிறந்த பங்களிப்பை பங்களிப்புச் செலுத்தின.

#### பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நிறுவனத்தின் செயலாற்றுகைக்குப் பொறுப்பாகவுள்ளதுடன் இறுதியில் அது தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கும் கடமைப்பட்டுள்ளன.

#### பொறுப்பு

நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் உபாய முறைக் குறிக்கோள்களை உருவாக்குவதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவகற்கும் பணிப்பாளர் சபை கடமைப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நிதித் தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் உள்ளக நிர்வாக முறையின் வெற்றி என்பவற்றுக்கான இறுதிப் பொறுப்பையும் பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.

#### ஆக்க அமைவு

2019 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளர் உட்பட 7 பணிப்பாளர்களை கொண்டிருந்தது.

#### பணிப்பாளர் சபை கூட்டங்கள்

பணிப்பாளர் சபை கூட்டங்கள் மாதாந்த அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன. இக்கூட்டத்தில் நிறுவனத்தின் உபாய முறை வழிமுறைகள், வருடாந்த வரவு செலவு திட்ட மீளாய்வு, அனைத்து செயற்பாடுகளினதும் முன்னேற்றம், மூலதனச் செலவுகள் என்பன தொடர்பாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு கூட்டங்கள் இடம்பெறுவதற்கு முன்னர் அது தொடர்பான விபரங்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டில் 5 தடவைகள் பணிப்பளார் சபை கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

#### கணக்காய்வுக்குழு

கணக்காய்வுக் குழுவில் 2 நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்கள் உட்பட 3 பணிப்பாளர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

திரு. பீ.பீ.எஸ்.சீ நொனிஸ் அவர்கள் நிறைவேற்று தரமற்ற பணிப்பாளரா இருப்பதுடன் இவர் கணக்காய்வுக் குழுவின் தலைவராக கடைமையாற்றுவதோடு இவ்வருடத்துக்குள் ஐந்து மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளார். இக்குழுவின் மேற்பார்வையாளராக கணக்காய்வாளர் தலைமையக்தின் அலுவல் ஒருவர் பங்கேற்றுள்ளார்.

நிறுவத்தின் தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர், முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர் - பெருந்தோட்டம் மற்றும் சிரேஷ்ட கணக்காளர் ஆகியோர் அழைப்பின் பெயரில் இக்கணக்காய்வுக் குழுவில் பங்கேற்கின்றனர்.

#### சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க செயற்படுதல்

சங்கத்தின் நியதிச் சட்ம், சங்கத்தின் யாப்பு மற்றும் அரசாங்கத் தொழில் முயற்சிகள் தொடர்பில் ஏற்புடையதாகும் ஏனைய சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கிய வகையி செயற்படுவதற்கு பணிப்பாளர் சபை இயன்றவரை அனைத்து முயற்சிகளையும் செய்கின்றது.

இலங்கை தரக்கட்டளை நியமங்களின் அடிப்படையிலும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் தேவைகளுக்கு இணங்கியதாகவும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் யாவும் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

# அபாய முகாமைத்துவம்

விஷேடமாக நிறுவனமானது மாறி வருகின்ற சூழலொன்றை கொண்டுள்ளதோடு சூழலில் தளம்பல்கள் மற்றும் வெவ்வேறு மட்டங்களில் அபாயங்கள் கண்டறியப்பட்டுள்ளதோடு காலநிலை மட்டங்கள் மற்றும் சந்தை தளம்பல் நிலைகள் மீதான உயர்ந்த அபாய நிலையை காட்டுகின்றது. எமது அபாயமுகாமைத்துவ செயற்பாடு மூலம் அறிவுடனும் முன்நோக்குடனும் அபாயங்களை தாக்குபிடிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

**அபாயக்கட்டுப்பாட்டு உபாயமுறைகள்:**

| அபாயக் காரணி | அபாயம் பற்றிய மதிப்பீடு | அபாயக் கட்டுப்பாட்டு உபாய முறைகள் |
|---|---|---|
| காலநிலை மாற்றங்கள் | தெங்கு, மரமுந்திரிகை மற்றும் ஏனைய பெரும்போக பயிர்களின் விளைச்சல்கள் பல மாதங்களாக தொடர்கின்ற எதிர்பாராத மற்றும் நீண்ட வரட்சியின் காரணமாக மோசமான காலநிலை நிலைமைகளினால் எதிர்பாராதவித தளம்பல் நிலைமையை கொண்டுள்ளன. | பாரிய கிடங்குகளில் புதைக்கப்பட்ட சிதைவுகளின் வழியினூடாக அதிகரித்த மண் ஈரலிப்புத் தன்மை பாதுகாப்பு பணியை பொறுப்பேற்றலும் பெருந்தோட்ட மண்ணினுள் மழை நீரை சேகரிப்பதற்கான அதிக வடிகால்களும் அதிக நிழலுக்காக, உயரம் குறைவான கிளிசீரியா போன்ற மரங்களை நடுதலும் காப்பு பயிர்களான பூரேரியா போன்ற மரங்களும் நடப்பட்டு வருகின்றன.<br><br>மழை நீரை சேமிப்பதற்காக அதிக தேக்கங்களை புனரமைக்கப்படுகின்றன. அத்தகைய சேகரித்த நீர் தேக்கங்களின் அருகிலுள்ள மண்ணின் ஈரத்தன்மையை பேணுவதனூடாக பனை மரங்களின் வேர்களுக்கு நீரூட்டுதலின் பின்னர் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்பட முடியும்.<br><br>பயிர்கள் எதிர்நோக்கியுள்ள நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. |
| உற்பத்திகளுக்கான சேதம் | 50 வயதுக்கு மேற்பட்ட முதிர்ந்த நிலை தாவரங்களாக மாறி பயனற்ற வயது கூடிய மற்றும் பலனற்றதாக அதிக எண்ணிக்கையான விகிதம் மாறியிருப்பதன் காரணத்தினாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது.<br><br>இதற்கு மேலதிகமாக ஏதாவது கண்ணுக்கு புலப்படாத நோய்களும் பனை மரங்களுக்கும் பெருந்தோட்டங்களுக்குமான இயற்கை காரணங்களுமாகும் | வயது முதிர்ந்த பனை தொகையை பதிலீடு செய்வதற்கு புதிய தோட்டங்கள் மற்றும் தோட்டங்களை பொறுப்பெடுத்தல்<br><br>பலுகஸ்வெவ தோட்டம் மற்றும் திவுலபிடிய தோட்டங்களில் இரண்டு பூச்சிநாசினி ஆய்வுகூடங்களை தாபித்தல்.<br><br>ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உத்திகள் |
| பொருள் சுழற்சி | குறைவான விலைகளும் நிலையற்ற விற்பனைகள், தெங்கு நுகரத்தக்க பொருட்களுக்கான கேள்வில் வீழ்சசியை ஏற்படுத்தி பதிலீடுகள் அதிகரித்தமை, நுகர்வோரின் கேள்வியில் தங்கியியருத்தல் என்பன மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் அதிக எண்ணிக்கையான தேங்காய்கள் தோட்டங்களில் வெறுமனே வீழ்ந்து கிடக்கின்ற நிலைமையை உருவாக்கும்.<br><br>நுகர்வோர் அதிகம் கவரப்பட்டுள்ளபுாம் எண்ணெய் போன்ற நெருங்கிய பதிலீடுகளின் போட்டி, குறைந்த விலை என்பனவும் கேள்வி மற்றும் விலைகளில் தாக்கம் செலுத்துகின்றன. | கொழும்பு தெ.அ.அ ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படாத தேங்காய்கள் வாராந்த தெ.அ.அ தேங்காய் ஏல விற்பனைக்கு மேலதிகமாக தலைமை அலுவலகத்திலுள்ள "பொல் பொல" எனபெயரிடப்பட்ட இரு வாரங்களுக்கு ஒரு முறை விற்பனை செய்யும் நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகின்றது.<br><br>பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களைத யாரிப்பதற்கு கவனம் செலுத்துதல்<br><br>இந்த இரண்டு ஏல விற்பனைகளிலிலும் விற்கப்படாத காய்கள் கொப்பராவாக மாற்றப்படுவதேதாடு அதன் ஒரு பகுதி ஏலவிற்பனை மூலமும் ஏனைய அல்லது பிரதான பகுதி பலுகஸ்வெவ எண்ணெய் ஆலையில் தூய எண்ணெய்யாகவும் மாற்றப்படுகின்றது. |
| மூலதன முதலீட்டு ஆபத்து | ஏதிர்பார்த்த இலாபம் கிடைக்கப் பெறாமை மற்றும் முதலீட்டின் மீது எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப் பெறாமை போன்ற அபாயங்கள் | முதலீட்டு மட்டம் மற்றும் மீளச்செலுத்த வேண்டிய தொகை என்பவற்றின் அடிப்படையிலான மூலதன செலவினத்திற்கு கடுமையான அங்கீகார நடைமுறையை பின்பற்றுதல். |

| அபாயக் காரணி | அபாயம் பற்றிய மதிப்பீடு | அபாயக் கட்டுப்பாட்டு உபாய முறைகள் |
|---|---|---|
| கடன் இடர் | கொள்வனவாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் தொகை கிடைப்பதற்கான தாமதப்படுத்தப்படுவதற்கான நிகழ்தகவு அல்லது உரிய விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீறப்படுவதற்கான சாத்தியக்கூறு. | கொள்வனவாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகளை வசூலிப்பதற்காக உண்ணிப்பான கண்காணிப்பு செயல்முறையை ஏற்படுத்தல்<br><br>நீண்ட காலமாக செலுத்தப்படாத கட்டணங்களுக்கு அல்லது அது தொடர்பாக பதில் எதுவும் தராத கொள்வனவாளர்களுக்கு எதிராக அதிகாரமுள்ள சட்ட தலையீடுகளை ஏற்படுத்தல்<br><br>அரச குத்தகை கட்டணங்களை கூர்ந்து கண்காணித்து அவற்றை தாமதமின்றி செலுத்துதல் |
| முகாமைத்துவ ஆளணி | ஊக்குவித்தல் குறைவாக காணப்படுகின்றமை, தொழில் பற்றிய குறைவான அறிவு என்பவனுவும் குறைந்த விளைவுப் பெருக்கம் மற்றும் வெளியிடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தகின்றன.<br><br>சிறந்த ஊதியம் அல்லது உயர் பதவிகளுக்கு ஏனைய கைத்தொழில்களுக்கு அல்லது கம்பனிகளுக்கு ஊழியர்கள் செல்கின்றமை | பொறுப்பேற்ற செயலமர்வுகள் மற்றும் பயிற்சி பாடநெறிகள்<br><br>நிதிசார் ஊக்குவிப்புகள் மற்றும் நலனோம்புகை நடவடிக்கைகள் என்றவகையில் ஊழியர் நலன்களை மேம்படுத்தல்<br><br>வழமையாக கலந்துரையாடல்கள் ஊடாக தொழிற் சங்கங்களுடன் ஆரோக்கியமான தொடர்புகளை பேணுதல்.<br><br>ஊழியர்களுக்கு உரித்தான நலன்கள் தொடர்பில் அனைத்து ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடனும் இயைந்து செல்வதை உறுதிப்படுத்தல்.<br><br>சாத்தியமான வகையிலும் பொருத்தப்பாட்டுக்கு தக்கதாகவும் சிரேட்ட பதவிநிலைகளுக்கு உள்ளிருந்து பதவி உயர்வுகளை உறுதிப்படுத்தல் |
| ஆதன ஆபத்துகள் | தீ, கொள்ளை, இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்களின் சீர்குலைவு.<br><br>மின்னல்:. வேள்ளம், கிருமிநாசனிகள் விலங்குகள் மற்றும் காரணிகளினால் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்கள் | அனைத்து கட்புலனாகும் ஆதனங்களுக்குமான வரிவான காப்புறுதி காப்பை பெற்றுக்கொள்ளுதல்.<br><br>ஒரு இடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு ஆதனங்களை நகர்த்துவது தொடர்பாக கடுமையான நடைமுறைகளை பின்பற்றுதல்.<br><br>நிலங்களை சுற்றிவர தீ பரவாமல் இருப்பதற்கு தீ இடைவெளி மற்றும் ஏனைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தாபித்தல்.<br><br>தடுப்பு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அடிக்கடி மேற்கொள்ளல்<br><br>நல்ல விவசாய முறைகளை பின்பற்றுதல் |
| மூலதன முதலீட்டு இடர் | எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தை அடைய முடியாத இடர் மற்றும் முதலீட்டுக்கான விரும்பிய பெறுபனவுகளை பெற்றுக்கொள்ள இயலாமை | முதலீட்டு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மீளப்பெறல் பெறுமதி அளவை அடிப்படையாக கொண்டு அங்கீகரிக்கப்பட்ட கடுமையான காரியக் கிரமம் ஒன்றை ஏற்படுத்தல். |
| புகழுரு ஆபத்து | வேலைவாய்ப்பு, வியாபாரம் மற்றும் ஒரு தாபனத்தின் ஏனைய நடைமுறைகள் தொடர்பான கோட்பாடுகள், நடைமுறைகள், தராதரங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் பற்றிய அறிவு போதியதாக இன்மை.<br><br>உற்பத்திகள் நுகர்வோர் அல்லது சந்தை கேள்விகள் மற்றும் தராதரங்களை அடையாமை.<br><br>செயலாற்றுகை, இலக்குகள் மற்றும் தராதரங்கள் தொடர்பான குறைவான அறிவு. | ஊழியர்கள், வங்கியாளர்கள், வாடிக்கையாளர்கள், ஒழுங்குறுத்துகையாளர்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களுடன் வினைத்திறன் மிக்க தொடர்பாடலை உறுதிப்படுத்தல்.<br><br>உற்பத்தி மற்றும் தயாரிப்பு செயன்முறை மற்றும் உடன்பாட்டு தராதரங்களில் தரத்தை உறுதிப்படுத்தல்.<br><br>நிறுவனத்தின் செயலாற்றுகையை தொடராக இலக்குப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மாதாந்த அடிப்படையில் வரவு செலவுத் திட்ட செயன்முறை மற்றும் வரவு செலவுத் திட்ட கட்டுப்பாட்டு பொறிமுறை என்பவற்றை உரியமுறையில் கொண்டிருத்தல்<br><br>பொருட்கள் சேவைகளின் உற்பத்திதிறன் பற்றி நுகர்வோர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளல். |

# கணக்காய்வுக் குழு அறிக்கை

உள்ளக் கணக்காய்வின் வினைத்திறனின் முக்கியமானதொரு காரணியாகவும் மற்றும் கம்பனியில் அதன் நியதிச் சட்டமாகவும் கணக்காய்வுக் குழுவொன்று காணப்படுவதுடன் அது பொதுவாக பணிப்பாளர் சபையின் துணைக் குழுவொன்றாக இருப்பதுடன் அது ஆகக் குறைந்தது நிறைவேற்றுத்தரம் அல்லாத மூன்று பணிப்பாளர்களையும் உள்ளடக்குகின்றது. அக்குழுவின் தலைவர் திறைசேரியின் பிரதிநிதியொருவர் அல்லது நிதி முகாமை திறன்களைக் கொண்ட ஒரு நபராகவும் இருக்கின்றார். கணக்காய்வுக் குழுவானது ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வழக்கமாக கூட வேண்டியிருப்பதுடன் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களுக்கான அழைப்பாளராக பிரதான உள்ளக் கணக்காய்வாளர் தொழிற்படுகின்றார்.

**கணக்காய்வுக் குழுவின் நோக்கங்கள் பின்வருமாறு :**

- உள்ளக் கணக்காய்வு அலகின் பொறுப்புக்களை தீர்மானித்தலும் உள்ளக் கணக்காய்வுத் திட்டத்தை மீளாய்வு செய்தலும்.
- கம்பனியின் சகல செயற்பாடுகள் தொடர்பாகவும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்து மதிப்பீடு செய்தல்.
- கணக்காய்வாளர் நாயகத்துடன் தொடர்புகளைப் பேணுதலும் கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைக் கடிதங்களை பின்தொடர்தலும்.
- கம்பனியின் அலுவல்கள் நியதிச்சட்டங்கள், ஒழுங்குவிதிகள், சட்டவிதிகள் மற்றும் சுற்றுநிறுபங்களுடன் இணங்கிக் காணப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தல்.
- நிவாரண நடவடிக்கைக்காக நிதிக் கூற்றுக்கள், உள்ளக / வெளியக கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் மகாமைக் கடிதங்களை மீளாய்வு செய்தல்.
- பொதுப் பொறுப்பு முயற்சிகள் குழுவின் சிபாரிசுகள் / வழிகாட்டல்களை அமுல்படுத்தும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.
- கணக்கீட்டு ∴ கணக்காய்வு நியமங்களுடனான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.

நல்லாட்சி தொடர்பில் பொதுப் பொறுப்பு முயற்சிகள் குழுவின் சுற்றறிக்கை இல. 55 மற்றும் பொதுத் தொழில்முயற்சிகளுக்கான வழிகாட்டல்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் கணக்காய்வுக் குழு திறைசேரியின் பிரதிநிதியொருவரை குழுவின் தவிசாளராக கொண்டிருப்பதுடன் நிறைவேற்றுத் தரமல்லாத மூன்று பணிப்பாளர் சபை அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது.

**கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழு கூட்டப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு,**

| கணக்காய்வு மற்றும் முகாமைக் குழு அங்கத்தவர்களின் பெயர் | யூன் 11ஆம் திகதி | செப்தெம்பர் 24 ஆம திகதி | நவெம்பர் 01 ஆம் திகதி |
|---|---|---|---|
| திரு. பி.பீ.எஸ்.சீ. நோனிஸ் | ✓ | ✓ | ✓ |
| திருமதி. அருணி எஸ் ரணசிங்க | ✓ | ✓ | ✓ |
| திரு. கே.ஏ. ஜீவந்த | ✓ | ✓ | - |

மேலே உள்ள குழு அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக, தொழிற்பாட்டு பணிப்பாளர், வரையறுத்த இலங்கைப் பெருந்தோட்டக் கம்பனியின் பொது முகாமையாளர் மற்றும் சில சிரேட்ட முகாமைத்துவ அங்கத்தவர்கள் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர். கணக்காய்வு அத்தியட்சகர்களில் ஒருவர் அவதானிப்பாளராக கூட்டங்களில் பங்குபற்றுகின்றார், அத்தோடு எம்.∴.எஸ் கோபரேடிவ் எட்வைசரி சேர்விசஸ்- சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் செயலாளர் கணக்காய்வுக் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார். கணக்காய்வுக் குழுவின் கூட்ட அழைப்பாளராக பிரதான உள்ளக கணக்காய்வு அலுவலர் திரு. விமல் ஹேமசந்திர தொழிற்படுகின்றார்.

**கணக்காய்வுக் குழுச் செயற்பாடுகளின் சுருக்கம்**

2019 ஆம் ஆண்டின் போது, பின்வரும் கடமைகளை சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி நிறைவேற்றியுள்ளது.

- மூன்று கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை ஏற்பாடு செய்தது.
- 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்வு செய்கின்றமை
- முகாமையினால் வழங்கப்படுகின்ற பதில்கள் மற்றும் உள்ளக / வெளியக அறிக்கைகளையும் முகாமை எடுத்த நிவாரணச் செயற்பாடுகளையும் மீளாய்வு செய்து கலந்துரையாடுதல்
- உள்ளக் கணக்காய்வு முறைமைகள், கிரய வினைத்திறன், விவசாய செயற்பாடுகளின் முன்னேற்றம் மற்றும் நியதிச்சட்டச் செலவீனங்கள் முறையாக கொடுத்து தீர்க்கப்பட்டுள்ளதா என்பது போன்ற விடயங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து மதிப்பீடு செய்தல்.

மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 2020 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுகப் குழுவின் அங்கத்தவர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்

1) திரு. எச்.ஜீ. சுமணசிங்க
2) திருமதி. அருணி எஸ் ரணசிங்க
3) திரு என்.கே.கே. ராஜசிங்க

**எச்.ஜீ. சுமணசிங்க**

தலைர் - கணக்காய்வு மற்றும் முகாமைக் குழு

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

சிலா/ பெருந்தோட்ட நிறுவனத்தின் 2019 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றினையும் ஆண்டறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கையையும் நிறுவனம் சார்பாக சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை பெருமகிழ்ச்சி அடைகின்றது.

**சட்ட நிலை**

1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பகிரங்க கம்பனிகளுக்குள் அரச உடைமை வியாபார பொறுப்பேற்றல் சட்டம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனங்களின் மாற்றத்திற்கமைய 18 யூன், 1992 ஆந் திகதி 719/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்த மானியினால் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க உடைமையாக்கப்பட்ட கம்பனி. புத்தளம் மாவட்டத்தினுள் JEDB (IV)இனால் உடைமையாக்கப்பட்டுள்ள எல்லா தோட்டங்களையும் உள்ளடக்குகின்ற எல்லா பயிர்ச்செய்கை சொத்துக்கள், அதி விசேட வர்த்தமானிக்கமைய CPLஇற்கு அளிக்கப்பட்டுள்ளதுடன் குத்தகை ஒப்பந்தங்களின் எண்ணிக்கைக்கமைய 53 ஆண்டுகளுக்காக துநுனுடீமற்றும் CPLஇற்கிடையில் குத்தகை ஒப்பந்தங்கள் பின்னர் கைசாத்திடப்பட்டது.

நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட பிராதான அலுவலகம் இல. 165, புத்தளம் வீதி, சிலாபம் மற்றும் இல. 191, ஜே.ஆர். ஜயவர்தன கேந்திரம், தர்மபால மாவத்தை, கொழும்பு 07 இலும் அமைந்துள்ளது. தோட்டங்கள் புத்தளம், குருணாகலை, கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ளன.

கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறு 08 தோட்டங்களின் கீழ் பரிபாளிக்கப்படுகின்றது.

- பளுகஸ்வெவ தோட்டம்
- சிலாப பிரதேச தோட்டங்கள்
- தம்பபன்னி பிரதேச தோட்டங்கள்
- மங்கள எளிய பிரதேச தோட்டங்கள்
- திவுலபிட்டிய பிரதேச தோட்டங்கள்
- மாதம்பை பிரதேச தோட்டங்கள்
- பிங்கிரிய பிரதேச தோட்டங்கள்
- நிக்கவரடிய பிரதேச தோட்டங்கள்

**பிரதான செயற்பாடுகள்**

சிலா/பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதான செயற்பாடபானது பயிர்ச்செய்கை, தென்னை உற்பத்தி மற்றும் விற்பனை, மரமுந்திரிகை, ஏனைய விவசாய உற்பத்தி மற்றும் பாற்பண்ணை.

**நிதிக்கூற்று**

நிறுவனத்தின் பனிப்பாளர் சபை உறுப்பினர்களினால் 13 ஜுலை 2020 அன்று அங்கீகரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களாவன, பக்கம் 44 முதல் 82 வரை குறிப்பிடப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளரின் அறிக்கை**

கணக்காய்வாளர் தலைமையகத்தின் கணக்காய்வாளர் கூற்றானது நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களில் பக்கம் 35-43 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஏற்று நடை முறைப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கம் 48-61 களில் இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்போது ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவுமில்லை.

**தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு**

எதிர்காலத்தில் அதன் இயக்கங்களைத் தொடர்வதற்கு போதிய வளங்களை நிறுவனம் கொண்டுள்ளதையிட்டு பணிப்பாளர் சபையானது திருப்தியடைகின்றது. இதற்கமைய நிதிக்கூற்றுகள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றன.

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

2019 இல் நிறுவனத்தின் பணியாற்றிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் கீழ்வருமாறு

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் - 2019**

| | |
|---|---|
| திரு. வீ.கே.சீ ஹேரத் (14.07.2016 முதல் 31.12.2019) | தலைவர் |
| திரு. எம்.கே.பீ செனவிரத்ன (08.05.2015 முதல் 05.02.2020) | நிறைவேற்று பனிப்பாளர் |
| திரு. பீ.சீ விஜயவர்தன (28.02.2019 முதல் 05.02.2020) | செயற்பாட்டு பனிப்பாளர் |
| திரு. பீ.பீ.எஸ்.சீ நொனிஸ் (05.09.2016 முதல் 03.02.2020) | பனிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி |
| திரு. ஏ. லக்கதாஸ (19.05.2016 முதல் 28.02.2019) | பனிப்பாளர் |
| திருமதி. அருனி எஸ் ரணசிங்க (28.02.2019 முதல் 05.02.2020) | பனிப்பாளர் / அமைச்சு பிரதிநிதி |
| திரு. ஜே.பீ களுஆரச்சி (31.01.2019 முதல் 05.02.2020) | பனிப்பாளர் |
| திரு. ஆனந்த புஷ்பகுமார (19.03.2019 முதல் 05.02.2020) | பனிப்பாளர் |
| திரு. எச்.எம்.என்.சீ ஹேரத் (20.03.2015 முதல் 31.01.2019) | பனிப்பாளர் |
| டாக்டர். எஸ் விஜயகுணவர்தன (24.07.2018 முதல் 28.02.2019) | பனிப்பாளர் |

**நிகழ்கால பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| திரு. ஆர்.டப்.எம்.ஜே.எஸ். ஆர் பெரேரா (31.12.2019 முதல்) | தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி |
| திரு. எச்.ஜீ சுமனசிங்க (03.02.2020 முதல்) | பனிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி |
| திருமதி. அருனி எஸ் ரணசிங்க (14.02.2020 முதல் | பனிப்பாளர் / அமைச்சு பிரதிநிதி |
| திரு. என்.கே.கே ராஜசிங்க (05.02.2020 முதல்) | பனிப்பாளர் |
| திரு. ஓ.பீ.கே பத்திரனகே (05.02.2020 முதல்) | பனிப்பாளர் |
| திரு. அஜந்த முனமலே (05.02.2020 முதல்) | பனிப்பாளர் |
| திரு. ஐ.எஸ்.ஜே.பீ குணவர்தன (05.02.2020 முதல்) | பனிப்பாளர் |
| திரு. டப்.டப்.ஏ.என்.டீ.ஏ பிரனாந்து (05.02.2020 முதல்) | பனிப்பாளர் |

**கணக்காய்வுக் குழு**

சபையின் பின்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவில் கடமையாற்றிய வருடத்தின்போது மூன்று மதிப்பீடுகளை நடத்தினர்

**கணக்காய்வுக் குழு - 2019**

| | |
|---|---|
| திரு. பீ.பீ.எஸ்.சீ. நொனிஸ் | தலைவர் (AMC) |
| திருமதி. அருணி ஷானிகா ரணசிங்க | உறுப்பினர் (AMC) |
| திரு. ஜே.பீ. களுஆரச்சி | உறுப்பினர் |
| கணக்காய்வாளர் தலைமையகம் | கண்காணிப்பாளர் |

**செயல் நிறைவேற்றுகை மீளாய்வு**

ஆண்டின் போது நிறுவனத்தில் செயல் நிறைவேற்றுகை பற்றிய மீளாய்வும் முக்கியமான முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் தலைவரின் மீளாய்வு மற்றும் முகாமைத்துவ மீளாய்வு மற்றும் நிதி மீளாய்வின் கீழ் வழங்கப்பட்டுள்ளன

**வருமானம்**

2019 ஆம் ஆண்டுக்கான நிறுவனத்தின் வருமானம் ரூபா. 445 மில்லியன்களாகும் (2018 - ரூபா. 350 மில்.) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 27% அதிகரித்துள்ளது. இது தொடர்பான தரவுகள் குறிப்பு இல. 19 இல் காட்டப்பட்டுள்ளது. இச்சாதகமான பெறுபேறுக்கு விளைச்சல் அதிகரிப்பே பிரதான காரணமாகும்.

ஆண்டுக்கான ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா. 93 மில். (2018 - ரூபா. 72 மில்.)

ஆண்டுக்குள் ஈட்டப்பட்ட வட்டி வருமானமானது ரூபா. 11 மில். இது தொடர்பான தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 23 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிதிப் பெறுபேறு**

நிறுவனத்தின் வரிக்கு முன் இலாபமானது ரூபா. 60.9 மில். ஆகும். இது 2018 ஆம் ஆண்டில் - ரூபா. (35.1 மில்) நட்டமாகும்

நிதிப் பெறுபேறுகள் தொடர்பான தகவல்கள் முற்றடக்க வருமானக் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிலையான சொத்துக்கள்**

2019 ஆம் ஆண்டில் நிறுவனமானது ரூபா. 60.5 மில். (2018 - ரூபா. 80 மில்) கீழ் / புதிய பயிர்ச்செய்கையில், முதிர்வுறாத பயிர்ச்செய்கைகள் முகாமைத்துவத்திலும் மற்றும் ரூபா. 2.3 மில். களை ஆதனம், பொறி, உபகரணங்களிலும் முதலீடு செய்தது. (2018 - ரூபா. 11.5 மில்).

நடைமுறை அல்லாத சொத்துக்களில் தேறிய புத்தகப் பெறுமதியானது (ஆதனம், பொறி, உபகரணங்கள், குத்தகை உரிமை, உயிரியல் ஆதனங்கள் etc.....) 2019 இல் ஐந்தொகை தினத்தில் ரூபா. 1,178 மில். (2018 - ரூபா. 1,121 மில்) ஆகும். இது தொடர்பான தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 4 - 8 மற்றும் 11.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறுங்கால முதலீடுகள்**

நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான குறுங்கால முதலீடுகளாவன ரூபா. 105 மில். களுடன் ஒப்பிடும் போது 2018 இல் ரூபா. 80.6 மில்லியன்கள் ஆகும். இது தொடர்பான தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 12 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஒதுக்கங்கள்**

நிறுவனத்தின் ஒதுக்குகனை பிரதிநிதித்துவப்படுத்தி 31.12.2019 இல் நிறுத்தி வைத்த இலாபங்கள் ரூபா. 617 மில். மற்றும் தேக்கு மர ஒதுக்குகள் 131 மில்லியன்களும் ஆகும்.

ஒதுக்கல்களில் நகர்வுகளும் ஆக்கக்கூறுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உரிமையாண்மை மாற்றல் கூற்றுக்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன.

**வரிவிதிப்பு**

நிறுவனமானது வரி விதிக்கக்கூடிய வருமானத்தில் 14% வரி செலுத்த பொறுப்புகொண்டுள்ளது. எவ்வாறாயினும், ஏப்ரல் 1, 2019 முதல் அமுல்படுத்தப்படும் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு வருவாய் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய திருத்தங்களுக்கு உட்பட்டு வேளாண்மை விவசாயத்திற்கு வரி விலக்குக்கு நிறுவனம் உரிமை பெறும். வரிவிதிப்பு பற்றிய மேலதிக விபரங்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 24 இல் விபரிக்கப்பட்டுள்ளது.

**கூறப்பட்ட மூலதனம்**

31.12.2019 இல் மொத்த கூறப்பட்ட மூலதனமாக ரூபா. 200,000,010. இது சாதாரண பங்குகள் 20,000,001 சாதாரண பங்குகள் உட்பட பொன்னான கங்கொன்றையும் உள்ளடக்கியுள்ளது. வருடத்துக்கும் பங்கு வழங்கள்கள் எதுவும் இடம்பெறவில்லை.

**மூலதனக்கடப்பாடுகளும் வருநிகழ்வான பொறுப்புக்களும்.**

வருநிகழ்வான பொறுப்புக்கும் மூலதனக் கடப்பாடுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இல. 28இல் விபரிக்கப்பட்டுள்ளன.

ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள். ஐந்தொகை திகதிக்கு பின்னர் நிறுவனத்தில் பொருள் ரீதியான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய குறிப்பு இல. 26 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு புறம்பாக வேறெந்த நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

**ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஆர்வங்கள்**

நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களில் குறிப்பு 27 கு மேலதிகமாக பணிப்பாளர்கள் நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வங்களை

கொண்டிறுக்கவில்லை.

**பணிப்பாளர்களின் பங்குகள்**

நிறுவனத்தின் பணிப்பாளர்களோ அல்லது அவர்களின் வாழ்க்கை துணையினரோ பங்குகள் எதனையும் வைத்திருக்கவில்லை.

**தொழில்வாய்ப்பு**

நிறுவனமானது வேலைவாய்ப்பு உள்ளிட்ட அதனுடன் தொடர்புடைய தெரிவுசெய்தல், பயிற்சி, பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆகியவற்றில் சமமான வாய்ப்பு கொள்கையினை நடைமுறைப்படுத்தி வருவதுடன் நிறுவனத்தின் தெறிவுகள் யாவும் நிறுவனத்தின் நீடுறுதியான நன்மையை கருத்தில்கொண்டு அரசாங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுக்கு விதிகளுக்கு ஏற்ப தகுதியின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. நிறுவனம் பால்நிலை, இனத்துவம், சமயம், திருமண அந்தஸ்த்து அரசியல் அபிப்பிராயம் மற்றும் உடல் ரீதியான அங்கவீனம் ஆகியவற்றினை கருத்தில் கொள்ளாது நிறுவனத்தின் நலனுக்கு இயைபுற்று சமமான வாய்ப்பு எனும் கொள்கையை பின்பற்றி வருகின்றது.

**நியதிச்சட்ட கொடுப்பனவு**

பனிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கு எட்டிய வகையில் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சகல வரிகள், தீர்வைகள், கொடுப்பனவுகள், நிறுவனத்தின் ஊழியர்கள் சார்பில் அவர்களுக்காக செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் வரிகள் போன்றவற்றையும் ஏனைய நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டிய சகல நியதிச்சட்ட கொடப்பனவுகளையும் ஐந்தெகை திகதியில் உள்ளவாறாக செலுத்தியுள்ளனர், அல்லது பொருத்தமானவாறாக அதற்கான ஏற்பாடுகளை வழங்கியுள்ளனர்.

**கணக்காய்வாளர்கள்**

2019 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டது. கணக்காய்வாளர் கருத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் பக்கம் 35-43 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வருடாந்த பொதுக்கூட்டம்**

வருடாந்த பொதுக்கூட்டமானது 2020 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி பிப 1.30 அளவில் பளுகஸ்வெவ தோடத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வருடாந்த பொதுக்கூட்டத்துக்கான அறிவித்தலும் பெறுகைப்படிவமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பிலும்

...............................................................

திரு. ஆர்.டப்.எம்.ஜே.எஸ்.ஆர். பெரேரா
(தலைவர் /பிரதான நிறைவேற்று அதிகாரி)

..............................................................................

பெரு நிறுவன ஆலோசணை சேவைகள் தனியார் நிறுவனம்
செயலாளர்கள் - சிலா/ பெருந்தோட்ட நிறுவனம்
கொழும்பு

# பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிதி அறிக்கைப்படுத்தல் தொடர்பில் தாம்

கொண்டுள்ள பொறுப்பை சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது. நிறுவனத்தின் கணக்காய்வாளரான கணக்காய்வாளர் தலைமையகம், பொறுப்புக்கள் தொடர்பில் தங்களது அறிக்கையில் சுருக்கமாக விளக்கியுள்ளனர்.

இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 2019 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடையும் வருடத்திற்கான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு இணங்கத் தயாரித்துள்ளதுடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க தகவல்களை அதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

நிறுவனம் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தியுள்ளது எனவும் அம் முறைகளும் கணக்கீட்டுக் கொள்கைப்படுத்தல்களும் இந்நிதிக் கூற்றைத் தயாரிக்கும் போது எப்போதும் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

இத்தர நியமங்கள் மாற்றமடையும் சந்தர்ப்பங்கள் ஏதும் இருப்பின் அவற்றை உரியமுறையில்

சுட்டிக்காட்டி அதற்கான நியாயங்கள் கூறப்பட்டுள்ளன. யதாரத்த பூர்வமான முறையிலும் நியாயமான முறையிலும் அனைத்துத் தீர்மானங்களும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களும் மதிப்பீடுகளும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் கூறும் பொறுப்பை பணிப்பாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். நிறுவனம் தமது நிதிநிலைமையையும் உண்மைத் தன்மையையும் காட்டும் கணக்கீட்டு அறிக்கைகளை உரிய முறையில் பேணிவரப்படும் என பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது. ஆண்டறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மூலம் நிறுவனம் நாளாந்த செயற்பாடுகள் உண்மையான முறையிலும் நியாமான முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றனஎன்றுபணிப்பாளர் சபை 31 டிசம்பர் 2019 இல் உறுதிப்படுத்துகின்றது.

நிறுவனத்தின் உள்ளக நிர்வாகத் தொகுதி தொடர்பான முழுமையான பொறுப்பு பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திரவத்தன்மை தொடர்பான பிழையான கூற்றுக்கள் மற்றும் மோசடிகளை முழுமையாக நடைமுறைப்படுத்தி உள்ளகச் சுருக்கம், உள்ளகக் கணக்காய்வு, நிதிமற்றும் வேறு நிர்வாக முறைகள் மூலம் ஏற்படக்கூடிய திரவத் தன்மை தொடர்பான பிழையான கூற்றுக்கள் மற்றும் மோசடிகளை அல்லது நியாயமான காலத்தினுள் அறிந்து கொள்வதற்கு முடியுமான முறையில் அனைத்துச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கும் கொடுக்கல் வாங்கல்களை உரியமுறையில் காட்டுவதற்கு முடியுமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் உறுதிப்படுத்துகின்றது. எதிர்வரும் பலவருடங்களில் தொடர்ச்சியாகப் பேணி வருவதற்கான வளங்கள் போதியளவு உள்ளது எனவும் பணிப்பாளர் சபை கருதுகின்றது. அத்துடன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கின்ற போது தொடர்ச்சியாக மாற்றமின்றிப் பின்பற்றப்படும்.

நிறுவனத்தின் கணக்காய்வாளர்களான கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் - பட்டயக் கணக்காளர்கள் தனது பொறுப்பை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்துத் தகவல்களையும் ஒத்துழைப்பையும் பணிப்பாளர் சபை வழங்கியது.

கணக்காய்வாளர்கள் அனைத்து நிதிக் கூற்றுக்களையும் நிதி அறிக்கைகளையும் உரிய தரவுகளையும் பரிசீளித்து தங்களது சுதந்திரமான கருத்துக்களைச் சமர்ப்பித்துள்ளனர். அவ்வறிக்கை இதில் உள்ளடக்கப்படட்டுள்ளது.

நிறுவனம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது செலுத்த வேண்டியிருந்து கண்டறியப்பட்ட அனைத்து வரிகளும் நிறுவனத்தின் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளும் நிறுவனம் செலுத்தவேண்டிய ஏனைய நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன அல்லது செலுத்துவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் உறுதியளிக்கின்றனர்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பெரு நிறுவன ஆலோசனை சேவைகள் தனியார் நிறுவனம்
செயலாளர்கள் - சிலா / பெருந்தோட்ட நிறுவனம்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல. } எனது இல: பீஎல்ஏ/ஏ/சீபீஎல்/01/2019/15
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி }
Date

திகதி : 2020 செப்தம்பர் 15

தலைவர்,
சிலாபம் பிளான்டேஷன்ஸ் லிமிடட்.

**சிலாபம் பிளான்டேஷன்ஸ் லிமிடட் இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் பிளான்டேஷன்ஸ் லிமிடட்டின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் ஆயட்காலம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக 2018 ஆம் ஆண்டு வரை முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து பூர்த்தி செய்யப்பட்ட ஆனால் ரூபா 130.3 கிரயமான 08 வாகனங்கள் மற்றும் 18 மோட்டார் சைக்கில்கள் மற்றும் கமநல வாகனங்கள் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற நிலைமையில் காணப்பட்ட போதும் அம்மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் சீரமைத்து சரியான முகப்பு பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையால் 1992 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்ட 5,733 ஹெக்டேயர் காணிகளில் அத்து மீறிய கைப்பற்றுதல்கள், பொது வசதிகளுக்காக ஒதுக்கீடு செய்தல், அரசின் தேவைகளுக்காக ஒதுக்கீடு செய்தல் போன்ற காரணங்கள் மீது கம்பனிக்கு இழக்கப்பட்ட ரூபா 4.6 மில்லியன் பெறுமதியான 184.15 ஹெக்டேயர் காணிகளை கணக்குகளிலிருந்து அகற்றுவதுற்கு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலம் தொடர்பாக ஆய்வொன்றினை மேற்கொள்ளாமல் கம்பனியால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ரூபா 4.45 மில்லியன் செலவில் புத்தளம், மங்கலஎலிய தோட்டத்தில் 18.75 ஹெக்டேயர் அளவிலான காணியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 3,850 மர முந்திரிகை மரங்கள் பயிர்ச்செய்கை 2015 ஆம் ஆண்டு முதல் முழுமையாக பாதிக்கப்பட்டிருந்த போதும் அதற்குரிய சீராக்கங்கள் கணக்குகளில் மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இச்செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ

தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டல் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டல் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பன ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களில் எழும் தாக்கத்தினை தவிர கணக்காய்விற்காக தேவையான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையில் தென்படுகின்ற வகையில் முறையான நிதி அறிக்கைகள் கம்பனியால் பேணப்படுகின்றன.

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகளச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii)பிரிவு மற்றும் 38 ஆம் ஆம் பிரிவின் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனி சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் கீழே காட்டப்படுகின்ற வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் நிறுவகத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமைக்கு புறம்பாக தொடர்பு உள்ளதாகவும்

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாது செயற்பட்டுள்ளதாகவும்

| சட்டங்கள் விதிகள்/ ஏற்பாடுகளுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் ஏறபாடுகளுக்கு முரணாக கம்பனியின் சிரேஷ்ட நிலை மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1.72 மில்லியனான பாதிடப்பட்ட படிகள், ரூபா 2.12 மில்லியனான சாரதிப் படிகள் மற்றும் நடுத்தர மற்றும் கீழ் மட்டத்தின் ஒன்பது முகாமையாளர்களுக்காக ரூபா 438,934 தொகையான பிரயாணப் படிகள் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) 2015 மே 25 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | தொலைபேசி படிகளுக்காக தகைமை பெறாத உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு ரூபா 102,167 ஆன தொலைபேசி படியொன்ற வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) 2015 மே 25 ஆந் திகதிய 012/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.3.2.1 ஆம் பந்தி | வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை மிகைத்து ரூபா 352,690 ஆன எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஈ) 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மை சுற்றறிக்கையின் 2.14.1 வழிகாட்டல் | KV-4068 ஆம் இலக்க வாகனம் ரூபா 488,604 ஆம் தொகை செலவில் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதும் அதற்காக வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியிருப்பதாகவும்

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் வளங்கள், காலவரையறைக்குள் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை இடம்பெற்றிருக்கவில்லையெனவும் இணங்கியொழுகவும், சிக்கனமாகவும் வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டு பயன்படுத்தவில்லையெனவும்,

(அ) 2019 யூலை 30 ஆந் திகதி சிலாபம் மற்றும் பலுகஸ்வெவ ஆகிய இரண்டு விற்பனை நிலையங்களிலும் பலுகஸ்வெவ மரமுந்திரிகை தயாரிப்பு நிலையத்திலும் பதிவேடுகளிலுள்ள இருப்பு மீதிகள் மற்றும் பௌதீக இருப்பு மீதிகளுக்கு இடையே ரூபா 551,581 பெறுமதியான 259 கிலோ கிராம் மரமுந்திரிகை பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் பலுகஸ்வெவ மற்றும் தலைமை அலுவலகத்தில் ரூபா 76,860 பெறுமதியான 200 தேங்காய் எண்ணெய் போத்தல்கள் பற்றாக்குறையாக காணப்பட்டன. 2020 யூலை 31 ஆந் திகதிவரையிலும் இப்பற்றாக்குறைகளுக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் சிரேஷ்ட மட்டத்திலும் மூன்றாம் நிலை தரத்தின் 17 பதவிகளில் 35 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தற்போதய சேவை தேவைப்பாட்டின் பேரில் பதவிகள் மற்றும் ஊழியர் எண்ணிக்கை என்பவற்றை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பிரதான உள்ளக கணக்காய்வாளர், உதவி முகாமையாளர்கள், உதவிக் கணக்காளர்கள் போன்ற பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகரித்துக் கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இரண்டு சாரதிகளும் இரண்டு தொழிலாளர்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் யூலை 05 ஆந் திகதி பலுகஸ்வெவ தோட்டத்தில் நடைபெற்ற விழாவொன்றுக்குரிய பத்திரிகை விளம்பரத்தை வெளியிடல்,

உணவு பானங்கள், பரிசுகள் மற்றும் ஏனைய செலவினங்களாக ரூபா 707,991 தொகையும் இவ்விழாவிற்காக சமூகமளித்த நாட் சம்பளத்தை பெறும் 616 தோட்ட ஊழியர்களுக்காக ரூபா 462,000 ஆன நாட் சம்பளமும் கம்பனியால் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) கம்பனிக்கு கடன் வழங்குவதற்கும் இங்கு குறிப்பிடப்பட்ட கூட்டுத்தாபனங்கள், கம்பனிகள் மற்றும் அமைச்சுக்களுக்கும் கடன் பெற்றுக்கொள்வதற்கு சட்டரீதியான உரித்தொன்று இல்லாமல் இருந்த போதும் கம்பனியால் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, எல்கடுவ பெருந்தோட்ட கம்பனி, இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம் என்பவற்றிற்கு 2010 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 105 மில்லியன் கடன் தொகையும் மீளாய்வாண்டின் இறுதியில் அதற்காக உரிய வட்டியுடன் மொத்தம் ரூபா 164.5 மில்லியனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கையானது சிங்கள மொழி மூலமான அறிக்சையின் தமிழ் மொழிமூல மொழிபெயர்ப்பாகும்.

## வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்
## முற்றடக்கிய வருமானக்கூற்று

| டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான | குறிப்பு | 2019 ரூபா. | 2018 ரூபா. |
|---|---|---|---|
| வருமானம் | 19 | 445,502,499 | 350,021,923 |
| விற்பனை கிரயம் | 20 | (356,416,322) | (350,229,446) |
| **மொத்த இலாபம்** | | **89,086,177** | **(207,522)** |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் மற்றும் கிடைப்பனவுகள் | 21 | 93,596,807 | 71,737,039 |
| நிர்வாக செலவுகள் | 22 | (92,731,503) | (86,058,557) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான இலாபம் | | 89,951,481 | (14,529,041) |
| தேறிய நிதி வருமானம் / (செலவுகள்) | 23 | (29,043,670) | (20,649,655) |
| **வரிக்கு முன் இலாபம்** | | **60,907,811** | **(35,178,696)** |
| வரிச் செலவுகள் (ஒதுக்குகள்) | 24 | (13,511,396) | 2,876,786 |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **47,396,415** | **(32,301,910)** |
| **ஏனைய முற்றடக்க வருமானம்** | | | |
| திட்டவட்டமான ஊழியப் பயன்திட்ட மதிப்பீட்டு பெறுகை / (இழப்பு) | 16 | 2,043,520 | (4,339,689) |
| **ஆண்டுக்கான மொத்த முற்றடக்க வருமானம். வரிக்கு பின்** | | **49,439,935** | **(36,641,599)** |
| பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்பு (ரூபா.) | 25.2 | 2.37 | (1.62) |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.

48 முதல் 82 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**சிலாபம்.**
**13.07.2020**

**குறிப்பு:**
**இவ்வாண்டறிக்கையில் உள்ள நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன ஆங்கில மொழி அறிக்கையின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.**

## வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்நிதி நிலைமைக் கூற்று

| டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான | குறிப்பு | 2019 ரூபா. | 2018 ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடை முறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| JEDB தோட்டங்களின் வெற்றுக் காணிகளுக்கான குத்தகை உரிமை | 04 | 68,422,539 | 71,111,261 |
| JEDB தோட்டங்களின் குத்தகைக்குப் பெறப்பட்ட ஆதனம்,பொறி,உபகரணம் (காணிப் பயன்பாட்டு உரிமை மற்றும் குத்தகையிலான உயிரியல் ஆதனங்கள் தவிர) | 05 | 857,864 | 893,651 |
| JEDB பெருந்தோட்டங்களின் குத்தகை கொள்ளப்பட்ட உயிரியல் ஆதனங்கள் | 06 | 18,374,312 | 21,178,083 |
| குத்தகை சொத்துக்களை முன்னேற்றுதல் | 7.1 | 898,794,943 | 848,924,079 |
| உயிரியல் ஆதனங்கள் - கால்நடைகள் | 7.2 | 15,405,500 | 18,694,952 |
| நுகரத்தக்க உயிரியல் ஆதனங்கள் | 7.3 | 89,830,484 | 57,845,660 |
| குத்தகையில்லாத ஆதனம், பொறி, உபகரணங்கள் | 08 | 80,669,983 | 95,346,553 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 11.1 | 5,881,336 | 6,864,344 |
| | | 1,178,236,961 | 1,120,858,583 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 09 | 67,383,469 | 56,610,036 |
| வியாபார மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் | 10 | 42,760,113 | 27,450,756 |
| வருமான வரி கிடைப்பனவுகள் | | 8,535,353 | 6,001,154 |
| அரசாங்க தொழில்முயற்சிகளுக்கான கடன் வசதிகள் | 11 | | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 11.1 | 3,588,140 | 3,705,156 |
| ஏனைய நடை முறை சொத்துக்கள் | | 638,557 | 1,715,111 |
| குறுங்கால முதலீடுகள் | 12 | 105,000,000 | 80,624,822 |
| கையிருப்பாகவும் வங்கியிலும் உள்ள காசு | | 6,185,420 | 8,359,059 |
| | | 234,091,051 | 184,466,095 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,412,328,012** | **1,305,324,678** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 13 | 200,000,010 | 200,000,010 |
| நிறுத்தி வைத்த உழைப்புக்கள் | | 617,167,866 | 612,984,504 |
| மர (Timber) ஒதுக்கங்கள் | | 130,654,898 | 95,398,324 |
| மொத்த உரிமையாண்மை | | 947,822,774 | 908,382,839 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்களும் பிற்போடப்பட்ட வருமானங்களும்** | | | |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புக்கள் | 14 | 111,959,742 | 98,448,346 |
| பிற்போடப்பட்ட கொடைகள் மற்றும் மானியங்கள் | 15 | 5,822,837 | 6,011,377 |
| ஓய்வுதியப் பயன் கடப்பாடுகள் | 16 | 89,414,823 | 82,684,532 |
| JEDB/SLSPC பெருந்தோட்ட குத்தகைக் கொடுப்பனவுப் பொறுப்புக்கள் | 17 | 100,296,963 | 102,696,807 |
| | | 307,494,365 | 289,841,062 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 18 | 154,611,029 | 104,793,235 |
| JEDB / SLSPC பெருந்தோட்ட குத்தகைக் கொடுப்பனவுப் பரிப்புக்கள் | 17 | 2,399,844 | 2,307,542 |
| | | 157,010,873 | 107,100,777 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பரிப்புக்கள்** | | **1,412,328,012** | **1,305,324,678** |

48 முதல் 82 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**உறுதிப்படுத்துதல்**

2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றேன்

**திரு. ஆர்.எம்.ஆர்.பீ. ரத்நாயக்க**
சிரேஷ்ட கணக்காளர்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முன்னிலைப்படுத்தல் என்பன பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்காகவும் அவர்கள் சார்பாகவும் அங்கீகாரமளிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது.

**திரு. ஆர்.டீ.எம்.ஜே.எஸ்.ஆர். பெரேரா**
(தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி)

**திரு. என்.கே.கே. ராஜசிங்க**
(பணிப்பாளர்)

**சிலாபம்.**
**13.07.2020**

**குறிப்பு:**
**இவ்வாண்டறிக்கையில் உள்ள நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பன ஆங்கில மொழி அறிக்கையின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.**

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று

31 டிசம்பர் 2019 அன்று முடிவடைந்த ஆண்டுக்கானது,

| விபரம் | கூறப்பட்ட மூலதனம் ரூபா. | Timber மர ஒதுக்குகள் ரூபா. | திரண்ட இலாபம் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|---|
| 2018 ஜனவரி 01 அன்று இருந்தவாறான மீதி | 200,000,010 | 82,327,840 | 662,696,587 | 945,024,437 |
| 2018 ஆம் ஆண்டுக்கான இலாபம் | | | (32,301,910) | (32,301,910) |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் | - | | (4,339,689) | (4,339,689) |
| மர (Timber) ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது. | - | 13,070,485 | (13,070,485) | |
| 2018 டிசம்பர் 31 அன்று இருந்தவாறான மீதி | **200,000,010** | **95,398,324** | **612,984,504** | **908,382,839** |
| 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கள்கள் | - | | (10,000,000) | (10,000,000) |
| ஆண்டுக்கான இலாபம் | | | 47,396,415 | 47,396,415 |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் | | | 2,043,520 | 2,043,520 |
| மர (Timber) ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது. | | 35,256,574 | (35,256,574) | - |
| மொத்த முற்றடக்க வருமானங்கள் | 200,000,010 | 130,654,898 | 617,167,866 | 947,822,774 |
| **2019 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி** | **200,000,010** | **130,654,898** | **617,167,866** | **947,822,774** |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.

**சிலாபம்.**
**13.07.2020**

| டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான | 2019 ரூபா. | 2018 ரூபா. |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 60,907,811 | (35,178,696) |
| **சீராக்கங்கள்:** | | |
| - பெறுமானத் தேய்வுகள் / பெறுமான இழப்புக்கள் | 33,124,829 | 34,179,685 |
| - மானியங்களுக்கான பெறுமான இழப்புக்கள் | (188,540) | (384,524) |
| - நிதி செலவுக்ள் | 39,886,905 | 35,847,724 |
| - நிதி வருமானம் | (10,843,235) | (15,198,069) |
| - திட்டவட்டமான பயன்திட்டச் செலவுகளுக்கான ஏற்பாடுகள் | 17,154,766 | 14,839,503 |
| - ஆதனம், பொறி, உபகரண அகற்றல் மூலமான இலாபங்கள் | (189,248) | - |
| - நுகரத்தக்க உயிரியல் ஆதனங்களின் பெறுகை / (இழப்பு) | (35,163,086) | (12,642,200) |
| - தென்னை மரங்களின் அகற்றல் மூலமான இலாபங்கள் | (23,667,318) | (17,647,958) |
| | 81,022,884 | 3,815,466 |
| **மாற்றங்கள்** | | |
| - கையிருப்புக்கள் | (10,773,432) | 2,143,553 |
| - பால் உற்பத்திக் கால்நடைகள் | 3,289,452 | (2,598,340) |
| - நுகரத்தக்க உயிரியல் ஆதனங்களின் | | |
| - வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | (15,602,897) | (929,693) |
| - ஏனைய நடைமுறை சொத்துக்கள் | 1,076,555 | 11,452 |
| - வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 287,473 | (16,914,410) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உருவான காசு** | 59,300,034 | (14,471,971) |
| - விசேட பயன்திட்டக் கிரயங்களின் கொடுப்பனவு | (8,380,955) | (10,877,509) |
| - செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள் | (2,077,336) | (43,180) |
| - கிடைக்கப்பெற்ற நிதி வருமானங்கள் | 10,549,984 | 16,545,896 |
| - வருமான வரிக் கொடுப்பனவுகள் | (2,534,199) | (3,354,313) |
| - பெருமதியான மர விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் | 3,178,263 | 9,370,715 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசு** | 60,035,791 | (2,830,361) |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| - ஆதனம், பொறி மற்றும் உபகரண சேர்த்தல்கள் | (2,310,154) | (11,530,663) |
| - துறைசார் அபிவிருத்திச் செலவு | (60,580,869) | (80,037,794) |
| - தென்னை மர அகற்றல் மூலமான வருமானம் | 23,756,233 | 17,766,094 |
| - ஊழியர் கடன் வழங்கள் | (3,300,000) | (3,730,000) |
| - ஊழியர் கடன் மீளப்பெறல்கள் | 4,400,025 | 4,569,031 |
| - குறுங்கால முதலீடுகள் | (375,178) | 21,687,678 |
| - ஆதனம், பொறி, உபகரண அகற்றல்கள் மூலம் கிடைக்கப்பெற்றவை | 200,513 | |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய தேறிய காசுப்பாய்ச்சல்** | (38,209,430) | (51,275,654) |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| - பங்கிலாப செலுத்தல்கள் | | (30,000,000) |
| - அரசாங்க குத்தகை மூலதன மீளச்செலுத்தல்கள் | | |
| நிதி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் | - | (30,000,000) |
| **காசு மற்றும் அதற்குச் சமனானவற்றில் ஏற்பட்ட தேறிய (அதிகரிப்பு/குறைவு)** | 21,826,361 | (84,106,015) |
| அ. காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட ஆரம்ப மீதி | 8,359,059 | 92,465,074 |
| ஆ. காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட இறுதி மீதி | **30,185,420** | **8,359,059** |

**குறிப்பு - அ**

| | | |
|---|---|---|
| காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட ஆரம்ப மீதி | | |
| குறுங்கால முதலீடுகள் | | 88,000,000 |
| கையிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி | 8,359,059 | 4,465,074 |
| | **8,359,059** | **92,465,074** |

**குறிப்பு - ஆ**

| | | |
|---|---|---|
| காசு மற்றும் அதற்குச் சமனானவற்றின் வருட இறுதி மீதி | | |
| குறுங்கால முதலீடுகள் | 24,000,000 | |
| கையிலுள்ள காசு மற்றும் வங்கி மீதி | 6,185,420 | 8,359,059 |
| | **30,185,420** | **8,359,059** |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.
48 முதல் 82 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும

**சிலாபம்.**
**13.07.2020**

# 1 கூட்டுநிறுவனத் தகவல்கள்

## 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

### 1.1.1 உருவாக்கமும் சட்டக் கட்டமைப்பும்

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனமானது (கம்பனி) 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனத்தாபனங்கள் அல்லது அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை பொதுக் கம்பனிகளாக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க 1982 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கூட்டிணைக்கப்பட்டு சட்ட நியதிப்படுத்தப்பட்ட (2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீளப் பதிவு செய்யப்பட்டது) ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஆகும்.

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது இலக்கம் 165, புத்தளம் வீதி, சிலாபம் என்னும் முகவரியில் அமைந்திருக்க, அதன் பெருந்தோட்டங்கள் சிலாபம், குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன.

### 1.1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

தெங்குப் பயிர்ச்செய்கை, கொப்பரா உற்பத்தி மற்றும் பச்சைத் தேங்காய் மற்றும் கொப்பரா விற்பனை என்பனவே இவ்வருடத்தில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகள் ஆகும்.

### 1.1.3 தாய் நிறுவனம் மற்றும் உச்ச தாய் நிறுவனம்

நிறுவனத்தின் தாய் நிறுவனம் இலங்கை அரசாங்கமாகும்

## 1.2 வெளியிடுவதற்கான அங்கீகாரம் அழிக்கபட்டுள்ள திகதி

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் 31 டிசம்பர் 2019 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 13 ஜுலை 2020 அன்று பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டது.

# 2 தயாரிப்பதற்கான அடிப்படை

## 2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

இந் நிதிக்கூற்றுக்களானவை, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் வழங்கப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனான (SLFRS/LKAS) இணக்கப்பாட்டை வலியுறுத்தும், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 2.2 அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக் கூற்றுக்களுக்கான 04, 05, 06 ஆம் குறிப்புக்களில் விபரிக்கப்பட்டவாறு மீள்மதிப்பிடப்பட்ட JEDB/SLSPC பெருந்தோட்டங்களின் குத்தகைச் சொத்துக்கள் தவிர்ந்த அனைத்து விடயங்களிலும் இந் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவுக்கு இணக்கமான அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான இடங்களில் விசேடமான கொள்கைகள் தொடர்ந்து வரும் குறிப்புக்களில் விளக்கப்பட்டுள்ளதுடன், நிதிக்கூற்றுக்களில் பணவீக்கக் காரணிகள் தொடர்பில் எதுவித செம்மையாக்கமும் மேற்கொள்ளப்படவில்லை.

## 2.3 தொழிற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

நிதிக் கூற்றுக்கள் நிறுவனத்தின் தொழிற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாய்களில் (Rs.) முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை ரூபாய்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து நிதித் தகவல்களும் கிட்டிய ரூபாய்களில் வழங்கப்பட்டுள்ளன.

## 2.4 மதிப்பீடுகள் மற்றும் சுயதீர்ப்புக்களின் பயன்பாடு

SLFRS/LKAS நியமங்களுக்கு இணங்கி நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலில், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்களின் அறிக்கையிடப்பட்ட தொகைகள் முதலியவற்றின் பிரயோகத்தின் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய சுயதீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை முகாமைத்துவம் மேற்கொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுகின்றன.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை எடுகோள்கள் ஆகியன தொடர்ச்சியான முறையில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மீளாய்வானது அக் காலப்பகுதியை மாத்திரம் பாதிக்கும் எனில், அந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியிலும், பாதிப்புக்கு உள்ளாகும் எதிர்கால காலப்பகுதிகளுக்கும் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 2.5 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

நிறுவனத்தின் முகாமைத்தவமானது, நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மைக்கான இயலுமை தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன், நிறுவனம் கட்புலனாகக்கூடிய எதிர்காலத்துக்குத் தொடர்ந்து இயங்கக்கூடிய வகையில் வளங்களைக் கொண்டுள்ளதாகத் திருப்தியடைந்துள்ளது. மேலும், நிறுவனம் தொடர்ந்தியங்கும் தன்மையுடன் செயற்படுவதற்கான இயலுமை மீது கணிசமான சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடிய பொருண்மைத்தன்மை வாய்ந்த நிச்சயமற்றதன்மை தொடர்பான எந்த ஒரு விடயம் தொடர்பிலும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. ஆகவே, நிதிக்கூற்றுக்கள் தொடர்ச்சியான முறையில் தொடர்ந்தியங்கும் தன்மையின் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

### 2.6 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் நிறுவனத்தினால் தொடர்ச்சியான முறையில் பிரயோகிக்கப் பட்டுள்ளதுடன், பிரத்தியேகமாகக் குறிப்பிடப்பட்டு அவசியமான இடங்களில் நடைமுறை ஆண்டின் தொகைகளுக்கு இணங்கும் வகையில் முன்னைய ஆண்டுகளின் தொகைகள் மற்றும் சொற்றொடர்கள் மீள ஒழுங்கமைக்கப்படாதவிடத்து, அக் கொள்கைகள் முன்னயை வருடங்களில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுக்கு நிலைமாறாது காணப்படுகின்றன.

### 2.7 அறிக்கையிடல் திகதிக்குப் பின்னான நிகழ்வுகள்

அறிக்கையில் திகதிக்குப் பின்னர் நிகழும் அனைத்துப் பொருண்மைத்தன்மை வாய்ந்த நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டு, பொருத்தமான இடங்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 3.1 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படைகள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப் பட்டுள்ள சொத்துக்களானவை காசு மற்றும் அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருட காலம் அல்லது நிறுவனத்தின் சாதாரண தொழிற்பாட்டு சுற்றோட்டம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதியினுள் காசாகத் தேறச் செய்யப்படத்தக்க சொத்துக்களாகும். நடைமுறை சொத்துக்கள் தவிர்ந்த சொத்துக்களானவை, நிறுவனம் அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு வைத்திருக்க எதிர்பார்க்கும் சொத்துக்களாகும்.

**3.1.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

**3.1.1.1 ஏற்பிசைவு மற்றும் அளவீடு**

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளானவை அவற்றின் கிரயத்தில் (அல்லது வெற்றுக் காணியின் குத்தகை உரிமை எனின், மதிப்பீட்டுப் பெறுமதியில்) திரண்ட பெறுமானத் தேய்வுகள் மற்றும் திரண்ட சேத இழப்பு நட்டங்கள் எவையேனுமிருப்பின், கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும்.

**(அ) உரிமை கொள்ளப்பட்ட சொத்துக்கள்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயமானது, அவற்றின் கொள்வனவு தொடர்பாக நேரடியாக சுமத்தப்படத்தக்க செலவுகளை உள்ளடக்கும். சுய-உருவாக்க சொத்துக்களின் கிரயமானது குறித்த சொத்தின் எதிர்பார்த்த பயன்பாட்டுக்கான தொழிற்படு நிலைமைக்கு அதனைக் கொண்டு வருவதற்காக நேரடியாக சுமத்தக்கூடிய மூலப்பொருட் கிரயம், நேர் ஊழியம் மற்றும் ஏனைய நேர்ச் செலவுகளை உள்ளடக்கும். தொடர்புபட்ட உபகரணங்களின் அவசியதான பகுதியானவுள்ள கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருட்கள் அவ் உபகரணங்களின் ஒரு பகுதியாக மூலதனமாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஏதேனும் முக்கிய பாகங்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மாற்றீடு செய்யப்பட வேண்டுமாயின், நிறுவனம் அப் பாகங்களை முறையே பிரத்தியேகமான ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வைக் கொண்ட தனியான சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யும். அதே போன்று, பிரதான சோதனையொன்று நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில், ஏற்பிசைவு மூலக்கூறுகள் திருப்தி செய்யப்பட்டிருப்பின், அதன் கிரயமானது குறித்த பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டு செல்லல் பெறுமதியில் ஒரு மாற்றீடாக ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய அனைத்து திருத்த மற்றும் பராமரிப்புக் கிரயங்கள் யாவும் அவை எற்படும் போதே முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

மூலதனக் குறைவேலை இருப்புக்களானது, சொத்தின் முதலாவது பயன்பாட்டுக் காலத்தில் அல்லது அது உருவாக்கப்பட்டதும் தொடர்புபட்ட சொத்துக்கு மாற்றப்படும்.

(ஆ) குத்தகை சொத்துக்கள்

நிதிக்குத்தகையின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள் (குத்தகைக்கு பெறப்பட்ட சொத்துக்களின் உரிமைக்குக் கிடைக்கத்தக்க கணிசமான பயன்களை பயனுறுதி மிக்க வகையில் மாற்றம் செய்யும்) அவற்றின் சீர்மதிப்பு (நியாயமான பெறுமதி) மற்றும் ஆகக் குறைந்த குத்தகைக் கட்டணங்களின் இற்றைப் பெறுமதி (தற்போதைய பெறுமதி) ஆகியவற்றில் குறைந்த பெறுமதிக்கு சமமாக மூலதனமாக்கல் செய்யப்பட்டு, நிறுவனம் அச்சொத்துக்களை பயன்படுத்துவதற்கு உத்தேசித்திருக்கும் காலப்பகுதி முழுவதிலும் பெறுமானத் தேய்வு அல்லது காலத் தேய்மானம் செய்யப்படும்.

இது தொடர்பில் குத்தகைக்காரருக்குச் செலுத்த வேண்டிய மூலதன (அசல்) பெறுமதியானது ஒரு பரிப்பாகக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிதியாண்டுக்குமான குத்தகைக் கடப்பாட்டின் வட்டிப் பாகம் குத்தகை முடிவு வரைக்கும், ஒவ்வொரு காலப்பகுதிக்கும் மீதமாகவுள்ள கடப்பாட்டின் நிலுவையில் ஒரு நிலையான கால வீதத்தை ஏற்படத்தக்கூடிய வகையில் அந்தந்த ஆண்டுகளுக்கான முற்றடக்க வருமானக் கூற்றில் பதியப்படும்.

குத்தகை ஆதனங்களின் மீதான விருத்திகளுக்கான கிரயமானது மூலதனமாக்கப்பட்டு, எஞ்சிய குத்தகைக் காலம் அல்லது விருத்திகளின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட் காலம் ஆகிய இரண்டில் குறைந்த காலப்பகுதிக்கு பெறுமானத் தேய்விடப்படும்.

3.1.1.2 பிற்பட்ட கிரயங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பாகங்களை மாற்றீடு செய்யும் கிரயமானது, அப்பாகத்துடன் தொடர்புபட்ட எதிர்கால பொருளாதாரப் பயன்கள் நிறுவனத்திற்கு கிடைப்பதற்கான நிகழ்தகவு காணப்பட்டு, அதன் கிரயம் நம்பகமாக அளவிடத்தக்கதாககவும் காணப்படுமாயின், குறித்த ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியின் கொண்டுசெல்லல் பெறுமதியில் ஏற்பிசைவு செய்யப்படும். மாற்றீடு செய்யப்பட்டு அகற்றப்பட்ட பாகங்கள் கீழே தரப்பட்டுள்ள ஏற்பிசைவு நீக்கல் கொள்கைக்கு இணங்க ஏற்பிசைவு நீக்கப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நாளாந்த பராமரிப்புக் கிரயங்கள் அவை ஏற்படும் போதே இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.1.1.3 ஏற்பிசைவு நீக்கல்

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படி ஒன்றின் கொண்டு செல்லும் பெறுமதியானது அது அகற்றப்படும் போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றல் மூலம் எதிர்காலப் பொருளாதாரப் பயன்கள் எதுவும் இருக்காது என எதிர்பார்க்கப்படும் போது அது ஏற்பிசைவு நீக்கப்படும். ஏற்பிசைவு நீக்கல் காரணமாக கிடைக்கும் நயங்கள் அல்லது நட்டங்கள் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், அதன் நயங்கள் வருமானமாக வகைப்படுத்தப்பட மாட்டாது.

3.1.1.4 பெறுமானத் தேய்வு மற்றும் காலத் தேய்மானம்

(அ) பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்வானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பாகங்களின் மதிப்பிடப்பட்ட பொருளாதார பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் நேர்கோட்டு முறையின் அடிப்படையில் முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| | வருடங்கள் | வீதம் (%) |
|---|---|---|
| கட்டடங்கள் | 40 | 2.50 |
| பொறி மற்றும் உபகரணம் | 15 | 6.67 |
| தளபாடம் மற்றும் பொருத்துகள் | 10 | 10.00 |
| மோட்டார் வாகனங்கள் | 05 | 20.00 |
| உபகரணங்கள் | 08 | 12.50 |
| நிரந்தர காணி அபிவிருத்தி | 30 | 3.33 |
| வேலி அமைத்தல் | 03 | 33.33 |
| நீர் வழங்கல் | 20 | 5.00 |

ஏதேனும் ஒரு சொத்தின் பெறுமானத் தேய்வானது அது பயன்பாட்டுக்குத் தயாராக உள்ளபோது ஆரம்பிப்பதுடன், அச்சொத்து விற்பனைக்காக வைத்திருக்கப்படும் சொத்தாக வகைப்படுத்தப்படும் போது அல்லது ஏற்பிசைவு நீக்கப்படும் போது பெறுமானத் தேய்வு நிறுத்தப்படும். பெறுமானத் தேய்வு முறை, பயன்தரு ஆயுட்காலம் மற்றும் எச்சப் பெறுமதி ஆகியன அறிக்கையிடும் திகதியில் மீள மதிப்பிடப்பட்டுள்ளதுடன், தேவையேற்படுமிடத்து, பிற்கால விளைவுள்ள வகையில் சீராக்கப்பட்டுள்ளன.

(அ) காலத் தேய்மானம்

குத்தகைக் காலத்தின் இறுதியில் நிறுவனம் சொத்தின் உரிமையைப் பெற்றுக் கொள்ளும் என்பது நியாயமான அளவில் உறுதிவாய்ந்ததாக இல்லாதவிடத்து, நிதிக் குத்தகையின் கீழ் உள்ள சொத்துக்கள் குத்தகைக் காலம் அல்லது அவற்றையொத்த உரிமை கொள்ளப்பட்டுள்ள சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் ஆகிய இரண்டில் குறைவான காலப்பகுதிக்கு காலத்தேய்வு செய்யப்படும். JEDB/SLSPC இடமிருந்து கையகப்படுத்தப்பட்ட காணிகளின் குத்தகைக் காலமானது 2045 இல் முடிவடையும்.

JEDB/SLSPC இடமிருந்து கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களுக்கான குத்தகை உரிமையானது எஞ்சியுள்ள குத்தகை காலம் மற்றும் பயன்தரு ஆயுட்காலம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதிக்கு சமமான தொகைகளில் காலத்தேய்வு செய்யப்படுவதுடன், தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| | வருடங்கள் | வீதம் (%) |
|---|---|---|
| வெற்றுக் காணிகளின் குத்தகை உரிமை | 53 | 1.89 |
| காணி அபிவிருத்தி | 30 | 3.33 |
| ஏனைய உரிமையளிக்கப்பட்ட சொத்துக்கள் | 30 | 3.33 |
| கட்டடங்கள் | 25 | 4.00 |
| இயந்திரங்கள் | 15 | 6.67 |
| நீர் வழங்கல் | 20 | 5.00 |

### 3.1.1 உயிரியல் சொத்துக்கள்

#### 3.1.1.1 முதிர்வுற்ற மற்றும் முதிர்வுறாத பயிர்ச்செய்கை

(அ) அசையா. குத்தகை உயிரியல் சொத்துக்கள் (முதிர்வுற்ற/முதிர்வுறாத பயிர்ச்செய்கை)

பெருந்தோட்டங்களின் தனியார் மயமாக்கல் காலப்பகுதியில் காணப்பட்ட, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அவசிய விடய செயற்பாட்டுக் குழுவின் (UITF) விதிமுறைகளுக்கு இணங்க, JEDB/SLSPC பெருந்தோட்டங்களில் நிதிக்குத்தகையில் காணப்பட்ட அசையாத, குத்தகை கொண்ட உயிரியல் சொத்துக்கள் 1992 ஆம் ஆண்டு ஜுன் 22 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரத்தக்கவாறு முன்விளைவுள்ள வகையில் நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட்டது.

அசையாத, குத்தகை கொண்ட உயிரியல் சொத்துக்களின் காலத்தேய்வானது சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்துக்கு நேர்கோட்டு முறையில் முற்றடக்க வருமானக் கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| | ஆண்டுகளின் எண்ணிக்கை | வீதம் (%) |
|---|---|---|
| முதிர்வுற்ற பயிர்ச்செய்கை | 30 | 3.33 |

(ஆ) குத்தகை சொத்துக்களின் விருத்தி (முதிர்வுற்ற / முதிர்வுறாத பயிர்ச்செய்கை)

பயிர் நடுகை மற்றும் அறுவடை (பயிரிடப்பட்ட பயிர்கள் எட்டு வருடங்களுக்குப் பின்னர் முதிர்வுறும்) ஆகியவற்றுக்கு இடையில் இடம்பெறும் நிலத் தயார்ப்படுத்தல், புதிய பயிர் விதைத்தல், மீள்விதைத்தல், ஊடுபயிரிடல் மற்றும் உரமிடல் முதலியவற்றுக்கான கிரயமானது முதிர்வுறாத பயிர்ச்செய்கையின் வகைப்படுத்தப்படும். முதிர்வுறாத பயிர்ச்செய்கை நேர்க் கிரயங்களுடன் சுமத்தப்படத்தக்க மேந்தலைச் செலவுகள் கூட்டப்பட்ட பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன. ஆண்டுக்காலத்தில் கொண்டுசெல்கைகளினுள் உள்ளடக்கப்படும் கொண்டுசெல்லும் உயிரியல் சொத்துக்களின் மீது ஏற்பட்ட செலவினங்கள் (அதாவது: தேங்காய்) முதிர்வுற்ற பயிர் செய்கைக்கு மாற்றப்படும்.

குத்தகை ஆதனங்களின் மீதான விருத்திகளுக்கான தேய்மானமானது, மீதமுள்ள குத்தகை காலம் அல்லது அவ்விருத்திகளின் பயன்தரு ஆயட்காலம் ஆகியவற்றில் குறைவான காலப்பகுதியில் நேர்கோட்டு முறையில் மேற்கொள்ளப்படும்.

நடப்பாண்டில் முதிர்வுற்ற பயிர்ச்செய்கைகளுக்கு மாற்றுவதற்காக வைக்கப்பட்டுள்ள முதிர்வுறாத பயிர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயங்கள்(செலவுகள்), ஆண்டிறுதியில் முதிர்வுற்ற பயிர்ச்செய்கைக்கு மாற்றப்பட்டு கீழ்காணுமாறு அவற்றின் பயன்தரு ஆயட்காலங்களுக்கு இணங்க பெறுமானத்தேய்வு அடைகின்றது.

தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கான மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

(பயன்தரு ஆயுட்காலம் முதிர்வுறாத காலப்பகுதிக்கு பின்னர் கணிக்கப்பட்டுள்ளது.)

| | முதிர்வுறாத காலப்பகுதி ஆண்டுகளின் எண்ணிக்கை | ஆயட்காலம் ஆண்டுகளின் எண்ணிக்கை | பெறுமானத் தேய்வு வீதம் (%) |
|---|---|---|---|
| தென்னை | 08 | 50 | 2.00 |
| மரமுந்திரிகை | 08 | 25 | 4.00 |
| ட்ராகன் பழம் | 03 | 20 | 5.00 |
| கருவா | 04 | 20 | 5.00 |
| முளகு | 06 | 20 | 5.00 |
| றம்புட்டான் | 06 | 20 | 5.00 |
| மாங்காய் | 08 | 20 | 5.00 |

(இ) **நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள்**

நுகரத்தக்க பலகை மரங்கள் ஆரம்ப ஏற்பிசைவில் அளவிடப்படுவதுடன், ஒவ்வொரு அறிக்கையிடல் காப் பகுதியின் முடிவிலும் LKAS 41 நியமத்தின் அடிப்படையில் அவற்றின் சீர்மதிப்பில் விற்பனைக்கான செலவினங்கள் கழித்த பெறுமதியில் அளவிடப்படும். இளம் பயிர்களின் சீர்மதிப்பு இக் காலகட்டத்தில் விலை மீது கொண்டிருக்கக் கூடிய தாக்கம் பொருண்மைத் தன்மையற்றதாகக் காணப்படுவதால் கிரயமானது இளம் பயிர்களின் சீர்மதிப்பின் அண்மித்த பெறுமதியாகக் கொள்ளப்படும். பலகை மரங்களின் சீர்மதிப்பானது, பலகைகளின் நடைமுறை சந்தை விலையைக் கருத்தில் கொண்டு கழிவிட்ட காசுப் பாய்ச்சல் முறையைஈ முதிர்விலான மரம் ஒன்றின் எதிர்பார்க்கப்பட்ட பலகை உள்ளீடுகளுக்குப் பிரயோகித்து, சுயாதீன மதிப்பீட்டாளரினால் அளவிடப்படுள்ளது.

நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியிலான ஆரம்ப ஏற்பிசைவில் மற்றும் நுகரத்தக்க உியிரியல் சொத்துக்களின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதி முறையிலிருந்தான மாற்றங்கள் காரணமாக ஏற்படும் நயங்கள் அல்லது நட்டங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதிக்கான இலாப நட்டங்களில் உள்ளடக்கப்படுவதுடன், ஏனைய எடுகோள்கள் யாவும் குறிப்பு 7.3 இல் தரப்பட்டுள்ளன.

கழிவிட்ட காசுப்பாய்ச்சல் முறை கவனத்தில் கொள்ளும் முக்கிய மாறிகள் பின்வருமாறு:

| மாறி | கருத்து |
|---|---|
| நாணய மதிப்பீடு | இலங்கை ரூபாய் (Rs.) |
| பலகை உள்ளடக்கம | வேறுபட்ட புவியியல் பிராந்தியங்களில் வளரும் ஒவ்வொரு பயிர்களினதும் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, மரத்தின் தடிப்பு மற்றும் உயரம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.<br><br>இது மரங்களின் அறுவடை தொடர்பான, நிறுவனத்தின் வனவியல் திட்டத்துடன் இணைந்த, நடைமுறையிலுள்ள அனைத்து சட்டரீதியான வதிமுறைகளையும் கவனத்தில் எடுத்தள்ளது. |
| பொருளாதார பயன்தரு ஆயட்காலம் | ஒவ்வொரு பயிர் வகையினதும் சாதாரண வாழ்க்கைப் பரப்பின் அடிப்படையில், நிறுவனத்தின் வனவியல் திட்டத்துடன் இணைந்ததாக மதிப்படடப்பட்டுள்ளது. |
| விற்பனை விலை | இலங்கையின் தற்போதைய சந்தை விலையின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. மரங்களை விற்கத்தகு நிலைமைக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து நிபந்தனைகளையும் கருத்தில் கொண்டதாகும். |
| கழிவு வீதம் | எதிர்காலக் காசுப் பாய்ச்சல்கள் பின்வரும் வீதங்களில் கழிவிடப்பட்டுள்ளன.<br>- 5 அல்லது அதற்கு கீழ் அறுவடை வயது 14%<br>- 6 தொடக்கம் 15 வருடங்கள் அறுவடை வயது 15%<br>- 15 அல்லது அதற்கு மேல் அறுவடை வயது 16% |

**3.1.1.1 பால் உற்பத்திக் கால்நடைகள்**

பாலுற்பத்திக் கால்நடைகள் அவற்றின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. பாலுற்பத்திக் கால்நடைகளின் சீர்மதிப்பானது தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கு அமைவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

**3.1.2 விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லா சொத்துக்கள்**

பாவனைக்காக அல்லாது விற்பனை மூலம் மீளப்பெற எதிர்பார்த்து வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள், விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட முன்னர் இச் சொத்துக்கள் அவற்றின் கொண்டு செல்லல் பெறுமதி அல்லது சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் அளவிடப்பட்டிருந்தன. விற்பனை அதிகளவு நிகழ்தகவு இருந்து, தற்போதைய நிலைமையில் சொத்த உடனடியாக விற்பனை செய்வதற்குத் தயாராக இருப்பின் மாத்திரமே நடைமுறையல்லாச் சொத்துக்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்டால், அவை பெறுமானத்தேய்வு அல்லது காலத்தேய்வு செய்யப்பட மாட்டாது.

**3.1.3 இருப்புக்கள்**

இருப்புக்களானவை, காலங்கடந்த மற்றும் மெதுவாக நகரும் இருப்புக்களுக்கான பொருத்தமான கழிப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு, கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட தேறத்தக்க நிகர பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியில் அளவிடப்படும். தேறத்தக்க நிகர பெறுமதி இருப்புக்களை அவற்றின் தற்போதுள்ள நிலைமையில் இருந்து தேறச் செய்வதற்கான அல்லது நிலைமாற்றுவதற்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பின்னரான, சாதாரண வணிக நிலைமைகளில் இருப்புக்களை விற்பனை செய்யத்தக்க பெறுமதி ஆகும்.

| | |
|---|---|
| நுகர்வுக்கான மற்றும் உதிரி உள்ளீட்டு பொருட்கள் | உண்மையான கிரயத்தில் FIFO அடிப்படையில் |
| வளரும் பயிர்கள் - நாற்றுக்கள் | நேர் மூலப்பொருள், நேர் ஊழியம் மற்றும் நேரடியாக ஒதுக்கீடு செய்யப்படத்தக்க மேந்தலைகளின் கிரயம் ஆகியவற்றில் |
| அறுவடைசெய்யப்பட்ட பயிர்கள் | உயிரியல் சொத்துக்களினால் இருந்த அறுவடை செய்யப்பட்ட விவசாய உற்பத்திகள் சீர்மதிப்பில் இருந்து அறுவடை செய்யப்பட்ட இடத்திலேயே விற்பனை செய்வதற்கான செலவுகள் கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவீடு செய்யப்படும்.<br><br>பூரணமாக அல்லது பகுதியாக நிறைவு செய்யப்பட்ட விவசாய உற்பத்திகள் அவற்றுக்கான நிலைமாற்றல் கிரயத்தினை சீர்மதிப்புடன் சேர்த்த பெறுமதியில் அளவீடு செய்யப்படும். |
| கால்நடைகள் | பால்தரும் கால்நடைகள் அவற்றின் சீர்மதிப்பிலிருந்து விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவீடு செய்யப்படும். கால்நடைகள் அவற்றின் சீர்மதிப்பானது தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைய தீர்மானிக்கப்படும். |

**3.1.5 நிதிச் சாதனங்கள்**

**3.1.5.1 ஏற்பிசைவு மற்றும் மற்றும் ஆரம்ப அளவீடு**

வியாபார வருமதிகள் அவை உருவாக்கப்படும் போதே ஆரம்ப ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஏனைய அனைத்து நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்கள் யாவும் அத்தகைய சாதனத்தின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பினராக கம்பனி மாறும்போதே ஆரம்ப ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

ஒரு நிதிச் சொத்து (ஒரு கணிசமான நிதியிடல் மூலக்கூறினைக் கொண்டிராத வியாபார வருமதியாக இல்லாதவிடத்து) அல்லது நிதிப் பரிப்பானது ஆரம்பத்தில், ஒரு இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுபவை அல்லாத சாதனங்களுக்கு, சீர்மதிப்புடன் அதன் கையகப்படுத்தல் அல்லது வழங்கலின் போது நேரடியாக சாட்டுதல் செய்யத்தக்க ஊடுசெயல் கிரயங்கள் இணைந்த பெறுமதியில் அளவிடப்படுகிறது. கணிசமான நிதியிடல் மூலக்கூறினைக் கொண்டிராத வியாபார வருமதி ஒன்று ஆரம்பத்தில் ஊடுசெயல் விலையில் அளவிடப்படுகிறது.

**3.1.5.2 வகைப்படுத்தல் மற்றும் பிற்கால அளவீடு**

**3.1.5.2.1 நிதிச் சொத்துக்கள்**

i) **ஜனவரி 01, 2018 முதல் பிரயோகிக்கத்தக்க கொள்கை**

ஆரம்ப ஏற்பிசைவில், கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடப்படுவது, முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் - கடநன் முதலீடுகள், ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் - உரிமையாண்மை முதலீடுகள் அல்லது இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுபவை என வகைப்படுத்தப்படும்.

கம்பனியானது நிதிச் சொத்துக்களை முகாமை செய்யும் தனது வணிக மாதிரியை மாற்றியிருக்காதவிடத்து, ஏற்பிசைவின் பின்னரான காலங்களில் நிதிச் சொத்துக்கள் மீள வகைப்படுத்தப்படுவதில்லை. அவ்வாறு வணிக மாதிரி மாற்றப் பட்டிருந்தால், அந்த வணிக மாதிரி மாற்றத்தைத் தொடர்ந்து வரும் முதலாவது அறிக்கையிடல் காலப்பகுதியின் முதலாவது நாளில் நிதிச் சொத்துக்கள் மீள வகைப்படுத்தப்படும்.

நிதிச் சொத்து ஒன்று பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்வதுடன், இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுவது எனக் குறித்தொதுக்கப்பட்டிராத போது, கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும்:

- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிக்கும் நோக்கினைக் கொண்ட வணிக மாதிரியினால் வைத்திருக்கப்படல், அத்துடன்
- குறித்த திகதிகளில் அதன் ஒப்பந்த நியதிகள் முற்றிலும் அசல் தொகைகளின் மீள் செலுத்துகை மற்றும் மீதமுள்ள அசல் தொகை மீதான வட்டி ஆகியவற்றினால் மாத்திரமான காசுப் பாய்ச்சல் அதிகரிப்புக்களை வழங்குதல்.

கடன் முதலீடு ஒன்று பின்வரும் நிபந்தனைகளைத் திருப்தி செய்வதுடன், இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுவது எனக் குறித்தொதுக்கப்பட்டிராத போது, இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும்:

- ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரித்தல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகியவற்றின் மூலம் தமது நோக்கினைத் திருப்தி செய்யும் வணிக மாதிரியினால் வைத்திருக்கப்படல், அத்துடன்
- குறித்த திகதிகளில் அதன் ஒப்பந்த நியதிகள் முற்றிலும் அசல் தொகைகளின் மீள் செலுத்துகை மற்றும் மீதமுள்ள அசல் தொகை மீதான வட்டி ஆகியவற்றினால் மாத்திரமான காசுப் பாய்ச்சல் அதிகரிப்புக்களை வழங்குதல்.

வர்த்தக நோக்கத்திற்காக வைத்திருக்கப்படாத உரிமையாண்மை சாதனம் ஒன்றின் ஆரம்ப ஏற்பிசைவில், கம்பனியானது முதலீட்டின் சீர்மதிப்பில் ஏற்படும் பிற்கால மாற்றங்களை முற்றடக்க வருமானங்களில் முன்னிலைப்படுத்துவது என மீளப்பெற முடியாத தெரிவு ஒன்றினை மேற்கொள்ளலாம். இத் தெரிவானது ஒவ்வொரு முதலீடாக தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும் அல்லது முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் என வகைப்படுத்தப்படாத அனைத்து நிதிச் சொத்துக்களும் மேலே விபரிக்கப்பட்டவாறு இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும். இது அனைத்து உய்த்தறி நிதிச் சொத்துக்களையும் உள்ளடக்கும். ஆரம்ப ஏற்பிசைவில், குழுமமானது, ஏனைய நிலைமைகளில் கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அல்லது ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் மதிப்பிடப்படுவதற்கான நிபந்தனைகளினைப் பூர்த்தி செய்யும் நிதிச் சொத்துக்களை இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடுவதானது ஏனைய சந்தர்ப்பங்களில் ஏற்படத்தக்க கணக்கியல் இணக்கமின்மையினை கணிசமான அளவினால் குறைக்கும் அல்லது நீக்கும் எனில், அவ்வாறு இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடுவதாக மீளப்பெற முடியாத வகையில் தெரிவு செய்யும்.

அ) **வணிக மாதிரி மதிப்பீடு:**

கம்பனியானது நிதிச் சொத்துக்கள் ஓர் முதலீட்டுத் தொகுதி மட்டத்தில் வைத்திருக்கப்படும் வணிக மாதிரியின் நோக்கங்கள் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்ளும். ஏனெனில், இது வணிகமானது முகாமை செய்யப்படும் மற்றும் முகாமைக்குத் தகவல் வழங்கப்படும் முறையினை சிறப்பாகப் பிரதிபலிக்கும். கருத்தில் கொள்ளப்படும் தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- குறிப்பிடப்பட்ட கொள்கைகள் மற்றும் முதலீட்டுத் தொகுதிக்கான நோக்கங்கள் அத்துடன் நடைமுறையிலுள்ள கொள்கைகளின் தொழிற்பாடு. இவை முகாமையினது தந்திரோபாயமானது ஒப்பந்த வட்டி வருமானம் உழைத்தலின்

மீது நோக்கினைக் கொண்டுள்ளதா, குறிப்பிட்ட வட்டி வீத தொகுதி ஒன்றினைப் பராமரித்தல், நிதிச் சொத்துக்களின் காலப்பகுதியினை தொடர்புபட்ட ஏதேனும் பரிப்புக்களின் அல்லது எதிர்பார்க்கப்பட்ட காசுப் பாய்ச்சல்களின் அல்லது சொத்துக்களின் விற்பனை ஊடாக தேறச் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்களின் காலப்பகுதியுடன் இணக்கப்படுத்துதல் முதலியவற்றை உள்ளடக்கும்.

- முதலீட்டுத் தொகுதியின் செயற்றிறன் மீளாய்வு செய்யப்படும் மற்றும் கம்பனியின் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்படும் முறை
- வணிக மாதிரியின் செயற்றிறனைப் பாதிக்கும் இடர்கள் (அத்துடன் வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்) மற்றும் அந்த இடர்கள் முகாமை செய்யப்படும் முறை
- முன்னைய காலப்பகுகளிலான நிதிச் சொத்துக்களின் விற்பனை தொடர்பான மீடிறன் எண்ணிக்கைகள், அளவு மற்றும் காலப்பகுதிகள், அத்துடன் அத்தகைய விற்பனைக்காக காரணம் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கைகள் தொடர்பான எதிர்பார்க்கை.

ஏற்பிசைவு நீக்கலுக்குத் தகமை பெறாத ஊடுசெயல்களில் மூன்றாம் தரப்பினருக்கான நிதிச் சொத்துக்களின் மாற்றல்கள் இந் நோக்கத்துக்காக, குழுமத்தின் சொத்துக்களுக்கான தொடர்ச்சியான ஏற்பிசைவுக் கொள்கைக்கு இணக்கமான வகையில் விற்பனைகளாகக் கருதப்படவில்லை.

வர்த்தகத்துக்காக வைத்திருக்கப்படும் அல்லது முகாமை செய்யப்பட்டு, அவற்றின் செயற்றிறன் சீர்மதிப்பின் அடிப்படையில் மதிப்பிடப்படும் நிதிச் சொத்துக்கள் இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும்.

**ஆ) பிற்கால அளவீடு மற்றும் ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள்:**

| | |
|---|---|
| இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் | இச் சொத்துக்கள் பிற்காலத்தில் சீர்மதிப்பில் அளவிடப்படும். வட்டி அல்லது பங்கு இலாப வருமானங்கள் உள்ளடங்கலான நிகர ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். |
| கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் | இச் சொத்துக்கள் பிற்காலத்தில் விளைவுள்ள வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும். கடனழிவுப் பெறுமதியானது சேத இழப்பு நட்டங்களினால் குறைக்கப்படும். வட்டி வருமானம் மற்றும் சேத இழப்பு ஆகியன இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏற்பிசைவு நீக்கலிலான ஏதேனும் ஆதாயங்கள் அல்லது நட்டங்கள் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் கடன் முதலீடுகள் | இச் சொத்துக்கள் பிற்காலங்களில் சீர்மதிப்பில் அளவிடப்படும். விளைவுள்ள வட்டி வீதத்தினைப் பயன்படுத்திக் கணிப்பிடப்பட்ட வட்டி வீதம் மற்றும் சேத இழப்பு ஆகியன இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் ஏனைய முற்றக்க வருமானங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏற்பிசைவு நீக்கலில், ஏனைய முற்றடக்க வருமானங்களில் திரட்டப்பட்ட ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் இலாப நட்டங்களுக்கு மீள வகைப்படுத்தப்படும். |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் உரிமையாண்மை முதலீடுகள் | இச் சொத்துக்கள் பிற்காலங்களில் சீர்மதிப்பில் அளவிடப்படும். பங்கு இலாபமானது தெளிவான முறையில் முதலீட்டின் பகுதி ஒன்றினை மீளப் பெறுவதைப் பிரதிநிதித்துவம் செய்யாத போது பங்கு இலாபமானது இலாப நட்டங்களில் வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய நிகர ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் ஏனைய முற்றடக்க வருமானங்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், எப்போதுமே இலாப நட்டங்களுக்கு மீள வகைப்படுத்தப்படாது. |

i) 01 சனவரி 2018 க்கு முன்னர் பிரயோகிக்கப்பட்ட கொள்கை

நிறுவனமானது அதன் நிதிச் சொத்துக்களை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளது:

- கடன்கள் மற்றும் வருமதிகள்
- முதிர்வுவரை வைத்திருக்கப்படுபவை
- விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளவை
- இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில், அத்துடன் இந்த வகைப்படுத்தலில்:
- வர்த்தகத்துக்காக வைத்திருக்கப்படுபவை
- இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் எனக் குறித்தொதுக்கப்பட்டவை

இ) பிற்கால அளவீடு மற்றும் ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள்:

| | |
|---|---|
| இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் | சீர்மதிப்பில் அளவிடப்படுவதுடன், அவற்றிலான மாற்றங்கள் ஏதேனும் வட்டிகள் மற்றும் பங்கு இலாபங்கள் உள்ளடங்கலாக இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்பட்டன. |
| முதிர்வுவரை வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் | விளைவுள்ள வட்டி வீதத்தைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்பட்டன. |
| கடன்கள் மற்றும் வருமதிகள் | விளைவுள்ள வட்டி வீதத்தைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்பட்டன. |
| விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் | சீர்மதிப்பில் அளவிடப்படுவதுடன், அவற்றிலான சேத இழப்பு நட்டங்கள், வட்டி வருமானங்கள் மற்றும் கடன் சாதனங்கள் மீதான அந்நிய நாணய வேறுபாடுகள் தவிர்ந்த மாற்றங்கள் ஏனைய முற்றடக்க வருமானங்களில் ஏற்பிசைவு செய்யப்பட்டு, சீர்மதிப்பு ஒதுக்கத்தில் திரட்டப்பட்டன. இச் சொத்துக்கள் ஏற்பிசைவு நீக்கப்படும் போது, உரிமையாண்மையில் திரட்டப்பட்ட ஆதாயம் அல்லது நட்டம் இலாப நட்டங்களுக்கு மீள வகைப்படுத்தப்பட்டது. |

3.1.5.2.2 நிதிப் பரிப்புக்கள்

ை) வகைப்படுத்தல், பிற்கால அளவீடுகள் மற்றும் ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள்

நிதிப் பரிப்புக்கள் கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படுபவை அல்லது இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுபவை என வகைப்படுத்தப்படும். நிதிப் பரிப்பு ஒன்று விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதாக, அது ஒரு உய்த்தறி சாதனமாக அல்லது ஆரம்ப ஏற்பிசைவில் அது அவ்வாறு குறித்தொதுக்கப்பட்டிருப்பின், அது இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அனவிடப்படுவது என வகைப்படுத்தப்படும். இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பிலான நிதிப் பரிப்புக்கள் சீர்மதிப்பில் அளவிடப்படுவதுடன், வட்டிச் செலவினங்கள் உள்ளடங்கலான நிகர ஆதாயங்கள் அல்லது இழப்புக்கள் இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய நிதிப் பரிப்புக்கள் விளைவுள்ள வட்டி வீதத்தைப் பயன்படுத்திப் பிற்காலத்தில் கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும். வட்டிச் செலவினங்கள் மற்றும் அந்நிய நாணய ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் ஆகியன இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏற்பிசைவு நீக்கலிலான ஏதேனும் ஆதாயங்கள் அல்லது இழப்புக்களும் இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.1.5.3 ஏற்பிசைவு நீக்கல்

3.1.5.3.1 நிதிச் சொத்துக்கள்

நிதிச் சொத்து ஒன்றிலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகும் போது அல்லது ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான அதன் உரிமையினை, உரிமைத்துவத்தின் கணிசமான அளவில் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளும் மாற்றப்படும் அல்லது உரிமைத்துவத்துக்கான கணிசமான அளவிலான அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை கம்பனி மாற்றம் செய்யவோ அல்லது வைத்திருக்கவோ செய்யாது, நிதிச் சொத்தின் மீது அது கட்டுப்பாட்டினைக் கொண்டிராத வகையில் விளையும் ஊடுசெயல் ஒன்றில் மாற்றும் போது நிதிச் சொத்தினைக் கம்பனி ஏற்பிசைவு நீக்கும்.

கம்பனியின் நிதிநிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள சொத்துக்களை மாற்றும் ஆனால் மாற்றப்பட்ட சொத்தின் அனைத்து அல்லது கணிசமான அளவிலான அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை தன்வசம் தொடர்ந்தும் வைத்திருக்கும் வகையில் மாற்றம் செய்யும் ஊடுசெயலினுள் உள்நுழைகிறது. இவ்வாறான நிலைமைகளில், மாற்றப்பட்ட சொத்துக்கள் ஏற்பிசைவு நீக்கப்படுவதில்லை.

3.1.5.3.2 நிதிப் பரிப்புக்கள்

நிதிப் பரிப்பு ஒன்றின் ஒப்பந்தக் கடப்பாடுகள் தீர்க்கப்பட்டதும் அல்லது இரத்துச் செய்யப்பட்டதும் அல்லது காலாவதியானதும் கம்பனி நிதிப் பரிப்பினை ஏற்பிசைவு நீக்கும். அத்துடன் கம்பனி நிதிப் பரிப்புக்களின் நியதிகள் மாற்றம் செய்யப்பட்டதுடன், மாற்றம் செய்யப்பட்ட பரிப்பின் காசுப் பாய்ச்சல்கள் கணிசமான அளவில் வேறுபட்டுக் காணப்படும் வேளைகளிலும் ஏற்பிசைவை நீக்குவதுடன், இத்தகைய வேளைகளில் மாற்றம் செய்யப்பட்ட நியதிகளின் அடிப்படையில் ஓர் புதிய நிதிப் பரிப்பு சீர்மதிப்பில் ஏற்பிசைவு செய்யப்படும்.

நிதிப் பரிப்பு ஒன்றின் ஏற்பிசைவு நீக்கலில், முடிவுறுத்தப்பட்ட கொண்டு செல்லல் பெறுமதி மற்றும் செலுத்தப்பட்ட கைமாற்றம் ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடானது (மாற்றப்பட்ட காசல்லாத சொத்துக்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிப்புக்கள் உள்ளடங்கலாக) இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**3.1.5.4 எதிர்த் தீர்த்தல்**

கம்பனி சட்டரீதியாக வலுமிக்கதாக்கத்தக்க உரிமையினைக் கொண்டுள்ளதுடன், அவற்றை நிகர அடிப்படையில் தீர்க்கவோ அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களைத் தேறலடையச் செய்து பரிப்புக்களைச் செலுத்துவதற்கோ விருப்பத்தினைக் கொண்டுள்ள போது மாத்திரமே நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பரிப்புக்கள் எதிர்த் தீர்க்கப்படும்.

**3.1.5.5 சேத இழப்பு / நிதிச் செத்துக்கள்**

**உய்த்தறியா நிதிச் சொத்துக்கள்**

01 சனவரி 2018 முதல் பிரயோகிக்கத்தக்க கொள்கைகள்

**3.1.5.5.1 நிதிச் சாதனங்கள் மற்றும் ஒப்பந்த சொத்துக்கள்**

வியாபார வருமதிகளுக்கான இழப்பு ஒதுக்குதொகைகள் வாழ்நாள் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பிற்கு சமமான தொகையிலேயே எப்போதுமே அளவிடப்படும்.

நிதிச் சொத்து ஒன்றின் கடன் இழப்பானது ஆரம்ப ஏற்பசைவில் இருந்து கணிசமாக அதிகரித்துள்ளதா என்பதைத் தீர்மானிக்கும் போதும், எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பைத் தீர்மானிக்கும் போதும் கம்பனி தேவையற்ற கிரயங்கள் இன்றிக் கிடைக்கத்தக்கதாகவுள்ளதும் பொருத்தமானதுமான நியாயமான மற்றும் ஆதரவு வழங்கத்தக்க தகவல்களைக் கருத்தில் கொள்ளும். இது கம்பனியின் வரலாற்றுத் தகவல் அடிப்படையிலான மற்றும் முன்னோக்கிய தகவல்கள் உள்ளடங்கலான கடன் மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த அளவுரீதியான மற்றும் பண்புரீதியான பகுப்பாய்வுகளை உள்ளடக்கும். நிதிச் சொத்து ஒன்று 365 நாட்களுக்கு மேற்பட்டதாகக் காணப்படின், கடன் இடர் கணிசமாக அதிகரித்து உள்ளதாகக் கம்பனி அனுமானம் மேற்கொள்ளும்.

நிதிச் சொத்தானது தவறுகையானதாகப் பின்வரும் சந்தர்ப்பங்களில் கம்பனி கருதிக் கொள்ளும்:

- கம்பனியாகவே பிணைச் சொத்தை (ஏதேனும் வைத்திருக்கப்பட்டால்) தேறலடையச் செய்தல் முதலிய மாற்று வசூலிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, கடன்படுனர் கம்பனிக்கான தமது கடன் கடப்பாட்டை முழுமையாக தீர்ப்பதற்கான சாத்தியம் தென்படாமை, அல்லது
- வாழ்நாள் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பானது நிதிச் சாதனம் ஒன்றின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலமீறான அனைத்து சாத்தியமான தவறுகை நிகழ்வுகளினதும் விளைவான எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பாக இருத்தல்.

12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பானது அறிக்கையிடல் திகதியின் பின்னான 12 மாத காலத்தினுள் (அல்லது சாதனத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் 12 மாதங்களை விடக் குறைவாயிருப்பின், அத்தகைய குறைந்த காலப்பகுதி) சாத்தியமான தவறுகை நிகழ்வுகளிலிருந்து விளைவாகும் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்களின் பகுதியாகும்.

எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பை மதிப்பிடுவதில் கருத்தில் கொள்ளப்படும் உயர்ந்தபட்சக் காலப்பகுதியானது கம்பனியானது கடன் இழப்புக்கு உட்பட்டதாக அமையும் உயர்ந்தபட்ச ஒப்பந்தக் காலப்பகுதியாகும்.

**3.1.5.5.2 எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பின் அளவீடு**

எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பானது கடன் இழப்புக்களின் நிகழ்தகவு நிறையேற்றப்பட்ட மதிப்பீடாகும். கடன் இழப்புக்கள் அனைத்துக் காசுப் பற்றாக்குறைகளதும் நிகழ்காலப் பெறுமதியில் அளவிடப்படும் (அதாவது, ஒப்பந்தத்தின் படியாக உரிமத்துக்குக் கிடைக்கத் தக்கதாகவுள்ள காசுப் பாய்ச்சல்களுக்கும் கம்பனி பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் காசுப் பாய்ச்சல்களுக்கும் இடையிலான வேறுபாடாகும்).

எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்கள் நிதிச் சொத்தின் விளைவுள்ள வட்டி வீதத்தில் கழிவீடு செய்யப்படும்.

**3.1.5.5.3 கடன் சேத இழப்பு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்**

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும், கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கொண்டு செல்லப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடான சீர்மதிப்பிலான கடன் பிணையங்கள் ஆகியன கடன் சேத இழப்பு செய்யப்படும். நிதிச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களின் மீது ஒரு பாதக விளைவுள்ள தாக்கத்தினைக் கொண்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெற்றிருப்பின், நிதிச் சொத்து ஒன்று கடன் சேத இழப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

நிதிச் சொத்து ஒன்று கடன் சேத இழப்பு அடைந்துள்ளது என்பதற்கான சான்றுகள் பின்வரும் அவதானிக்கத்தக்க தரவுகளை உள்ளடக்கும்:

- கடன்படுனர் அல்லது வழங்குனரது கணிசமான நிதிசார் சிக்கல்நிலை
- தவறுகை அல்லது 180 நாட்கள் கடந்திருத்தல் முதலிய ஒப்பந்த முறிவு

- கம்பனி வேறு வழிகளில் கருத்தில் எடுக்க முடியாத காரணத்தினால் கம்பனியினால் கடன் அல்லது முற்பணம் மீள்கட்டமைக்கப்படுதல்
- கடன்படுனா் முறிவடைநிலை அல்லது நிதிசாா் மீளொழுங்கமைத்தல் ஏற்பாடு ஒன்றுக்கு வரவர சாத்தியமாயிருத்தல், அல்லது
- நிதிசாா் இடா்பாடுகள் காரணமாக பிணையத்துக்கான உத்வேகம் மிக்க சந்தை தோற்றமற்றுப் போதல்

**3.1.5.5.4 நிதிநிலைமைக் கூற்றில் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்கான ஒதுக்குதொகையை முன்னிலைப்படுத்தல்**

நிதிச் சொத்துக்களுக்கான இழப்பு ஒதுக்குதொகையானது கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படுவதுடன், சொத்தினது மொத்த கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்து கழிக்கப்படும்.

**3.1.5.5.5 பதிவழித்தல்**

கம்பனியானது நிதிச் சொத்தினை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ மீளப் பெறுவதற்கான நியாயமான எதிா்பாா்ப்புக்களைக் கொண்டிராத போது நிதிச் சொத்தின் மொத்தக் கொண்டு செல்லல் பெறுமதியானது பதிவழிக்கப்படும். தனிநபரான வாடிக்கையாளா்களைப் பொறுத்தவரையில், நிதிச் சொத்து 180 நாட்களுக்கு மேற்பட்டதாயின், ஒத்த சொத்துக்களின் மீளப்பெறுகையின் வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் அவா்களது மொத்தக் கொண்டு செல்லும் பெறுமதியைப் பதிவழிப்பு செய்யும் கொள்கையினைக் கம்பனி கொண்டுள்ளது. நிறுவன ரீதியான வாடிக்கையாளா்களுக்கு, மீளப் பெறுவதற்கான நியாயமான எதிா்பாா்ப்பு உள்ளதா என்பதன் அடிப்படையில் பதிவழிப்பின் காலப்பகுதி மற்றும் தொகை ஆகியன தொடா்பான மதிப்பீடு ஒன்றை தனித்தனியாக மேற்கொள்ளும். புதிவழிக்கப்பட்ட தொகையிலிருந்து கணிசமான மீளப்பெறலைக் கம்பனி எதிா்பாா்கவில்லை. எனினும், பதிவழிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் கம்பனியின் வருமதியாகவுள்ள தொகைகளை மீளப்பெறுவதற்கான படிமுறைகளுக்கு இணக்கமாக, இன்னமும் சேகரித்தலுக்கான வலுவுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படத் தக்கவையாகும்.

சேத இழப்புக் கொள்கை - 01 சனவரி 2018க்கு முன்னா் பிரயோகிக்கத்தக்கவை
நிதிச் சொத்துக்கள் (வருமதிகள் உள்ளடங்கலாக)

இலாப நட்டங்கள் ஊடான சீா்மதிப்பில் கொண்டு செல்லப்படாத நிதிச் சொத்துக்கள் அவை சேத இழப்புக்கு உட்பட்டிருப்பதற்கான தலையீடற்ற சான்றுகள் காணப்படுகின்றனவா என்பதைத் தீா்மானிப்பதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மதிப்பிடப்படும். ஆரம்ப ஏற்பிசைவின் பின் தலையீடற்ற சான்றுகள் இழப்பு நிகழ்வு ஒன்று ஏற்பட்டிருப்பதைக் குறிகாட்ட, அந்த இழப்பு நிகழ்வானது நம்பகமான முறையில் மதிப்பிடத்தக்க அச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிா்பாா்க்கப்பட்ட காசுப் பாய்ச்சல்களில் ஓா் எதிா்க்கணிய விளைவைக் கொண்டுள்ள போது அந்த நிதிச் சொத்து சேத இழப்புக்கு உட்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

நிதிச் சொத்துக்கள் (உரிமையாண்மைப் பிணையங்கள் உள்ளடங்கலான) சேத இழப்பு அடைந்துள்ளன என்பதற்கான தலையீடற்ற சான்றுகளானவை கடன் பட்டோா் ஒருவராலான தவறுகை அல்லது ஒப்பந்த மீறல், கம்பனி வேறு வழிமுறைகளைக் கருத்தில் கொள்ள முடியாததன் விளைவான கம்பனிக்கு வருமதியாகவுள்ள தொகை ஒன்றின் மீள்கட்டமைத்தல், கடன்படுனா் அல்லது வழங்குனா் முறிவடைநிலைக்கு செல்வதற்கான குறிகாட்டிகள் அல்லது பிணையத்துக்கான உத்வேகம் மிக்க சந்தை ஒன்றின் தோற்றம் அற்றுப் போதல் முதலிய குறிகாட்டிகளை உள்ளக்கும். மேலும், உரிமையாண்மை சாதனம் ஒன்றின் மீதான முதலீடு ஒன்றுக்கு, அதன் கிரயத்துக்கும் குறைவான சீா்மதிப்பின் கணிசமான நீண்டகால வீழ்ச்சியானது சேத இழப்புக்கான ஓா் தலையீடற்ற சான்றாக அமையும்.

கம்பனியானது குறிப்பிட்ட சொத்துக்கள் மீதான மற்றும் ஒட்டுமொத்த மட்டத்திலான இரு சூழ்நிலைகளிலுமே வருமதிகளுக்கான சேத இழப்பிற்கான சான்றுகளைக் கருத்தில் கொள்ளும். தனித்தனியான வகையில் முக்கியத்துவம் மிக்க அனைத்து வருமதிகளும் பிரத்தியேகமான சேத இழப்பு மதிப்பீட்டுக்கு உட்படும். தனித்தனியான வகையில் முக்கியத்துவம் மிக்க அனைத்து வருமதிகளும் பிரத்தியேகமான முறையில் சேத இழப்பு செய்யப்படவில்லை எனக் கண்டறியப்பட்டால், ஏற்பட்டிருக்கக்கூடிய ஆனால் இன்னமும் அடையாளம் காணப்படாத சேத இழப்புக்களுக்காக ஒன்றிணைந்த வகையில் மதிப்பிடப்படும். தனித்தனியான வகையில் முக்கியத்துவமற்ற வருமதிகள் சேத இழப்புக்காக ஒத்த இடா்களைக் கொண்ட வருமதிகளைக் குழுவாக்கி ஒன்றிணைந்த வகையில் மதிப்பிடப்படும்.

ஒன்றிணைந்த வகையிலான சேத இழப்பை மதிப்பிடுவதில், கம்பனியானது தவறுகைக்கான நிகழ்தகவின் வரலாற்றுப் போக்குகள், மீளப்பெறலின் காலப்பகுதி மற்றும் வரலாற்றுப் போக்குகளால் பரிந்துரைக்கப்பட்ட இழப்புக்களை விட உண்மையான இழப்புக்கள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பதற்கான தற்போதைய பொருளாதார மற்றும் கடன் நிலைமைகள் தொடா்பான முகாமைத்துவத்தின் சுயதீா்ப்புக்கு சீராக்கப்பட்ட வகையிலான ஏற்பட்ட கடன் இழப்பின் தொகை ஆகியவற்றைப் பயன்படுத்தும்.

கடனழிவு செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்து தொடா்பான சேத இழப்பானது கொண்டு செல்லல் பெறுமதி மற்றும் அசல் விளைவுள்ள வட்டி வீதத்தினால் கழிவீடு செய்யப்பட்ட மதிப்பிடப்பட்ட எதிா்காலக் காசுப் பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதி ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடாகக் கணிப்பிடப்படும். இழப்புக்கள் இலாப

நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், வருமதிகளுக்கு எதிரான ஒதுக்குதொகைக் கணக்கில் பிரதிபலிக்கப்படும். சேத இழப்பு செய்யப்பட்ட சொத்தின் மீதான வட்டியானது தொடர்ந்தும் கழிவீட்டின் இழக்கப்படுத்தல் ஊடாக ஏற்பிசைவு செய்யப்படும். பிற்கால நிகழ்வு ஒன்று சேத இழப்பு நட்டத்தைக் குறைக்குமாயின், சேத இழப்பில் ஏற்பட்ட குறைவானது இலாபநட்டங்கள் ஊடாக மீளச் சீர்செய்யப்படும்.

**3.2.1. நிதி இடர் முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகள்**

வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் மற்றும் சென்மதி வருமான வரி ஆகியவையே நிறுவனத்தின் முக்கிய நிதிப் பரிப்புக்களாகும். இந் நிதிப் பரிப்புக்களின் முக்கிய நோக்கம் நிறுவனத்தின் செயற்பாட்டுக்கான நிதியிடல் ஆகும். நிறுவனமானது அரச வணிக முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள், வியாபார மற்றும் வருமதிகள் மற்றும் வியாபார நேரடியாக செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

எனவே நிறுவனம் நிதிச் சாதனங்களை பயன்படுத்தும் போது கடன் இடர்கள், திரவத்தன்மை இடர்கள், நாணயமாற்று இடர்கள் மற்றும் வட்டி வீத இடர்கள் ஆகியவற்றுக்கு முகங்கொடுக்கும்.

இக்குறிப்பு நிறுவனம் முகங்கொடுக்கும் இவ்வாறான இடர்கள் மற்றும் அவற்றை மதிப்பிட்டு முகாமை செய்வதற்கான நிறுவனத்தின் நோக்கங்களினாலும் கொள்கைகளையும் விளக்குகின்றன.

**3.2.1.1. கடன் இடர்**

கடன் கொடுக்கப்பட்டுள்ள வாடிக்கையாளரொருவர் அல்லது தொடர்புடைய ஒரு பிரிவினர் தமது ஒப்பந்தத்தை கட்டுறுப்புக்களை கடைப்பிடிக்கத் தவறும் போது நிறுவனத்திற்குக் கிடைக்க வேண்டியவை கிடைக்காமல் செல்வதால் ஏற்படும் நிதி நட்டமாவதுடன் முக்கியமாக இது நிறுவனத்தின் வாடிக்கையாளர்களிடம் இருந்தான வருமதி காரணமாக ஏற்படலாம்.

**3.2.1.2. திரவத்தன்மை இடர்**

திரவத்தன்மை இடர் என்பது நிறுவனம் காசு அல்லது மற்றொரு நிதிச் சொத்து மூலம் தீர்க்கப்பட வேண்டிய தனது நிதிப் பரிப்புகளுடன் தொடர்புடைய கடமைகளை சந்திப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளும் இடர் ஆகும்.

திரவத்தன்மையை நிர்வகிப்பதற்கான நிறுவனத்தின் அணுகுமுறையானது, இயல்பான மற்றும் கட்டாய நிலைமைகளின் கீழ், ஏற்றுக்கொள்ள முடியாத இழப்புக்கள் அல்லது நிறுவனத்தின் புகழை சேதப்படுத்தும் இடரின்றி, எப்போதுமே அதன் பரிப்புகளைத் தீர்க்க போதுமான திரவத்தன்மையைக் கொண்டு இருப்பதை உறுதி செய்வதாகும்.

**3.2.2. ஊழியர் நலன்கள்**

**(a) திட்டவட்டமான பங்களிப்பு திட்டங்கள் - சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி**

ஒரு திட்டவட்டமான பங்களிப்பு திட்டம் என்பது நிறுவனம் ஒரு குறிப்பிட்ட நிலையான பங்களிப்பை தனியானதொரு உரிமத்துக்கு செலுத்தி, மேலதிக தொகைகளை செலுத்துவதற்கான சட்டபூர்வமான அல்லது ஆக்கபூர்வமான கடமைகளைக் கொண்டிராத, வேலைவாய்ப்புக் காலத்துக்குப் பின்னான ஒரு பயன் திட்டமாகும், அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய சேமலாப மற்றும் நம்பிக்கை நிதியத்துக்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகளானவை, இலாப நட்டங்களில் ஒரு செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

நிறுவனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களின் திரண்ட சம்பளத்தில் 12% இனையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஊழியர்களின் திரண்ட சம்பளத்தில் 3மூ இனையும் பங்களிப்பு செய்கிறது.

**(b) திட்டவட்டமான பயன் திட்டங்கள்**

திட்டவட்டமான பயன் திட்டம் என்பது திட்டவட்டமான பங்களிப்பு திட்டம் தவிர்ந்த ஒரு வேலைவாய்ப்புக் காலத்தின் பின்னான பயன் திட்டமாகும். திட்டவட்டமான பயன் திட்டங்களின் கிரயம், புள்ளிவிபர மதிப்பீடுகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகிறது. புள்ளிவிபர மதிப்பீடுகளானவை கழிவிடல் வீதம், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள் மற்றும் ஊழியர் புரள்வு ஆகியன பற்றிய எடுகோள்களுடன் தொடர்புபடுகின்றது. இத்தகைய கடப்பாடுகளின் நீண்டகாலத்தன்மை காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டவை. மதிப்பீடுகளில் பயன்படுத்தப்படும் முக்கிய அனுமானங்களின் விவரங்கள் குறிப்பு 16 இல் உள்ளன.

இக் கடப்பாட்டின் பரிப்பானது இலங்கை வங்கியுடன் நிலையான வைப்புக்களில் வெளிவாரியாக நிதியிடப்பட்டுள்ளது.

## 3.3. பிற்போடப்பட்ட வருமானங்கள்

கொடைகள் மற்றும் மானியங்கள்

கொடைகள் கிடைக்கப்பெறும் என்பதுடன், அனைத்து இணைக்கப்பட்ட நிபந்தனைகளும் இணங்கப்படும் என்பதற்கான

நியாயமான உறுதிப்பாடு காணப்படும் போது அரச கொடைகள் ஏற்பிசைவு செய்யப்படும். கொடை ஒரு செலவினத்துடன் தொடா்புபடும் போது, அது கொடையினை அது ஈடு செய்ய எதிா்பாா்க்கப்படும் செலவினங்களுக்கு ஒரு முறையான அடிப்படையில் இணைக்கப்படுவதற்கு அவசியமான முறையில் அக் காலப்பகுதியிலேயே அது வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுகிறது. கொடை ஒரு சொத்துடன் தொடர்புபடும் போது, அது ஒரு பிற்போடப்பட்ட வருமானமாக ஏற்பிசைவு செய்யப்பட்டு, தொடர்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரு ஆயுட் காலத்தில் சமமான அளவில் தொகைகளில் வருமானமாக அனுமதிக்கப்படும்.

ஆதனம், பொறி, உபகரணங்கள் தொடா்புபட்ட கொடைகள் ஆரம்பத்தில் பிற்போடப்பட்டு, பயன்தரு ஆயுட் காலத்தில் ஒரு சீரான முறையில் பின்வருமாறு வருமானமாக அனுமதிக்கப்படுகிறது:

சொத்துக்கள் அவற்றின் பயன்தரு ஆயுள் அல்லது மீதமுள்ள குத்தகைக் காலங்கள் ஆகியவற்றில் குறைந்ததில் காலத் தேய்மானம் செய்யப்படுகின்றன.

| | |
|---|---|
| கட்டடங்கள் | 40 வருடங்கள் |
| நீர் வழங்கல் | 20 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10 வருடங்கள் |
| உபகரணங்கள் | 08 வருடங்கள் |

## 3.4. வருமானங்கள் மற்றும் செலவினங்கள்

வருமானக் கூற்றின் முன்னிலைப்படுத்தல் நோக்கத்திற்காக, நிறுவனத்தின் செயற்பாடுகளின் மூலகங்கள் தொடா்பாக நியாயான பிரதிநிதித்துவப்படுத்தலைக் காட்டும் செலவின முறைத் தொழின்முறை பயன்படுத்தப்படுகின்றது.

### 3.4.1. வருமான ஏற்பிசைவு

வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுமா? எவ்வளவு மற்றும் எப்போது என்பதைத் தீர்மானிப்பதற்கான முற்றடக்கமான சட்டகம் ஒன்றினை SLFRS 15 நியமம் வழங்குகிறது. இந் நியமம் LKAS 18 வருமானம், LKAS 11 நிா்மாண ஒப்பந்தங்கள் மற்றும் தொடா்புபட்ட வியாக்கியானங்களைப் பதிலீடு செய்துள்ளது. SLFRS 15 நியமத்தின் கீழ், வாடிக்கையாளா் பொருட்கள் அல்லது சேவைகளின் கட்டுப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளும் போதே வருமானம் ஏற்பிசைவு செய்யப்படும். கட்டுப்பாட்டின் மாற்றத்தின் நேரகாலத்தினைத் தீா்மானித்தல் - ஓர் குறித்தகாலப் புள்ளியிலா அல்லது காலப் பரப்பிலா என்பது சுயதீர்ப்பை மேற்கொள்ளத் தேவைப்படுத்தும்.

வருமானமானது வாடிக்கையாளா் ஒருவருடனான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கைமானத்தின் அடிப்படையில் அளவிடப்படும். கம்பனியானது வருமானத்தினை பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டுப்பாட்டினை வாடிக்கையாளருக்கு உரிமம் உரித்துள்ளதாக எதிா்பாா்க்கும் தொகையில் மாற்றும்போது ஏற்பிசைவு செய்யும். வருமானமானது மிகப் பிரதானமாக, தேங்காய் மற்றும் கொப்பரைகளின் விற்பனையினை உள்ளடக்கும்.

01 சனவரி 2018 முதல் விளைவுக்கு வந்துள்ள SLFRS 15 நியமத்தின்படி, வருமான ஏற்பிசைவுக்காக கம்பனி ஐந்து படிமுறை மாதிரி அடிப்படையிலான கோட்பாட்டினைப் பின்பற்றுகிறது. அதன்படியாக, பின்வரும் மூலப்பிரமாணங்கள் அனைத்துமே திருப்தி செய்யப்பட்டதும், வருமானமானது ஏற்பிசைவு செய்யப்படும்:

- ஒப்பந்தத்துக்கான தரப்புக்கள் ஒப்பந்தத்தினை அங்கீகரித்தல்
- மாற்றப்படவேண்டிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடா்பாக இரு தரப்பினதும் உரிமைகளை உரிமத்தினால் அடையாளம் காணத்தக்கதாக இருத்தல்
- மாற்றப்படவேண்டிய பொருட்கள் அல்லது சேவைகள் தொடா்பான கொடுப்பனவு நியதிகளை உரிமத்தினால் அடையாளம் காணத்தக்கதாக இருத்தல்
- ஒப்பந்தமானது ஓர் வாத்தக உட்பொருளைக் கொண்டிருத்தல்
- வாடிக்கையாளருக்கு மாற்றப்படவுள்ள பொருட்கள் அல்லது சேவைகளுக்கு மாற்றாக தமக்கு உரித்தாகவுள்ள கைமானத்தினை உரிமம் சேகரித்துக் கொள்வது நிகழ்தகவு மிக்கதாகக் காணப்படல்.

SLFRS 15 நியமத்தினைப் பிரயோகித்ததன் மூலமான விளைவினால் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் கணிசமான தாக்கங்கள் ஏற்படவில்லை.

a) **ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படி ஒன்றின் முடிவுறுத்தல் மூலமான ஆதாயங்கள் அல்லது இழப்புக்கள்** ஆகியன நிகர விற்பனை வருமானத்தினை ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டு செல்லல் பெறுமதியுடன் ஒப்பிடுவதன் மூலம் தீா்மானிக்கப் படுவதுடன், அவை நிதிக் கூற்றுக்களின் ''ஏனைய தொழிற்பாட்டு வருமானங்கள்'' பிரிவினுள் ஏற்பிசைவு செய்யப்படும்.

**b)** ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.4.2. செலவுகள்

வியாபாரங்களை நடாத்திச் செல்லும்போது ஏற்படும் எல்லா செலவினங்களும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனாகப் பராமரிப்பதற்கு ஏற்படும் அனைத்து செலவினங்களும் வருடத்தின் இலாப (நட்ட) கணிப்பீட்டின் போது வருமானத்திற்கு எதிராக அறவிடப்படும்.

## 3.5. வருமான வரி

வருமான வரியானது தற்போதைய வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி ஆகியவற்றை உள்ளடக்கும். உரிமையாண்மையில் நேரடியாக ஏற்பிசைவு செய்யப்படும் உருப்படி ஒன்று உரிமையாண்மையில் ஏற்பிசைவு செய்யப்படும் போது அதனுடன் தொடர்புடையது தவிர்ந்த அளவுக்கு வரிச் செலவுகள் இலாபநட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**(a) தற்போதைய வரி**

தற்போதைய வரி என்பது நடைமுறை வருடத்தின் வரி விதிக்கத்தகு வருமானத்தில், அறிக்கையிடல் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதத்தினைப் பயன்படுத்தி, முன்னைய ஆண்டுகளுக்காக வரிகள் தொடர்பான சீராக்கத்தையும் மேற்கொண்டு நடைமுறை ஆண்டில் செலுத்தத் தக்கதாக உள்ள வரியின் அளவு ஆகும்.

வருமான வரிக்கான ஏற்பாடானது நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட வருமான மற்றும் செலவின மூலகங்களின் அடிப்படையில் அமைந்ததாகவும், உள்நாட்டு இறைவரித் திணைக்களச் சட்டத்தின் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்பட்டதாகவும் காணப்படும்.

**(b) பிற்போடப்பட்ட வரி**

பிற்போடப்பட்ட வரியானது சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் தொடர்பான நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்கான கொண்டு செல்லல் பெறுமதி மற்றும் வரி நோக்கங்களுக்காக கொண்டு செல்லல் பெறுமதி ஆகியவற்றுக்கு இடையிலான தற்காலிக வேறுபாடுகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு, ஐந்தொகை முறையைப் பயன்படுத்தி ஏற்பிசைவு செய்யப்படும். பின்வரும் தற்காலிக வேறுபாடுகளுக்காகப் பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை: கணக்கியல் அல்லது வரியியல் இலாபத்தின் மீது எதுவித தாக்கத்தையும் கொண்டிருக்காத வணிக இணைப்பு அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றிலான சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் ஆரம்ப ஏற்பிசைவு மற்றும் கட்புலனாகக்கூடிய எதிர்காலத்தில் மீளப்பெறக்கூடியதல்லாத சாத்தியமான அளவுக்கு சேய்க் கம்பனிகளின் மீதான முதலீடுகள். மேலும், நன்மதிப்பின் ஆரம்ப ஏற்பிசைவில் ஏற்படும் வரிவிதிக்கத்தகு தற்காலிக மாற்றங்களுக்கு பிற்போடப்பட்ட வரி ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை. பிற்போடப்பட்ட வரியானது தற்காலிக வேறுபாடுகள் மீள்பெறுகையின் போது பிரயோகிக்கத்தக்கதான, அறிக்கையிடல் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது கணிசமான அளவில் சட்டமாகவுள்ள வரி வீதத்தின் அடிப்படையிலேயே கணிக்கப்படும். பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள், நடைமுறை வரிச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை எதிர்த் தீர்த்தல் செய்வதற்கான சட்டவலுத் தன்மையுள்ள உரிமை ஒன்று காணப்படுவதுடன் அவை அதே வகையான வரிவிதிப்பு அதிகாரசபையின் வரியாகவும் அதே காலத்துக்கானதாகவும் காணப்படுமிடத்து, எதிர்த் தீர்க்கப்படலாம்.

தற்காலிக வேறுபாட்டைப் பயன்படுத்தத்தக்க எதிர்கால வரிவிதிக்கத்தகு இலாபங்கள் காணப்படத்தக்க நிகழ்தகவின் அளவுக்கே பிற்போடப்பட்ட வரிச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படும். பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன், தொடர்புபட்ட வரிப் பயன் கிடைக்கத்தகாத நிகழ்தகவின் அளவினால் குறைக்கப்படும்.

சேய்க் கம்பனிகள் மற்றும் துணைக் கம்பனிகளின் பங்கிலாப வருமானத்தில் நிறுத்தி வைக்கப்படும் வரியானது ஒன்றித்த வருமானக் கூற்றில் செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், தொடர்புபட்ட பங்கிலாபங்களை செலுத்துதற்கான பரிப்பானது ஏற்பிசைவு செய்யப்படும்.

## 3.6. துறைசார் அறிக்கையிடல்

நிறுவனத்தின் வெவ்வேறு வியாபாரத் துறைகள் தொடர்பான தகவல்கள் துறைசார் அறிக்கையில் உள்ளடங்குகின்றது. தோட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள புவியியல் அமைப்புக்கள் பிரகாரம் வியாபாரத் துறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. துறைசார் செயற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 25.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. பெருந்தோட்டங்களின் புவியியல் ரீதியான அமைப்புக்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

| குழு 1 பெருந்தோட்டங்கள் | குழு 2 பெருந்தோட்டங்கள் |
|---|---|
| சிலாப பிரதேசம் | பிங்கிரிய பிரதேசம் |
| பளுகஸ்வெவ பெருந்தோட்டம் | திவுலபிட்டிய பிரதேசம் |
| தம்பபன்னி பிரதேசம் | மாதம்பை பிரதேசம் |

## 04. JEDB பெருந்தோட்டங்களின் வெற்றுக்காணிகளின் குத்தகை உரிமைகள்

அனைத்துப் பெருந்தோட்டங்களுக்குாக 53 வருட கால குத்தகைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ் அனைத்துக் குத்தகைகளும் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட தினமான 1992 ஜுன் 22 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்தப்படும். இவ்வனைத்து பெருந்தோட்டங்களுக்கும் உரித்தான காணி மீதான குத்தகையிலான உரிமையானது, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அவசிய விடய செயற்பாட்டுக் குழுவின் (UITF) இது தொடர்புபட்ட விதிமுறைகளுக்கு இணங்க, 1992 ஜுன் 22 அன்று நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட தினத்திலிருந்து உடனடியாகவே புத்தகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, 1995 மார்ச் 08 அன்று இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் இவ்வெற்றுக் காணிகளை, நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு முன்பாக திரு. டீ. ஆர் விக்ரமசிங்க வினால் மதிக்கப்பட்ட மதிப்பீடுகள் மீள்மதிப்பீடு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

1992 ஜுன் 22 அன்று இச்சொத்துக்கள் ஐந்தொகைக்கு கொண்டு செல்லப்பட்ட பின் 53 வருடங்களுக்கு சமமான அடிப்படையில் பெறுமான இழப்பு செய்யப்படுவதுடன், இவ் அறிக்கையிடப்பட்ட திகதியிலான எஞ்சியுள்ள குத்தகைக் காலம் 25.5 வருடங்களாகும்.

| | மொத்த கொண்டு செல்லும் பெறுமதி | |
|---|---|---|
| | 31.12.2019 இல் உள்ளவாறு ரூபா. | 31.12.2018 இல் உள்ளவாறு ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | 142,502,287 | 142,502,287 |

| | பெறுமான இழப்பு | | |
|---|---|---|---|
| | 31.12.2019 இல் உள்ளவாறு ரூபா. | ஆண்டுக்கான பெறு. இழப்பு ரூபா. | 31.12.2018 இல் உள்ளவாறு ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | 74,079,748 | 2,688,722 | 71,391,026 |

| | கொண்டு செல்லும் பெறுமதி | |
|---|---|---|
| | 31.12.2019 இல் உள்ளவாறு ரூபா. | 31.12.2018 இல் உள்ளவாறு ரூபா. |
| வெற்றுக்காணிகளின் மீதான குத்தகை உரிமை | 68,422,539 | 71,111,261 |

## 05. JEDB பெருந்தோட்டத்தின் குத்தகையில் பெற்ற அசையா சொத்துக்கள்

**(காணி மீதான குத்தகை உரிமை மற்றும் குத்தகையில் பெற்ற உயிரியல் ஆதனங்கள் தவிர)**

பெருந்தோட்டங்களின் தனியார் மயமாக்கல் காலப்பகுதியில் காணப்பட்ட, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் அவசிய விடய செயற்பாட்டுக் குழுவின் (UITF) விதிமுறைகளுக்கு இணங்க, இத்தோட்டங்களில் நிதிக்குத்தகையில் காணப்பட்ட அனைத்து அசையாச் சொத்துக்களும் 1992 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரத்தக்கவாறு முன்விளைவுள்ள வகையில் நிறுவனத்தின் ஏடுகளில் பதியப்பட்டது. இந்த நோக்கத்திற்காக, பணிப்பாளர் சபை 1995 மார்ச் 8 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில், நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாளின் அடுத்துவரும் தினத்தில் JEDB/SLSPC இன் ஏடுகளில் காணப்படும் புத்தகப் பெறுமதியிலேயே எடுக்கப்படுவதற்குத் தீர்மானம் மேற்கொண்டது. இச்சொத்துக்கள் 1992 ஜூன் 22 ஆம் திகதி ஐந்தொகைக்கு கொண்டுவரப்பட்டதுடன், 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான அசையாத பெருந்தோட்டச் சொத்துக்களின் பெறுமான இழப்புக்கான ஏற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| மதிப்பீட்டில் | காணி மீதான அபிவிருத்தி ரூபா. | ஏனைய சொந்தமான சொத்துக்கள் ரூபா. | கட்டடங்கள் ரூபா. | இயந்திரங்கள் ரூபா. | நீர் வழங்கள் ரூபா. | 2019 ரூபா. | 2018 ரூபா. |
|---|---|---|---|---|---|---|---|
| மூலதனமாக்கப்பட்ட பெறுமதி | 841,193 | 1,002,944 | 25,356,498 | 530 | 4,026,236 | 31,227,401 | 31,227,401 |
| **பெறுமான இழப்பு** | | | | | | | |
| ஜனவரி 01 அன்று | 63,482 | 887,004 | 25,356,498 | 530 | 4,026,236 | 30,333,749 | 30,266,897 |
| ஆண்டுக்கான பெறுமான இழப்பு | 2,390 | 33,397 | | - | - | 35,787 | 66,853 |
| டிசம்பர் 31 அன்று | 65,872 | 920,401 | 25,356,498 | 530 | 4,026,236 | 30,369,536 | 30,333,749 |
| **கொண்டு செல்லும் பெறுமதி** | **775,321** | **82,543** | - | - | - | **857,864** | **893,651** |

## 06. JEDB பெருந்தோட்டங்களின் குத்தகைக்குப் பெறப்பட்ட உயிரியல் சொத்துக்கள்

| மீள்மதிப்பீடு | 2019 ரூபா. | 2018 ரூபா. |
|---|---|---|
| முதிர்வுற்ற பயிர்ச்செய்கை | 81,527,221 | 82,532,211 |
| அகற்றல்களின் சீராக்கங்கள் | (997,282) | (1,004,990) |
| | **80,529,939** | **81,527,221** |
| ஜனவரி 01 அன்று | 60,349,138 | 58,487,669 |
| ஆண்டுக்கான பெறுமான இழப்பு | 2,714,856 | 2,748,323 |
| அகற்றல்களின் சீராக்கங்கள் | (908,367) | (886,853) |
| டிசம்பர் 31 அன்று | **62,155,627** | **60,349,138** |
| கொண்டு செல்லும் பெறுமதி | **18,374,312** | **21,178,083** |

பெருந்தோட்டக் குத்தகைகளாக நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போது காணப்பட்ட முதிர்வுறாத பயிர்கள் மீதான முதலீடுகள் (1992 ஜூன் 22 இல் உள்ளவாறாக மீள்மதிப்பிடப்பட்டு) முதிர்வுறாத பயிர்களாக காட்டப்பட்டுள்ளதுடன், அறிக்கையிடப்படும் தினத்தில் அவை அனைத்தும் முதிர்வுற்ற பயிர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. மேலும், நிறுவனத்தினால் முதிர்வுற்ற மற்றும் முதிர்வுறாத பயிர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் தனித்தனியாக, குறிப்பு இலக்கம் 7.1 குத்தகை கொள்ளப்பட்ட ஆதனம் மீதான விருத்திகள் இல் (முதிர்வுற்ற∴முதிர்வுறாத பயிர்கள்) காட்டப்பட்டுள்ளன. இம் முதிர்வுற்ற∴முதிர்வுறாத பயிர்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 41 "விவசாயம்" இன் கீழ் குத்தகையிலான உயிரியல் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 07. உயிரியல் சொத்துக்கள்

### 7.1 குத்தகை சொத்துக்களுக்கான விருத்தி (உயிரியல் சொத்துக்கள்)

| கிரயம் | முதிர்வுறாத பயிர்ச்செய்கை ரூபா. | முதிர்வுற்ற பயிர்ச்செய்கை | | | 2019 ரூபா. | 2018 ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| | | தென்னை ரூபா. | மர முந்திரிகை ரூபா. | ஏனையவை ரூபா. | | |
| வருட ஆரம்பத்தில் உள்ளவாறு: | 480,917,631 | 344,742,382 | 87,056,399 | 6,658,115 | 919,374,527 | 839,388,467 |
| சேர்ப்பனவுகள் | 60,580,869 | - | - | | 60,580,869 | 79,986,060 |
| முதிர்வுறாதவைகளிலிருந்து மாற்றல் | | 98,245,595 | - | 759,697 | 99,005,292 | 78,959,644 |
| முதிர்வுற்றவைகளுக்கு மாற்றல் | (99,005,292) | - | - | - | (99,005,292) | (78,959,644) |
| பதிவழிப்பு செய்யப்பட்ட மீதி | - | - | - | - | - | - |
| வருட இறுதியில் உள்ளவாறு: | **442,493,208** | **442,987,977** | **87,056,399** | **7,417,812** | **979,955,396** | **919,374,527** |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| வருட ஆரம்பத்தில் உள்ளவாறு: | | 35,812,666 | 33,550,836 | 1,086,945 | 70,450,448 | 61,345,593 |
| ஆண்டுக்கான தேய்மானம் | | 6,894,845 | 3,482,255 | 332,905 | 10,710,005 | 9,104,855 |
| வருட இறுதியில் உள்ளவாறு: | | **42,707,511** | **37,033,091** | **1,419,850** | **81,160,453** | **70,450,448** |
| கொண்டு செல்லல் பெறுமதி | **442,493,208** | **400,280,465** | **50,023,307** | **5,997,962** | **898,794,943** | **848,924,079** |

**குறிப்பு :**

இவை நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்துவரும் முதிர்வுறாத மற்றும் முதிர்வுற்ற பெருந்தோட்ட பயிர்கள் மீதான முதலீடுகள் ஆகும். பெருந்தோட்டக் குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் (பெருந்தோட்டப் பயிர்கள் உட்பட) நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 4, 5 மற்றும் 6 இல் காட்டப்பட்டுள்ளன. மேலும் குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தப்பட்ட முதிர்வுறாத பயிர்ச்செய்கைகளின் மீதான முதலீடுகள் இக் குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறான பயிர்கள் முதிர்வுறும் போது, முதிர்வுற்ற நிலைமைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட மேலதிக முதலீடு இக்குறிப்பின் பிரகாரம் முதிர்வுராதவற்றில் இருந்து முதிர்வுற்ற பிரிவிற்கு மாற்றப்படும். இதேபோன்றதோர் குறிப்பு 6 இன் பிரகாரம் JEDB/SLSPC இனால் பொறுப்பேற்கப்பட்ட, இதே பெருந்தோட்டம் மீதான குத்தகைக்கு முன்னரான முதலீட்டின் முதிர்வுறாதவைகளிலிருந்து முதிர்வுற்றவைகளுக்கான மாற்றம் குறிப்பு இலக்கம் 6 இன் கீழ் செய்யப்படும்.

இலங்கைக் கணக்கீட்டு நியமம் 41 இன் கீழான, உயிரியல் சொத்துக்களை அவற்றின் சீர்மதிப்பில் விற்பனைக்கான கிரயத்தைக் குறைத்த பெறுமதியில் ஏற்பிசைவு செய்வதற்கான தேவைப்பாடானது, 2012 மார்ச் 02 ஆம் திகதி இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட விதிமுறையினால் வலுவிழக்க செய்யப்பட்டுள்ளது. அதன்படியாக, நிறுவனம் குத்தகையிலான உயிரியல் சொத்துக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16 ஆதனம், பொறி, உபகரணங்கள் நியமத்தைப் பயன்படுத்தி அளவிடத் தெரிவு செய்துள்ளது.

பயிரிடுகை செலவுகளுக்கு நிதியீட்டம் செய்வதற்கு பிரத்தியேகமான கடன்கள் பெறப்படவில்லை. ஆகையால், 2019 ஆண்டு காலத்தில் முதிர்வுறாத பயிர்களின் கீழ் கடன்படுகைக் கிரயங்கள் மூலதனமாக்கல் செய்யப்படவில்லை.

### 7.2 உயிரியல் சொத்துக்கள் - கால்நடைகள்

| | | 2019 ரூபா. | 2018 ரூபா. |
|---|---|---|---|
| பாற்பண்ணை கால்நடைகள் | **07.2.1** | 8,188,790 | 8,066,800 |
| ஏனைய கால்நடைகள் | **07.2.2** | 7,216,710 | 10,628,152 |
| | | **15,405,500** | **18,694,952** |

### 7.2.1 பாற்பன்னை கால்நடைகள்

| | முதிர்வுறாத பசுக்கள்(கன்றுகள் ∴ கன்னிப்பசுக்கள்) ரூபா. | முதிர்வுற்ற பசுக்கள் (பால் தரும் / தராத) ரூபா. | 2019 ரூபா. | 2018 ரூபா. |
|---|---|---|---|---|
| ஜனவரி 01 அன்று உள்ளவாறாக | 283,180 | 7,783,620 | 8,066,800 | 10,929,500 |
| ஆண்டுக்கான சேர்ப்பனவுகள் | 153,400 | | 153,400 | 108,000 |
| சீமதிப்பில் ஆண்டுக்கான நலன் / (இழப்பு) | 501,350 | 481,191 | 982,541 | (266,200) |
| பௌதீக மாற்றங்களினாலான பெறுமதி அதிகரிப்பு / குறைவு | (12,770) | 346,480 | 333,710 | 579,100 |
| இறப்பு/விற்பனை | (22,600) | (1,325,061) | (1,347,661) | (3,283,600) |
| **டிசம்பர் 31 அன்று உள்ளவாறாக** | **902,560** | **7,286,230** | **8,188,790** | **8,066,800** |

பாற்பண்ணையில் உள்ள கால்நடைகள் அவற்றின் சீமதிப்பில் இருந்து விற்பனைக்கான கிரயங்கள் கழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும். கால்நடைகளின் சீமதிப்பானது தேசிய கால்நடை அபிவிருத்தி சபையனால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் படி நிர்ணயிக்கப்படும்.

### 7.2.2 ஏனைய கால்நடைகள் (உயிரியல் சொத்துக்கள்)

| | எருமை மாடுகள் ரூபா. | கரத்தை கட்டும் மாடுகள் ரூபா. | காளை மாடுகள் ரூபா. | ஆடுகள் ரூபா. | பசுக்கள் ரூபா. | 2019 ரூபா. | 2018 ரூபா. |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி 01 அன்று உள்ளவாறாக | 3,415,065 | 1,430,550 | 346,080 | 4,638,057 | 798,400 | 10,628,152 | 5,167,112 |
| ஆண்டுக்கான சேர்ப்பனவுகள் | 266,885 | | | 97,850 | 52,000 | 416,735 | 478,500 |
| உள் மற்றும் வெளி இடமாற்றம் | (231,315) | | 49,440 | | | (181,875) | 2,049,600 |
| இறப்பு/விற்பனை | (1,728,830) | (120,250) | (247,200) | (3,697,552) | (722,400) | (6,516,232) | (1,870,390) |
| சீமதிப்பில் ஆண்டுக்கான நலன் / (இழப்பு) | 2,014,095 | 361,060 | 37,980 | 412,995 | 43,800 | 2,869,930 | 4,803,330 |
| | **3,735,900** | **1,671,360** | **186,300** | **1,451,350** | **171,800** | **7,216,710** | **10,628,152** |

### 7.3 நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் - பலகை மர பயிர்ச்செய்கை

| | 2019 முதிர்வுறாத | 2019 முதிர்வுற்ற | 2019 மொத்தம் | 2018 முதிர்வுறாத | 2018 முதிர்வுற்ற | 2018 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி 01 அன்று உள்ளவாறான மீதி | 2,857,785 | 54,987,875 | 57,845,660 | 2,806,051 | 51,716,391 | 54,522,442 |
| அபிவிருத்தி / முதலீடு மூலமான அதிகரிப்பு | - | | - | 51,734 | | 51,734 |
| சீமதிப்பில் விற்பனைக் கிரயம் கழித்த பெறுமதி மாற்றம் மூலமான இலாபம் (நட்டம்) | | 35,256,574 | 35,256,574 | | 13,070,485 | 13,070,485 |
| அறுவடை காரணமான குறைவு | | (3,271,750) | (3,271,750) | | (9,799,000) | (9,799,000) |
| டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி | **2,857,785** | **86,972,699** | **89,830,484** | **2,857,785** | **54,987,875** | **57,845,660** |

நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் என்பது பெருந்தோட்டங்களில் வளரும் பலகைக்கான மரங்களை உள்ளடக்கும். முதிர்ச்சி அடையாத மரங்களின் கிரயமானது, அண்ணளவான சீமதிப்பாகக் கொள்ளப்படுகிறது. மிகக் குறிப்பாக, நிலத்தில் சிறிய உயிரியல் மாற்றம் ஏற்பட்டு, அவ் உயிரியல் மாற்றத்தின் விலை மீதான தாக்கமானது பொருண்மையற்றதாக உள்ள போது இவ்வாறு கொள்ளப்படும்.

மதிப்பீடானது இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இணைப்பாளர் திரு ஏ.ஏ.எம் பாதிற் முத்தலிப் இனால், கழிவிட்ட காசுப்பாய்ச்சல் (DCF) முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மரங்களின் சீமதிப்பை அளவிடுவதற்காக அனைத்து தோட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

**மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்கள்**

1. அரச மரக் கூட்டுத்தாபனத்தின், அரியப்பட்ட மரங்களுக்கான விலைப் பட்டியலை அடிப்படையாக கொள்ளல்
2. பின்பற்றப்பட்ட விலைகள், செலவுகள் கழிக்கப்பட்ட பின்னரான நிகர விலை ஆகும்.
3. கழிவுக் காரணி வீதம் - அறுவடைக்கான வயது 5 அல்லது 5 வருடங்களுக்கு கீழ 14%

   அறுவடைக்கான வயது 6-15 வருடங்கள் 15%

   அறுவடைக்கான வயது 15 வருடங்களுக்கு மேல் 16%
4. முதிர்வுக்கான காலம் 30 வருடங்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தேறிய நிகழ்காலப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு, வெளிவாரி மதிப்பீட்டு மாதிரிகளில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ள மதிப்பீடுகள், பலகை மரங்களின் நீண்ட கால சுரண்டல்களைக் கருத்தில் கொண்டு அமைந்துள்ளது. உயிரியல் சொத்துக்களின் சீர்மதிப்பிலான மதிப்பீட்டில் மாறிகளின் தளம்பல் தன்மையினால் காணப்படும் நிச்சமற்ற நிலைமை காரணமாக சீர்மதிப்பானது அவற்றின் தேறத்தக்க பெறுமதிகளில் இருந்து வேறுபடலாம். பணிப்பாளர் சபையானது பண்ட சந்தைகள் பெரிதும் தளம்பல்களுக்கு உள்ளாவதால் நீண்ட கால விலை முற்துணிவுகள் பெருமளவுக்கு எதிர்வுகூற முடியாதவையாக இருக்கும் என்னும் கருத்தைக் கொண்டுள்ளனர்.

பலகை மரங்கள் தொடர்பாக, நிறுவனமானது பின்வரும் இடர்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

**விதிமுறைசார் மற்றும் சுற்றுச்சூழல் இடர்**

நிறுவனமானது இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுக் காணப்படுகிறது. தேசிய சுற்றாடல் மற்றும் ஏனைய சட்ட திட்டங்களுக்கு இணங்கி செயற்படும் நோக்கில், சுற்றுச்சூழல் தொடர்பான கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை உருவாக்கியுள்ளது. முகாமைத்துவமானது சுற்றுச்சூழல் இடர்களை இணங்கண்டு, நிறுவனத்தில் காணப்படும் முறைமைகள் அவற்றை சரியான வகையில் முகாமை செய்வதற்குப் போதியதாக உள்ளனவா என்பதை உறுதி செய்யும் நோக்கில் கிரமமான மீளாய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

**கேள்வி மற்றும் நிரம்பல் இடர்**

நிறுவனம் மரங்களின் விலை மற்றும் விற்பனை அளவுகள் என்பவற்றின் தளம்பல்களால் ஏற்படும் இடருக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ளது. நிறுவனமானது சாத்தியமா போது சந்தையில் காணப்படுகின்ற கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளுக்கு ஏற்ப அறுவடைகளை சீராக்குவதன் மூலம் இந்த இடரைக் கையாளும். முகாமைத்துவம் கிரமமான முறையில் தொழில்துறையின் போக்கினை ஆய்வு செய்வதன் மூலம் நிறுவனத்தின் விலையிடல் கட்டமைப்பு சந்தையுடன் ஒத்துப்போகின்றதா என்பதையும் திட்டமிடப்பட்ட அறுவடை அளவுகள் எதிர்ப்பார்க்கப்பட்ட கேள்வி நிலைமைக்கு ஸ்திரமானதாக உள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்கின்றது.

**காலநிலை மற்றும் ஏனைய இடர்கள்**

நிறுவனத்தின் பலகை மரங்கள் காலநிலை மாற்றங்கள், நோய்கள், காட்டுத்தீ மற்றும் ஏனைய இயற்கைக் காரணிகள் முதலான இடர்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

## 8. குத்தகையில்லா ஆதனம், பொறி, உபகரணங்கள்

| | கட்டடங்கள் ரூபா | பொறி இயந்திரங்கள் ரூபா | மோட்டார் வாகனங்கள் ரூபா | உபகரணங்கள் ரூபா | தளபாடங்களும் பொருத்துக்களும் ரூபா | வேலியமைப்பு ரூபா | நீர் வழுங்கல் ரூபா | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம் / மதிப்பீடு** | | | | | | | | | |
| ஜனவரி 01 அன்று | 50,221,405 | 7,839,761 | 160,374,028 | 52,052,424 | 10,739,822 | 23,924,265 | 10,299,673 | 315,451,378 | 302,574,753 |
| சேர்க்கைகள் | 91,400 | - | 476,288 | 477,615 | 113,318 | 1,249,388 | 285,407 | 2,693,415 | 12,876,625 |
| மாற்றல்/அகற்றல் | - | - | (1,735,380) | - | - | - | - | (1,735,380) | - |
| டிசம்பர் 31 அன்று | 50,312,805 | 7,839,761 | 159,114,936 | 52,530,039 | 10,853,139 | 25,173,653 | 10,585,080 | **316,409,413** | **315,451,378** |
| **பெறுமானத் தேய்வு** | | | | | | | | | |
| ஜனவரி 01 அன்று | 9,812,292 | 3,047,569 | 146,249,144 | 36,833,998 | 8,037,484 | 12,101,618 | 4,528,022 | 220,610,127 | 198,187,754 |
| ஆண்டுக்கான தேய்வு | 1,266,415 | 489,562 | 5,042,724 | 2,938,901 | 590,901 | 6,208,089 | 438,867 | 16,975,459 | 19,570,932 |
| மாற்றல்/அகற்றல் | - | - | (1,724,115) | - | - | - | - | (1,724,115) | - |
| முன்னைய ஆண்டு சீராக்கம் | | | | | | | | - | 2,851,440 |
| டிசம்பர் 31 அன்று | 11,078,707 | 3,537,131 | 149,567,753 | 39,772,899 | 8,628,386 | 18,309,707 | 4,966,889 | **235,861,471** | **220,610,127** |
| **தேறிய பெறுமதி** | | | | | | | | **80,547,942** | **94,841,251** |
| **மூலதனக் குறைவேலை இருப்புக்கள்** | | | | | | | | | |
| ஜனவரி 01 அன்று | | | | | | | | 505,302 | 1,851,264 |
| ஆண்டுக்காலத்திலான சேர்ப்பனவுகள் | | | | | | | | 122,041 | 505,302 |
| ஆண்டுக் காலத்தில் மூலதனமாக்கப்பட்டு மாற்றப்பட்டவை | | | | | | | | 505,302 | 1,851,264 |
| டிசம்பர் 31 அன்று | | | | | | | | **122,041** | **505,302** |
| **கொண்டு செல்லல் பெறுமதி** | | | | | | | | **80,669,983** | **95,346,553** |

**குறிப்பு**

மேலே காட்டப்பட்ட சொத்துக்கள், நிறுவனம் ஆரம்பித்த தினமான 22.06.1992 அன்று வர்த்தமானி அறிவித்தலின் படி பொறுப்பேற்ற அசையும் சொத்துக்கள் மற்றும் நிறுவனத்தினால் அதன் உருவாக்கத்தின் போது முதலிடப்பட்ட அனைத்து உருவமுள்ள சொத்துக்கள் ஆகும். பெருந்தோட்டக் குத்தகைகளாகப் பெறப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விடயங்கள் குறிப்பு 4, 5 மற்றும் 6 இல் காட்டப்பட்டுள்ளன.

மேலும், நிதிக்குத்தகையின் கீழான JEDB / SLSPC தோட்டங்களின் அசையாச் சொத்துக்கள் (குத்தகையில் வைத்திருக்கப்படும் ஆதனங்கள் தவிர்ந்த) மற்றும் முதிர்ந்த அல்லது முதிர்வுறாத தோட்டங்கள் தவிர்ந்த 1992 ஜூன் 22 அன்று கையகப்படுத்தப்பட்ட உருவமுள்ள சொத்துக்களின் மதிப்பீடுகளானவை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபை ஆகியவற்றிலிருந்து அத் திகதியில் பெறப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையில் அமைந்துள்ளன. இந்த மதிப்பீடுகள் ஒவ்வொரு தனித்தனியான சொத்துக்களுக்குமாக எமக்கு வழங்கப்படவில்லை.

## 09. இருப்புக்கள்

| | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| உள்ளீட்டு மூலப்பொருட்கள் | 598,315 | 5,863,443 |
| வளரும் பயிர்கள் - நாற்றுக்கள் | 5,355,033 | 5,514,647 |
| அறுவடை செய்யப்பட்ட பயிர்கள் | 54,699,808 | 37,436,385 |
| நுகரத்தக்கவை மற்றும் உதிரிப் பாகங்கள் | 6,745,813 | 7,811,061 |
| | 67,398,969 | 56,625,536 |
| காலம் கடிந்த இருருப்புக்களுக்கான சேத இடிப்பு ஏற்பாடுகள் | (15,500) | (15,500) |
| | **67,383,469** | **56,610,036** |

## 10. வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்

| | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| உற்பத்திக் கடன்பட்டோர் | 29,619,393 | 16,355,130 |
| ஊழியர் கடன்பட்டோர் | 4,199,839 | 2,308,513 |
| ஏனைய கடன்பட்டோர் | 9,772,094 | 9,352,491 |
| தேங்காய்த் தும்பு செயற்திட்டம் | 13,325,233 | 13,325,233 |
| | 56,916,558 | 41,341,367 |
| தேங்காய்த் தும்பு செயற்திட்டத்திற்கான சேத இழப்பு ஏற்பாடுகள் | (13,325,233) | (13,325,233) |
| அறவிட முடியாக் கடன்களுக்கான சேத இழப்பு ஏற்பாடுகள் | (831,212) | (565,378) |
| | **42,760,113** | **27,450,756** |

## 11. அரச தொழில் முயற்சிகளுக்கான நிதி வசதிகள்

| | வழங்கப்பட்ட தொகை ரூபா | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **வருமதியாகவுள்ள கடன்** | | | |
| வரையறுக்கப்பட்ட எல்கடுவை பெருந்தோட்டக் கம்பனி | 20,000,000 | 23,519,452 | 23,519,452 |
| வரை. இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூ.தாபனம் | 10,000,000 | 10,000,000 | 10,000,000 |
| இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தானம் | 20,000,000 | 23,610,959 | 23,610,959 |
| பெருந்தோட்ட சொத்துக்கள் மற்றும் தொழில் முயற்சி அபி. அமைச்சு | 15,000,000 | 15,000,000 | 15,000,000 |
| ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை | 40,000,000 | 47,627,397 | 47,627,397 |
| | 105,000,000 | 119,757,808 | 119,757,808 |
| **கழி:** | | | |
| சேத இழப்பு நட்டம் | (105,000,000) | (119,757,808) | (119,757,808) |
| | - | - | - |

நிறுவனமானது 2010 இல் அரச நிறுவனங்களுக்கு ரூபா. 105 மில்லியன் தொகையான குறுங்கால நிதி வசதியினை வழங்கியுள்ளது. எனினும் 2014 டிசம்பர் 31 வரை இதனை உரிய தரப்பினரிடமிருந்து மீளப்பெற முடியாதிருந்துள்ளதுடன், இக் கடன்தொகை மற்றும் அதற்கான வட்டி உட்பட்ட தொகை ரூபா. 119,757,808 ஆக இருந்தது. குறித்த நிறுவனங்களிடம் இருந்து வசூலிக்க முடியாமல் இருக்கின்றது. வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது 2014 முடிவந்த ஆண்டுக்கான சேத இழப்புத் தொகைகளாக ஒரு முழுமையான ஏற்பாட்டை மேற்கொள்ளத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நிறுவனத்தினால் மேற்கூறப்பட்ட அரசாங்க நிறுவனங்களிடமிருந்து 2010 தொடக்கம் 2012 வரை வட்டி வருமானத்தை வசூலிக்க முடியாது போனமையைக் கருத்தில் கொண்டு, வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது 2013 ஆம் ஆண்டில் இருந்து வசூலிக்க முடியாத வட்டி வருமானத்தைக் கணக்குகளில் ஏற்பிசைவு செய்வதில்லை எனத் தீர்மானித்துள்ளது. எனினும் 2013 முதல் 2019 வரையான வட்டி வருமானத்தைக் கணக்குகளில் எடுத்துக் கொண்டால், வருமதியாகவுள்ள மொத்தக் கடன் தொகையானது, ரூபா.164,557,808.21 ஆக இருந்திருக்கும்.

| | |
|---|---|
| வரையறுக்கப்பட்ட எல்கடுவை பெருந்தோட்டக் கம்பனி | 34,719,452 |
| வரை. இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூ.தாபனம் | 10,000,000 |
| இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தானம் | 34,810,959 |
| பெருந்தோட்ட சொத்துக்கள் மற்றும் தொழில் முயற்சி அபி. அமைச்சு | 15,000,000 |
| ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை | 70,027,397 |
| | **164,557,808** |

## 11.1 ஏனைய நிதிச் சொத்துக்கள்

| | ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன் ரூபா. | முன் செலுத்திய ஊழியர் பயன்கள் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|
| 01.01.2018 அன்று மீதி | 10,774,697 | 1,345,014 | 12,119,711 |
| 2018 ஆண்டில் வழங்கப்பட்ட கடன் | 3,228,404 | 501,596 | 3,730,000 |
| 2018 ஆண்டில் மீளபெற்றுக்கொள்ளப்பட்ட கடன் | (4,521,199) | (759,011) | (5,280,210) |
| **31.12.2018 அன்று மீதி** | **9,481,902** | **1,087,598** | **10,569,501** |
| 2019 ஆண்டில் வழங்கப்பட்ட கடன் | 2,777,754 | 522,246 | 3,300,000 |
| 2019 ஆண்டில் மீளபெற்றுக்கொள்ளப்பட்ட கடன் | (3,766,745) | (633,280) | (4,400,025) |
| **31.12.2019 அன்று மீதி** | **8,492,911** | **976,564** | **9,469,475** |
| 31.12.2018 அன்று நடைமுறை அல்லாத மீதி | 6,319,409 | 544,935 | 6,864,344 |
| 31.12.2018 அன்று நடைமுறை மீதி | 3,162,493 | 542,663 | 3,705,156 |
| **31.12.2018 அன்று மீதி** | **9,481,902** | **1,087,598** | **10,569,501** |
| 31.12.2019 அன்று நடைமுறை அல்லாத மீதி | 5,387,194 | 494,142 | 5,881,336 |
| 31.12.2019 அன்று நடைமுறை மீதி | 3,105,717 | 482,422 | 3,588,140 |
| **31.12.2019 அன்று மீதி** | **8,492,911** | **976,564** | **9,469,476** |

